THE REGIONAL
Geography of the Madras Presidency

சென்னை இராஜதானி பூகோளம்

159

BY

T. T. SUNDARAM PILLAI, B. A., L. T.

Assistant, St. Francis Xavier's High School,

TUTICORIN

U.24

ACL-TNAL
00169

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 JUL 1933
MADRAS

பிரசுர கர்த்தர்:

A. V. D. பாக்கியம் பிள்ளை,

பப்ளிஷர் & புக்ஸெல்லர்,

தூத்துக்குடி.

பதிப்புரிமை] 1933 [விலை அணு 7

முகவுரை

நமது எலிமென்டரிப் பாடசாலை ஐந்தாம் வகுப்பு மாண வர்க்கென்று அதிகச் சிறந்த நன்முறையில் இயன்றுள்ள இப் பூகோள நூலை ஒருமுறை மேலோட்டமாகப் பார்ப்பாரும் இதன் பலவாகிய நல்லியல்களையெல்லாம் தெள்ளிதின் தெரிந் துணர்வர். மின்சாரச் சக்தியின் பல்வேறு உபயோகங்களா லும், மற்றும் பல நவீன யந்திரங்களினாலும், மக்களது பலவாகிய இயக்கங்களினாலும், உலகமெல்லாம் ஒன்றென இணைக்கப்படும் இக்காலத்தில், ஒருவன் தன் நாடு நகர்களின் அறிவுமில்லாதிருப்பானேல், அம்மம்ம! அது மிகவும் வருந்து தற்பாலதே!

வியாபாரம் ஏனைய ஜாதிப் பழக்க வழக்கங்களை மேற் கோடல், அந்நிய நாட்டு வாசம் ஆதி இன்னோரன்ன செயல் கள் உலக மக்களுக்கெல்லாம் பொதுவாக நடைபெற்று வரு மிக்காலத்தில், பூகோள சாஸ்திரப் படிப்பு எத்துணை அவசியம் என்பதை மெத்தவும் நீட்டி உரைக்கத் தேவை யில்லை. தேசப் பிரயாணங்கள் செய்தற்கும், மக்களது குணங் குறிகளையும் பழக்க வழக்கங்களையும் காரணத்தோடு அறிந்து அவர்களோடு உறவாடி மகிழற்கும், அந்நிய நாட்டு வாசமும் வியாபாரமும் செய்தற்கும், பூகோள சாஸ்திர அறிவே ஊன்றுகோற் போலாவது என்பது அறிஞர் கொள்கை. ஆதலின் இவ்வறிவு எத்தகைய சிறந்த முறையில் மாணவர்க்கு அளிக்கப்படுமோ அத்தகைய சிறந்த முறையில் நமது நாடு முன்னேற்றமடையும் என்பது கூறாமலே விளங்கும்.

பண்டைக் காலத்தில் நெட்டுருப் பண்ணும் முறையில் பூகோள அறிவைப் பலரும் மாணவர்க்குப் புகட்டினர் என்பது மிகையாகாது. இளைஞர் ஒவ்வொரு தேசத்தின் விளைவு பொருள்களையும், சீதோஷ்ண விசேடங்களையும் காரணகாரியந் தெரியாது நெட்டுருச் செய்து கொண்டதை யாம் பார்த்திருக்கின்றோம். ஒவ்வொரு நாட்டின் இயற்கை அமைப்புகளையும் காரணகாரியங்களோடு காட்டி அறிவைத் தூண்டும் பல்வேறு வினாக்களை எழுப்பி, சமீபத்திலிருந்து தூர இடங்களைப் பற்றிய விசேடங்களை அம்முறையில் தெரிவித்தல் ஆயின் மாணவர்தம் பழைய அறிவோடு சம்பந்தப்படும் புதிய அறிவு, பலநாள் பயனுய் எய்திய அநுபவ அறிவைப் போலச் சாலவும் சிறந்து மிளிரும். இத்தகைய நன் முறைக்கு எவ்வாற்றானும் இணங்கியதோர் முறையில் இயன்றுளது இந்நூலே என உறுதியுடன் அறுதியிட்டுக் கூறலாகும். இதுபோன்ற முறையில் எழுதப்பெற்ற பூகோள நூல்களையே கீழ் வகுப்பு முதல் மேல் வகுப்புகளுக்கும் ஆசிரியர் கற்பிப்பாராயின், இப்படிப்பு மிகவும் சுலபமானதாயும் சுவைபெற்றதாயும் செல்லவே பண்டைய நெட்டுருச் செய்யு முறை அறவே ஒழியும் என்பதில் ஐயமில்லை.

ஆதலின், இந்நூலின் திறத்தை நன்கு ஓர்ந்து, இதனைப் பெரிதும் ஆதரித்து, எனது இதுபோன்ற முயற்சிகளையும் ஊக்குமாறு ஆசிரியர் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

அத்தியாயம்	விஷயம்	பக்கம்
1.	பூமி சாஸ்திரத்தின் நூதன விளக்கம் ...	1
2.	பூமியின் மேற்பரப்பு ...	3
3.	இயற்கை யமைப்பின் நன்மைகள் ...	8
4.	நமது மாகாணம் ...	11
5.	சென்னை இராஜதானியிலுள்ள நதிகளும் அவைகள் பாயும் பிரதேசங்களும் ...	27
6.	தாம்பிரபரணி நதிப்பாசனம் ...	29
7.	வைகை நதியும் அதின் பாசனமும் ...	34
8.	காவேரி நதிப்பாசனம் ...	41
9.	தென்பெண்ணையாறும் அதன் பாசனமும் ...	56
10.	பாலாறும் அது பாயும் பிரதேசமும் ...	61
11.	வடபெண்ணையாறும் அதன் பாசனமும் ...	69
12.	துங்கபத்திரா நதியும் அதைச்சார்ந்த பாசனமும் ...	74
13.	கிருஷ்ணா நதியும் அதன் பிரதேசமும் ...	79
14.	கோதாவரி நதியும் அதன் பிரதேசமும் ...	85
15.	லாங்குல்யா, வம்சதாரை ருஷிகுல்யா நதிகளும் அவைகளின் பாசனமும் ...	90
16.	மேற்கு கடற்கரைப் பிரதேசமும், தென் கன்னடம், மலையாளம் ஜில்லாக்களும் ...	100
17.	சுதேச இராஜ்ஜியங்கள் ...	106

சென்னை இராஜதானி பூகோளம்

முதலாம் அத்தியாயம்

பூமி சாஸ்திரத்தின் நூதன விளக்கம்

நாம் உயிருடன் வாழ்வதற்குக் காற்று, தண்ணீர், ஆகாரம், உடை, உறைவிடம் மிகவும் அவசியமாய் வேண்டுபவைகள். இவற்றுள் காற்றும், ஜலமும் மானிடரின் பிரயத்தனமின்றியே ஏறக்குறைய எல்லா இடங்களிலும் இயற்கையில் கிடைக்கின்றன. மற்றையப் பொருள்கள் யாவும் மனிதரின் அரும் பிரயாசத்தினாலும் பல்வேறு ஏதுக்களின் உதவியினாலும் சம்பாதிக்க வேண்டியனவாக இருக்கின்றன.

இவ்விதம் சம்பாதிக்க வேண்டிய பொருள்களைத் திற்கும் மனிதனே மூலகர்த்தாவாகவும் அவன் வசிக்குமிடம், உபயோகிக்கும் ஆயுதங்கள், இயற்கைப் பொருள்கள் முதலிய மற்றைய ஹேதுக்கள் கருவிகளாகவு மிருக்கின்றன. எனவே மனிதனுக்கும் ஏனைய இயற்கை, சேர்க்கைப் பொருள்களுக்குமுள்ள சம்பந்தத்தையும், அவன் எவ்வாறு உலகத்திலுள்ள இயற்கைப் பொருள்கள், ஜீவராசிகள், தாது, தாவரவர்க்கங்கள் முதலியவற்றை தன் சித்தத்திற்குட்படுத்தி, அவைகளின் மூலமாய்த் தனக்கு வேண்டிய பல்வேறு சாதனங்களைத் தேடிக்கொள்கிறான் என்பதை அறிந்து கொள்வதுமே, பூமி சாஸ்திரம் கற்பதினால் ஏற்படும் நற்பயனாகும்.

காரிய கர்த்தாவாகிய மனிதன் தன் ஜீவனார்த்தத்தின் பொருட்டுத் தேவையானவைகளை யெல்லாம் பூமியிலிருந்து உண்டாகும் பயிர்களிலிருந்தும், அவைகளைத் தின்று ஜீவிக்கும் பிராணிகளிலிருந்தும் தேடிக்கொள்கிறான். மேலும் கால மாறுதல்களினால் ஏற்படும் உஷ்ணம், காற்று, மழை, குளிர் முதலிய இயற்கை நிலைகள் தாக்காவண்ணம் தேவையான உடையை சிற்சில பயிர்களிலிருந்தும், (உ-ம்) பருத்தி, அவுரி, நாணு; பயிரைத் தின்று ஜீவிக்கும் பிராணிகளிலிருந்தும் சம்பாதித்துக் கொள்கிறான். இன்னும் மனிதன் சுகமாய் வாழ்வதற்கு ஆதாரமான உறைவிடம் உண்டாக்க வேண்டிய சாமான்களை மலைகளிலிருந்தும், காடுகளிலிருந்தும் பயிர் செய்யப்பட்ட மரங்களிலிருந்தும் சேகரித்துக் கொள்கிறான். ஆகவே மனிதன் தான் செய்யும் வேலையின் பயனாலும், இதர சாதனங்களின் உதவியினாலும் வாழ்க்கைக்கு வேண்டிய சௌகரியங்களைத் தேடிக்கொள்கிறான். இத்தகைய சௌகரியங்கள் எல்லாவிடங்களிலும் ஒன்றுபோல் அமைவது அரிது. ஏனெனில் மனிதனின் பிரயாசம் எங்கும் ஓரே விதமாய் இருந்தாலும், இதர சாதனங்களாகிய காலநிலை, நிலத்தின் தன்மை, ஜலாதாரம் முதலியவைகளின் வித்தியாசத்தினால் சௌகரியக் குறைவுகளோ அல்லது மிகுதியோ உண்டாகுவது இயல்பு.

கடலால் சூழப்பட்ட இப்புவியில் மேற்கூறிய சாதனங்கள் பற்பல வகையாய் அமையப்பெற்றிருக்கின்றன. இவ்விதம் அமையப்பெற்றிருப்பதால் மனித வாழ்க்கையும், சேர்க்கையும் எல்லா விடங்களிலும் ஓரேவிதமாய் இராமல் பற்பல விதமாயிருக்கின்றன. ஆகவே, ஒரு இடத்தின், அல்லது, தேசத்தின் நன்மைத் தன்மைகளை, அவ்விடத்தின் அல்லது தேசத்தில் வசிக்கும் அல்லது காணப்படும் ஜனங்களின் ஆகா

ரம், உடை, நடை, பழக்க வழக்கங்களிலிருந்து நன்கு அறியலாம். இவ்வண்ணம் மனிதனை அவன் வசிக்கும் இடத்தோடு அல்லது தேசத்தோடு சம்பந்தப்படுத்தி பல்வேறு விஷயங்களைத் தெரிந்துகொள்வதே பூமி சாஸ்திரம் கற்பிப்பதின் சிறந்த முறையாகும்.

OFFICE OF THE REGISTRAR OF ... 13 JUL 1933 MADRAS

இரண்டாம் அத்தியாயம்

பூமியின் மேற்பரப்பு

இப்பூவுலகில் நாம் வசிக்கும் சிறு நில பாகத்தை முதலில் கவனிக்கப் புகின் அதன் மேற்பரப்பு எவ்வாறு அமையப் பெற்றிருக்கிறதென்று தெரியவரும். எல்லா இடமும் ஒரே சம நிலமாயிராமல் வேறு பட்டிருப்பதைப் பார்க்கலாம். ஓர் பாகம் மேடாகவும், மற்றோர் பாகம் பள்ளமாகவும், சிற்சில இடங்களில் நிலம் கட்டியாயும், அல்லது மிருதியான மணலை யுடையதாயும் இருக்கிறது. மேலும் நீங்கள் ஓர் கிராமத்திலிருந்து வேறு ஓர் கிராமத்திற்குப் போயிருப்பீர்கள். நீங்கள் சென்ற வழியைச் சுற்றியுள்ள நிலப்பாகம் ஒரே சம தரையாக இல்லாததைக் கவனிக்கலாம். சில இடங்கள் உயர்ந்தும், சில இடங்கள் தாழ்ந்தும், உயர்ந்துள்ள இடங்களில் சில குவிந்து கோபுரம் போலவும், சில தட்டையாய் மேஜைபோல் உயர்ந்தும் இருக்கப் பார்க்கலாம். இவ்வித ஏற்றத்தாழ்வு நில பாகத்தின் மீது மாத்திரமல்ல ஜல பாகங்களின் அடியிலுள்ள பூமியின் மேற்புறத்திலும் உண்டு என்பதை அறியவேண்டும். இது காரணம் பற்றியே சமுத்திரங்

கள் எங்கும் ஒரேவிதமான ஆழம் உடையனவாக இருப்பதில்லை.

மேற்கூறிய விதமாக நிலபாகம் சமதரையாக இல்லாததால் அதன் பல பாகங்களையும், அவற்றின் உயரத்திற்கும், உருவ அமைப்பிற்கும் ஏற்றபடி வெவ்வேறு பெயருடன் அழைக்கின்றனர். அந்த உயரத்தைக் கணிப்பதற்கு சமுத்திர ஜல மட்டத்தையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றனர்.

அதிகமாய் மேடுபள்ளங்களின்றி ஏறக்குறைய சமமாயிருக்கும் நில பாகத்திற்கு சமவெளி என்று பெயர். சாதாரணமாய் சமுத்திரக் கரையோரமாய் இருக்கும் நிலம் மேடுபள்ளங்களில்லாமல் சமமாய் இருக்கும். மேலும் ஜலமட்டத்திலிருந்து 600 அடிக்குக் குறைவாக உள்ள சம தரையானது சமவெளி என்று சொல்லப்படுகிறது. 600 அடிக்கு அதிகமான உயரத்தோடு ஏற்றத்தாழ்வின்றி சுற்றிலுமுள்ள பூமியைவிட உயர்ந்து தட்டையாய் வியாபித்திருக்கும் பூபாகத்திற்கு பீடபூமி (உயர்ந்த சமவெளி) என்று பெயர். முக்கியமாய் மலைகளின் மேல்பாகங்களில் வியாபித்திருக்கும் விசாலமான சமவெளியைப் பீடபூமி என்றழைப்பதுண்டு.

சமவெளியைவிடத் தரையானது வரவர உயர்ந்து மேடாயிருந்தால் அதற்குக் குன்று என்றுபெயர். குன்றைக் காட்டிலும் அதிக உயரமாயும், விசாலமாயும் ஏறுவதற்கு அதிகக் கஷ்டமாயுமிருந்தால் அதற்கு மலை என்று பெயர். ஒரு மலை உண்டாவதற்கு அநேகமாயிரம் வருஷங்கள் செல்லும். பல மலைகள் சுவர்போல் தொடர்ச்சியாக அமைந்திருந்தால் மலைத்தொடர் எனப்படும். சில இடங்களில் மலை உயரமாய் ஒரு பிரமாண்டமான கல்லைப்போல் இருக்கும். இன்னும்

சில இடங்களில் இப்பேர்ப்பட்ட மலைகள் அநேகம் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்திருக்கும். அவைகளுக்கு **மலைக்கூட்டம்** என்று பெயர். மலையின் ஒவ்வொரு பாகத்திற்கும் ஒவ்வொரு பெயருண்டு. மலையின் கீழ்ப்பாகத்திற்கு **மலையடி** என்றும், சுற்றிலுள்ள பக்கத்திற்கு மலைச்சரிவு என்றும், உயர்ந்த மேல் பாகத்திற்கு உச்சி (சிகரம்) என்றும் பெயர் வழங்கும். இரு மலைத்தொடர்கள் அருகிலிருந்தால், அவைகளுக்கு இடையிலுள்ள பாகம் பள்ளத்தாக்கு (Valley) என்றழைக்கப்படும்.



பூமியின் மேற்பரப்பில் நிலப்பாகங்களும், ஜலபாகங்களும் மாறிமாறி அமைந்திருக்கின்றன. பெரிய நீர்ப்பாகத்திற்குச் சமுத்திரம் எனப் பெயர். சமுத்திர ஜலத்தை யடுத்துள்ள நிலத்தின் ஓரத்தைக் கடற்கரையோரம் என்றழைப்பதுண்டு. கடற்கரையோரம் எங்கும் ஒரேவிதமாய் இராது. சில இடங்களில் கரையோரம் அதிகமாக உடைவுபடாமல் ஒழுங்காகவும், இன்னுஞ் சில இடங்களில் அதிகமாய் உடையப்

பெற்று அதிகக் கோணல் மாணலாயும் இருக்கும். மேலும் ஜலமானது நில பாகத்துக்குள் சென்றிருப்பது எல்லா விடங்களிலும் ஒரேவிதமாக இல்லை. சில இடங்களில் குறுகியும், இன்னும் சில இடங்களில் நீண்டு வெகுதூரம் பூமிக்குள் சென்றும் இருப்பதைக் கவனிக்கலாம். இவ்வாறு ஜலபாகமும், பூபாகமும் ஒன்றையொன்று அடுத்து வியாபித்திருக்



கும் தன்மையிலும் உருவத்திலும் வேறுபடுகின்றன. இவ் வேறுபாட்டை அனுசரித்தே அவைகள் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. (படத்தைக் கவனி.)

வாயகன்று நிலத்தினுட் சென்றிருக்கும் ஜல பாகத்திற்கு விரிகுடா எனப் பெயர். சற்று குறுகி பூமிக்குட் புகுந்திருக்கும் ஜல பாகத்தை வளைகுடா என்பர். இருநிலப் பாகங்களைப் பிரித்து, இரண்டு ஜல பாகங்களைச் சேர்க்கும் குறுகிய ஜல

பாகம் ஜலசந்தி என்றழைக்கப்படும். மூன்று பக்கம் ஜலத்தி ஞல் சூழப்பட்டிருக்கும் பூபாகம் தீபகற்பம். நாலு பக்கத்தி லும் ஜலத்தால் சூழப்பட்ட நிலபாகத்திற்குத் தீவு என்று பெயர். இரண்டு ஜலபாகங்களைப் பிரித்து, இரு பூபாகங் களைச்சேர்த்து நிற்கும் குறுகிய நிலப் பாகத்தின் பெயர் பூசந்தி.

ஒரு நதி முடியும் இடத்திற்கு முகத்துவாரம் என்று பெயர். நதிகள் முக்கியமாய் சமுத்திர ஜலத்துடன் கலக்கின் றன. நதியானது சமுத்திரத்துடன் கலக்குமிடத்தில் ஜலம் மெதுவாகப் பாய்வதினுல், அது அடித்துக்கொண்டு வரும் மணல், வண்டல் முதலியவைகள் முகத்துவாரத்தின் அரு கில் விடப்படுகின்றன. இவ்விதம் ஒன்று சேருபவைகள் நாளடைவில் பெரிய மணல் மேடுகளாகின்றன. ஆகவே, முகத்துவாரத்தில் நதிகள் பல பிரிவுகளாகப் பிரிந்து சமுத் திரத்துடன் சேருகிறது. இரண்டு பிரிவுகளுக்கு இடையி லுள்ள உயர்ந்த பாகத்திற்கு டேல்டா என்று பெயர். இது தோற்றத்தில் ஒரு தீவை ஒத்திருக்கும். டெல்டா நிலங்கள் மிகவும் செழிப்பாயிருக்கும். சில நதிகள் பாயும்போது மலைப் பாங்கான இடங்களில் உயர்ந்த மேட்டிலிருந்து செங்குத் தாய் பள்ளமான பூமியில் விழுவதுண்டு. இப்படி ஜலம் விழுவதை நீர் வீழ்ச்சி என்பர். நதியில் வெள்ளப் பெருக் குள்ள காலத்தில் நீர்வீழ்ச்சியானது பார்க்க வெகு அழகாக இருக்கும்.

பூமியின் மேற்பரப்பில் ஏறக்குறைய கால்பாகம் நிலமும், முக்கால் பாகம் நீருமாக இருக்கும்.

மூன்றும் அத்தியாயம்

இயற்கையமைப்பின் நன்மைகள்

முந்தின அத்தியாயத்தில் பூபாகத்தின் மேற்பரப்பு எவ்வாறு இயற்கையில் அமைக்கப் பட்டிருக்கிறதென்று கவனித்தோம். இனி, நாம், இவ்வித அமைப்பினுல் ஏற்படும் நன்மைகள் என்னவென்றும், மனிதன் அவைகளை எவ்விதம் தனக்குப் பிரயோஜனப்படுத்துகிருன் என்றும் கவனிப்போம்.

அதிக மேடு பள்ளமில்லாமல் ஏறக்குறைய சமதரையாயிருக்கும் சமவெளிப் பிரதேசங்களே மனிதர்கள் வசிப்பதற்கு மிகவும் அனுகூலமாக இருக்கின்றன. ஏனென்ருல் இப்பிரதேசங்களின் வழியாய்த்தான் முக்கியமாய் நதிகள் பாயும். ஆகையால் ஜலவசதி உண்டு. மேலும் சமவெளியிலுள்ளவர்கள் நிலத்தைப் பண்படுத்தி, உழுது, பயிரிட்டு ஜீவிக்கிருர்கள். ஜனங்கள் ஓர் இடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்குப் போவதும், சாமான்களை அனுப்புவதற்கு அனுகூலமான சாலைகள், ரோடுகள், இருப்புப்பாதை முதலிய போக்கு வரவு மார்க்கங்கள் ஏற்படுவதும் வெகு சுலபம்.

ஆதலால் இங்கு வசிப்பவர்கள் அதிகச் சிரமமின்றி தூரமான இடங்களுக்குப் போய்வரலாம்; வியாபாரம் நடத்தலாம். இவ்வித பல சௌகரியங்கள் இருப்பதால் ஜனங்கள் அதிகப் பிரியத்தோடு வந்து கூடி வசிக்கின்றனர். ஆகையால் நாளடைவில் ஜனநெருக்கமும், செல்வாக்கும், கல்வி நாகரீகமும் உண்டாகின்றன.

மலைப்பிரதேசங்கள் இயற்கையில் மிகக் கரடு முரடானது. அங்கு பல இடங்களில் காடுகள் அடர்ந்திருக்கும். இக்காடு

களில் துஷ்ட மிருகங்கள் வசிக்கும். தரை சமமாயிராதபடி யால் அங்கு போக்கு வரவுகள் மிகக்கஷ்டம்; நிலங்களைச் சாகுபடி செய்வது மிகவும் அரிது. ஆகையால் மலை வாசிகள் செல்வத்திலும் வியாபாரத்திலும் முன்னேற்றம் அடையச் சாதனங்கள் குறைவு. ஆனதால் மலைகளின்மீது உஷ்ணம் குறைவுபட்டுக் குளிர் சற்று அதிகமாயிருப்பதால், உஷ்ண காலத்தில் சமவெளியி லுள்ளவர்கள் குளிர்ச்சிக்காகப்போய் வசிப்பார்கள்.

ஆனால், மலைகளினால் ஜனங்களுக்கு ஏற்படும் நன்மைகள் மிகுதி. மலைத்தொடர் ஒரு நாட்டிற்கு அல்லது தேசத்திற்கு இயற்கையான எல்லையாகிறது. உதாரணமாக இந்தியாவின் மேற்கு எல்லையைக் கவனி. மலைகள் கோட்டைச் சுவர்போல் நின்று தேசத்தினுள் எதிரிகள் வராமல் தடுக்கின்றன. மலைகள் உயர்ந்து இருப்பதால், நீராவியினால் உண்டாகும் ஆகாயத்தி லுள்ள மேகங்களைத் தாக்கி, வருங்காற்றைத் தடுத்து மழையை வருஷிக்கச் செய்கிறது. ஆகவே, ஆறுகளுக்கு மலைகள் உற்பத்தி ஸ்தானங்களாகின்றன. மேலும் மலைகளிலிருந்து பற்பல வகையான தாதுப் பொருள்களும், மனிதர் வீடு கட்டிக்கொள்வதற்கான கற்களும், பலவகை மரங்களும், மூலிகைகளும்; மரங்களிலிருந்து கனிவர்க்கங்களும் கிடைக்கின்றன. குன்றுகள் போன்ற சில மலைகளின்மீது சைனியங்கள் தங்குவதற்கேற்ற கோட்டைகளைக் கட்டுவதுமுண்டு.

ஒரு தேசத்தின் கடற்கரை அதிகமாக உடைவுபட்டு ஒழுங்கின்றி யிருப்பதே சிறந்தது. சமுத்திரம் வெகுதூரம் பூபாகத்திற்குள் சென்றால் பல இடங்கள் சமுத்திரத்திற்கு சமீபமாக இருக்கின்றன. சாதாரணமாக சமுத்திரத்தித்தை அடுத்துள்ள நிலப்பாகம் அதிகக் குளிர்ச்சியும், அதிக

உஷ்ணமுமின்றிச் சமமாக இருக்கும். இவ்வித சீதோஷ்ண ஸ்திதியே சுகத்திற்கு ஏற்றது.

மேலும் கடற்கரையை யடுத்துள்ள கடற்பாகம் ஆழமாக இருக்கவேண்டும். அப்படி ஆழமாயும், முன் சொல்லியபடி கரையோரம் நன்றாய்ப் பிளவுபட்டு மிருந்தால் அங்கு கப்பல் தங்கும் இடங்கள் இயற்கையிலேயே ஏற்பட்டிருக்கும். இவ் விதம் கப்பல் தங்குவதற்கு வசதியான பல இடங்கள் (Harbours) ஒரு தேசத்திலிருந்தால், கடல் மார்க்கமாய் அயல் நாட்டு வியாபாரம், போக்கு வரவு எளிதில் ஏற்படும்.

டெல்டா பிரதேசம் பெரும்பாலும் நல்ல சத்துள்ள வண்டலால் உண்டாகிறது. ஆற்று ஜலத்தின் மூலமாக வருஷா வருஷம் அங்கு புதிய வண்டல் வந்து தங்குவது அதற்கு எருப் போட்டதுபோல் ஆகிறது. மேலும் ஜலத்திற்குக் குறைவு ஏற்படாது. ஆகையால் டெல்டாப் பிரதேசம் மிகவும் செழிப்புற்று விளங்குகிறது. இங்கு நன்செய் பயிர்கள் வருஷமுழுமையும் பலன் கொடுக்கக் கூடியனவாக இருக்கின்றன.

நதியானது மலைப்பிரதேசத்தில் பாயும்போது நீர் வீழ்ச்சி உண்டாகிறது. இவ்வித நீர்வீழ்ச்சியின் ஜலசக்தியால் இயந்திரங்களை ஓட்டலாம்; மின்சார சக்தியாக மாற்றி அதைக் கொண்டு தொழிற் சாலைகளிலுள்ள இயந்திரங்களையும், இருப்புப்பாதை இஞ்சின்களையும், டிராம் வண்டிகளையும் ஓட்டலாம். மேலும் பட்டணங்களிலுள்ள தெருக்களுக்கும், வீடுகளுக்கும் வெளிச்சம் கொடுக்கும்படி செய்யலாம். நீர்வீழ்ச்சியின் சமீபத்திலுள்ள இடங்களுக்கு மாத்திரமல்ல, அந்த மின்சார சக்தியைச் செம்புக் கம்பிகளின் மூலமாகக் கொண்டு போய் தூரமான இடங்களுக்கும் பயன்படுமாறு செய்யலாம்.

நான்காம் அத்தியாயம்

நமது மாகாணம்

நாம் வசிக்கும் இப் பிரமாண்டமான பூமியின் மேற்பரப்பில் ஏறக்குறைய கால் பாகம் நிலமும் முக்கால் பாகம் நீருமாக இருக்கிறது. நிலப் பாகத்தைச் சில பெரிய பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் **கண்டம்** என்று அழைக்கிறோம். கண்டங்களெல்லாம் தனித்தனிப் பெயரால் அழைக்கப்படுகின்றன. ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா எனக் கண்டங்கள் ஐந்து. அமெரிக்காக் கண்டத்தை வட அமெரிக்கா, தென் அமெரிக்கா என இரு பிரிவாகக் கொள்ளலாம்.

கண்டங்களில் பெரியது ஆசியா. உலகத்திலுள்ள பூ. பாகத்தில் ஆசியா மூன்றில் ஒரு பாகம். இந்தக் கண்டம் கிழக்கு மேற்காய் வியாபித்திருக்கிறது. இது மூன்று பாகத்திலும் சமுத்திரத்தால் சூழப்பட்டிருக்கிறதைப் பார்க்கலாம். ஆகவே இதை ஒரு தீப கற்பம், எனலாம். இந்தக் கண்டம் இயற்கையாய் இரண்டு பாகங்களாகப் பிரிந்திருக்கிறது. வடக்கிலும் தெற்கிலும் தாழ்ந்த சமவெளியும், மற்றப் பாகங்களில் மலைகளும் இருக்கின்றன. உலகத்திலுள்ள முக்கியமான மலைகள் இக்கண்டத்தில்தான் இருக்கின்றன. இதற்கு இமய மலை யெனப் பெயர். இம்மலைக்குத் தெற்கில் நாம் வசிக்கும் இந்தியா தேசம் இருக்கிறது.

பெரிய நிலப்பாகத்தைக் **கண்டம்** என்று அழைப்பது போல், பெரிய ஜல பாகத்தைச் **சமுத்திரம்** என்றழைப்பதுண்டு. சிறிய ஜலபாகத்திற்குக் **கடல்** என்று பெயர். கட

லானது சமுத்திரத்தின் ஓர் பாகம். இந்த ஜலபாகங்களும் பற்பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன. அவையாவன:— இந்து மஹா சமுத்திரம், அட்லாண்டிக் மஹா சமுத்திரம், பசிபிக் மஹா சமுத்திரம், வட சமுத்திரம், தென் சமுத்திரம் முதலியவைகளே.

இதுவரையிலும் நாம் இருக்கும் ஊரைப்பற்றியும், அவ்வூர் இருக்கும் ஜில்லாவைப் பற்றியும் கீழ் வகுப்பில் படித்தோம். இப்போது நமது ஜில்லா இருக்கும் இராஜதானியைப்பற்றி சில முக்கிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளுவோம். நாம் வசிக்கும் இராஜதானி இந்தியா தேசத்தின் தென்கோடியிலிருக்கிறது. இதற்குச் சென்னை இராஜதானி என்று பெயர். நம் இராஜதானிக்கு முக்கிய பட்டணம் சென்னை. ஆங்கிலேயர்கள் முதல் முதலில் இந்த இடத்தை சென்னப்பனின் மகனை ஓர் சிற்றரசனிடமிருந்து வாங்கினதால், அவன் வேண்டுகோளுக் கிணங்கி அவன் தகப்பன் பெயரை அதற்கிட்டனர். ஆகையினால்தான் நம் இராஜதானியை சென்னை இராஜதானி யென்றும், அதன் முக்கிய பட்டணத்தைச் சென்னைப்பட்டணமென்றும் அழைக்கின்றனர். நம் இராஜதானியின் வடகிழக்குக் கோடி முதல் தென் மேற்குக் கோடிவரை நீளம் சுமார் 950 மைல்கள். இதன் பரிமாணம் 141800 சதுர மைல்கள்.

1. சம வெளிகள்

இந்த இராஜதானியின் மேற் பரப்பைக் கவனித்தால் சில பாகம் சமுத்திர மட்டத்திற்குச் சமமாயும், சில பாகம் உயரமாயும் இருக்கின்றன. நம் இராஜதானியிலிருக்கும் இரண்டு சமவெளிகளும் கடலுக்கும் மலைத்தொடருக்கு மிடையிலிருக்

கின்றன. இவற்றில் ஒன்று கிழக்கேயும், ஒன்று மேற்கேயும் இருக்கின்றது. கிழக்கே யுள்ளதற்குக் கர்னுடகச் சமவெளி என்றும், மேற்கேயுள்ளதற்குக் கோங்கண சமவெளி என்றும் பெயர். மேற்கேயுள்ள கொங்கண சமவெளியைவிட கிழக்கே யுள்ள கர்னுடகச் சமவெளி சற்று விசாலமானது. இந்தச் சமவெளி வடக்கே ஓரிசா முதல் தெற்கே கன்னியா குமரி வரையில் வியாபித்திருக்கிறது. இது வடக்கே 20 மைல் விஸ்தீரணமுள்ளதாகவும் தெற்கே வரவர 100, 150 மைல் விஸ்தீரணம் உள்ளதாகவும் இருக்கின்றது. கோங்கண சமவெளி மேற்கே பம்பாய் இராஜதானி முதல் தெற்கே கன்னியாகுமரி முனை மட்டும் வியாபித்திருக்கிறது. அதன் அகலம் சுமார் 50 மைல்.

2. மலைகள்

[படத்தைக் கவனி. மலைகளிருக்கும் இடத்தை எவ்வாறு படத்தில் காண்பித்திருக்கிறது? அந்த அடையாளத்தைக் கொண்டு இந்த இராஜதானியில் எங்கெங்கே மலைகள் வியாபித்திருக்கின்றன என்று கண்டுபிடி.] இந்த இராஜதானியில் கீழ் பாகத்திலுள்ள கிழக்குத் தொடர்ச்சிமலையும் அவைகளின் பிரிவுகளும் முக்கியமானவைகளாகும்.

மேற்குத் தொடர்ச்சி மலை.

இது பம்பாய் இராஜதானியில் ஆரம்பித்து மேற்கு சமுத்திரத்தின் பக்கமாய் தென் வடலாய் தேன்கன்னடம், குடகு,மலையாளம், கோயம்புத்தூர், கோச்சி, திருவாங்கூர் என்ற நாடுகளின் வழியாகச் சென்று கன்னியாகுமரி முனையில் முடிவடைகிறது. இம் மலையின் உயரம் ஏறக்குறைய 4000 அடி. இது சமுத்திரத்திற்குப் பக்கமாய்ச் செல்லுவதால் சமுத்

திரத்திற்கும் இம் மலைக்கும் இடையிலுள்ள சமவெளி அதிக உயரமில்லாமல் சில இடங்களில் 50 மைல், வேறு சில இடங்களில் 100 மைல் அகல முள்ளதாக இருக்கின்றது. ஆகையினால் இம்மலைத்தொடரில் உற்பத்தியாகி மேற்கு சமுத்திரத்தில் சங்கமமாகும் நதிகள் அதிக நீளமின்றி வேகமுள்ளனவா யிருக்கின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலையானது பற்பல இடங்களில், பற்பல விதமாய் அழைக்கப்படுகின்றது. இத்தொடர் தென் கன்னடம் ஜில்லாவுக்கும், மைசூர் இராஜ்பத்திற்கும் இடையில் இயற்கை எல்லையாயிருக்கின்றது. இவ்விடத்திலுள்ள உயர்ந்த சிகரத்திற்குக் குதிரை முகம் என்று பெயர். இதன் உயரம் 6215 அடி. பின்பு இம்மலைத்தொடர் குடகு, மைசூர், மலையாளம் என்ற நாடுகளில் பிரவேசித்து, குடகு இராஜ்யத்தில் பிரமகிரி என்ற பெயரையும் அடைகிறது. வை நாடு பீட பூமிக்குத் தெற்கில் இத்தொடரானது கோயம்புத்தூர் ஜில்லாவில் சென்று நீலகிரி பீடபூமி என்றும் பெயர் பெறுகிறது. இவ்விடத்தில் இது கிழக்குத் தொடர்ச்சி மலையைச் சந்திக்கின்றது. நீலகிரி மலையின் சராசரி உயரம் 6500 அடி. இதன் உயர்ந்த சிகரம் தோட்ட பெட்டா. கோயம்புத்தூருக்குத் தெற்கில் இத்தொடரானது சற்று உடைவு பட்டு, ஒரு இடைவழி ஏற்பட்டிருக்கிறது. இதற்குப் பாலக்காட்டுக் கணவாய் என்று பெயர். இதன் அகலம் சுமார் 16 மைல். இக்கணவாயின் மூலமாய்த் தான் மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கிலுள்ள மலையாளம், தென்கன்னடம் முதலிய பிரதேசங்களுக்கும்; கிழக்கிலுள்ள ஜில்லாக்களுக்கும் போக்கு வரவு நடக்கிறது. இதன் வழியாய் மலையாளம், தென்கன்னடம் இருப்புப்பாதை செல்லுகிறது. இக்கணவாய்க்குத் தெற்கே திரும்பவும்

இது உயர்ந்து ஆனைமலை என்னும் பெயரை அடைந்து கொச்சி இராஜ்ஜியத்தில் வியாபித்திருக்கிறது. இதன் உயர்ந்த சிகரத்திற்கு ஆனைமுடி என்று பெயர். ஆனைமலைக் குத் தெற்கே இது திருவாங்கூர் இராஜ்யத்தில் பிரவேசித்து ஏலக்காய் மலை என்னும் பெயர் பெறுகிறது. இதை மேல் காற்று மலை என்றும் சொல்வர். இதிலுள்ள உயர்ந்த சிகரங் கள் மஹேந்திரகிரி, வெள்ளிமலை, போதியமலை, என்பன வாம். இம்மலைகளில் ஆரியங்காவு, ஆரல்வாய்மொழி என இரு கணவாய்கள் இருக்கின்றன. இதன் மூலமாய்த் திரு நெல்வேலி ஜில்லாவுக்கும், திருவாங்கூர் இராஜ்ஜியத்திற்கும் போக்கு வரவு நடக்கிறது. இதற்கப்பால் இது உயரமில்லா மல் சிறு குன்றுகளாகக் கிழக்கில் கன்னியாகுமரியில் முடி கிறது. இதன் தென்கோடி முனைக்கு அகஸ்தியமலை என்று பெயர்.

மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து ஒரு பிரிவு வட கிழக்காய் மதுரை ஜில்லாவில் பிரவேசிக்கிறது. இதற்குப் பழனி மலைகள் என்று பெயர். கிழக்குப் பழனி மலைகள் சற்றேறக்குறைய 3,000 அடி முதல் 4,000 அடி வரையில் உயரமுள்ளவை. இத்தொடரில்தான் மதுரை ஜில்லாவி லுள்ள சிறுமலை, அழகர்மலை இருக்கின்றன. மேற்குப் பழனி மலைகளில் கோடைக்கானல் மலை ஒரு பாகம். இது கடல் மட்டத்திற்குமேல் சுமார் 7,600 அடி உயரமுள்ளது.

கிழக்குத் தொடர்ச்சி மலை: இது மேற்கு மலைத்தொட ரைப்போல் அதிக உயரமானதல்ல. ஏனெனில் இதன் சரா சரி உயரம் 2,000 அடி தானிருக்கும். மேலும் அதைப் போல் ஒரே தொடராகவும் இல்லை இது இடையிடையே விட்டுப் பல பகுதிகளாகப் பிரிந்து நிற்கின்றது. இப்படி

இருப்பதால் பல நதிகள் மேற்குத் தொடரில் உற்பத்தியாகி, மேற்கூறிய இடைகளின் வழியாகச்சென்று வங்காள விரிகுடாவில் விழுகின்றன. இந்த மலைத்தொடரின் வெவ்வேறு பிரிவுகளும் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன.



இத்தொடரானது முதலில் வடகிழக்கே ஒரிசா நாட்டில் ஆரம்பித்து, மேற்கு முகமாய்த் திரும்பி, பின்பு சற்று தென் மேற்காய்ச் சென்று நீலகிரி என்னுமிடத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையுடன் சேருகிறது. இதைக் கஞ்சம் ஜில்லாவில் மலைய மலை என்றும்; விசாகப்பட்டணம் ஜில்லாவில் ஜெயப்பூர் மலை

என்றும்; கோதாவரி ஜில்லாவில் பாபிகோண்டா என்றும்;நெல்லூர் ஜில்லாவில் வேலிகோண்டா என்றும்; கர்நூல் ஜில்லாவில் ஏர்ரமலை என்றும்; சித்தூர், கடப்பை, அநந்தப்பூர் முதலிய ஜில்லாக்களில் பால்கோண்டா என்றும் அழைக்கின்றனர். மேலும் கோயம்புத்தூர் ஜில்லாவிலும், மைசூர் பீடபூமியிலும் இத்தொடருக்கு பிளிகிரி ரங்கன்மலை என்று பெயர். இத்தொடர் தெற்கில் போகப்போக உள்ளடங்கிப் போகிறது.

இக்கிழக்குத் தொடர்ச்சி மலையிலிருந்து சில குன்றுகள் பிளவுபட்டு வேறுபட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை சித்தூர் ஜில்லாவிலுள்ள நகரிமலை; சேலம் ஜில்லாவிலுள்ள சேர்வராயன் மலை; வடஆற்காடு ஜில்லாவிலுள்ள ஜவ்வாது மலை; தென் ஆற்காட்டிலுள்ள காளேரி மலை முதலியவைகளாம்.

3. பீட பூமிகள்

பீடபூமி என்றால் என்ன? பீடபூமி என்று ஏன் அழைக்கப்படுகிறது? சமுத்திர மட்டத்தைவிட உயர்ந்த மேட்டுப் பூமிக்குப் பீடபூமி என்று பெயர். நம் இராஜதானியிலுள்ள பீடபூமிக்குத் தக்ஷிண பீடபூமி என்று பெயர். இது முக்கோண வடிவமாக இருக்கிறது. வடக்கிலும், கிழக்கிலும் மேற்கிலும் இப்பீட பூமியானது மலைத்தொடர்களால் சூழப்பட்டிருக்கின்றது. நீலகிரிக் குன்று தக்ஷண பீடபூமியின் தெற்கு முனையாகிறது. இப்பீட பூமியிலுள்ள கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, முதலிய நதிகள் கிழக்கு முகமாக ஓடுவதால் இது மேற்கில் சற்று உயர்ந்தும் கிழக்கே வரவரத்தாழ்ந்தும் இருக்கிறது என அறியலாம். இப் பீடபூமியில் கடப்பை, கர்நூல், பல்லாரி, அநந்தப்பூர் என்ற ஜில்லாக்களும்;

சித்தூர், வட ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர் என்ற ஜில்லாக்களின் சிற்சில பாகங்களு மிருக்கின்றன.

4. டேல்டா பிரதேசங்கள்

[டெல்டா என்றால் என்ன? அது எவ்விதம் உண்டாகிறது.]

சென்னை இராஜதானியில் ஓடும் ஆறுகளில் சாகுபடிக்கு உபயோகப்படுவது சிலவேயாகும். அவைகளில் முக்கியமானவை. காவிரி, கோதாவரி, கிருஷ்ணா. இந் நதிகள் மூன்றும் சமுத்திரத்தில் சேரு முன்னதாகப் பல பிரிவுகளாகப் பிரிந்து உயர்ந்த மண்மேடுகளை உண்டாக்குகின்றன. இவ்வித மண்மேடுகளுக்கு டேல்டா என்று பெயர். ஆறுகளில் கரைந்து வரும் வண்டல் மண் நிலத்திற்கு ஏற்ற உரமாகிறது. அநேக ஆயிர வருஷங்களாய் இவ்விதம் ஆறுகள் வருஷா வருஷம் மண்ணையும், மணலையும் அடித்துக்கொண்டு வருவதால் சில நதிகளில் டெல்டா பிரதேசம் கடலிலிருந்து சுமார் 50 அல்லது 100 மைல் தூரம் வியாபித்திருக்கிறது.

திருச்சினாப்பள்ளிக்கு அருகில் காவிரி நதி இரண்டு பிரிவுகளாகப் பிரிவதனால் ஒரு டெல்டா உண்டாகிறது. இவ்விதம் பிரியும் தென் கிளைக்குக் காவிரி என்றும், வட கிளைக்குக் கொள்ளிடம் என்றும் பெயர். இந்நதி திருச்சினாப் பள்ளிக்குக் கிழக்கே செல்லச் செல்ல அதினின்று பல சிற்றாறுகள் பிரிகின்றன. தஞ்சாவூர் ஜில்லாவின் மிகச் செழிப்பான பாகங்களெல்லாம் காவிரி டெல்டாவில் அடங்கியிருக்கின்றன. இந்த டெல்டாப் பிரதேசத்தில் தகுந்த மணல் இருப்பதாலும், உஷ்ணம் குறைவில்லாமலிருப்பதாலும் நன்செய் பயிர்கள் நன்றாய் உண்டாகின்றன. இங்கு

விளையும் நெல், வெளிப் பிரதேசங்களுக்கு அதிகமாய் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. தஞ்சை ஜில்லாவைத் "தென்



இந்தியாவின் நெல் களஞ்சியம்" என்றும் சொல்லுவார்கள். இந்த டெல்டா பிரதேசத்தின் வழியாய்ப் பல ஆறு

கள் பிரிந்து போவதால் நீர்ப்பாய்ச்சலுக்கு வேண்டிய ஜல வசதிக்காகப் பற்பல அணைகள் கட்டி அவைகளில் கதவுகள் போட்டுப் பூட்டியும் திறந்தும், ஜலத்தை எல்லா இடங்களுக்கும் பரவிச் செல்லும்படி செய்கிறார்கள். இவ்விதம் செய்வதால் கோடை காலத்தில் சாகுபடி செய்வதற்கு ஜலம் குறைவில்லாமல் கிடைக்கிறது. ஆகையால் இங்குள்ளவர்கள் வருஷத்துக்கு இரு முறை நன்செய் பயிர்த்தொழில் செய்கிறார்கள். இவ்விதம் இருமுறை பயிர் செய்யும் பிரதேசம் டெல்டா முழுவதும் பரவியிருக்கிறது. இவ்வாறு டெல்டா இல்லாத தாம்பிரவர்ணியிலோ இருமுறைப் பயிர் செய்யும் பிரதேசம் ஆற்றுப் பாசானத்தில் சிற்சில இடங்களில் மட்டும் அமைந்திருக்கின்றன. காவிரி நதியின் தாழ்ந்த சமவெளிப் பிரதேசம் ஈரோடிலிருந்து ஆரம்பித்து கடல்வரை வியாபித்திருக்கிறது. இதன் நீளம் சுமார் 200 மைல்.

கிருஷ்ணா நதியின் டெல்டா வண்டல் மண் பதிந்து உண்டான பிரதேசந்தான். இந்நதி மேற்கு மலைத்தொடரில் உற்பத்தியாகி நிஜாம் இராஜ்யத்தின் பீடபூமியின் வழியாக வெகுதூரம் ஓடி, கிழக்குத் தொடர்ச்சி மலையைக் குடைந்து கொண்டு சமவெளியில் பிரவேசிக்கிறது. ஆனால் இதன் சமவெளிப் பிரதேசம் மிகவும் குறுகலானது. சமவெளியில் சற்று தூரம் ஓடியதும் பெஜவாடா என்னும் பட்டணத்திற்கருகில் இந்நதி இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. இவ்விடத்தில் ஓர் பெரிய அணை கட்டியிருக்கிறார்கள். இந்த அணையிலிருந்து பல கால்வாய்களை வெட்டி டெல்டா முழுவதும் ஜலத்தைப் பரவச்செய்கிறார்கள். பெஜவாடாவுக்குப் பின் இந்நதி பல பிரிவுகளாகப் பிரிந்து வங்காள விரிகுடாவில் விழுகின்றது. இந்த டெல்டா பிரதேசத்தில் போக்கு வரவு

மார்க்கங்கள் நன்கு ஏற்படவில்லை. ஏனெனில் இங்கு பல கால்வாய்களிருப்பதாலும், ரஸ்தாக்களெல்லாம் மண்தரையா யிருப்பதோடு வெள்ளம் வரும் காலங்களில் கரைந்து போவ தினுலுமே. ஆகையினுல், இங்கு கால்வாய்களின் மூலமாய்த்



தோணிகளில் சரக்குகளை அனுப்புகிருர்கள். இப்பிரதேசத் தில் நெல் அதிகமாய்ப் பயிர் செய்யப்படுகிறது. இங்கு பயிர் மூன்று போகம் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் இருபோக மும், மூன்ருவது போகமாகப் புகையிலையும், வெங்காயமும்;

தை, மாசி மாதங்களில் பயிர் செய்யப்படுகின்றன. இங்குள்ள துறைமுகப் பட்டணத்தின் மூலமாய் சமுத்திர வியாபாரம் நடக்கிறது. ஆனால் இத்துறைமுகம் டெல்டாப் பிரதேசத்தி லிருப்பதால் அதிக ஆழமில்லை. மற்ற நதிகளைப்போலவே



கோதாவரியும், மேற்கு மலைத்தொடரில் உற்பத்தியாகி, முதலில் பம்பாய் மாகாணத்திலும், பின்பு நிஜாம் இராஜ்யத்திலும் ஓடி, அங்கு பல உபநதிகளைச் சேர்த்துக்கொண்டு கிழக்குமலைத் தொடரைக் குடைந்து நம் இராஜதானியின் சமவெளியில் பாய்கிறது. சமவெளியில் கொஞ்சதூரம் பாய்ந்ததும், இராஜ

மஹேந்திரபுரம் என்னுமிடத்தில் இரு பிரிவாகப்பிரிகிறது. இங்கே அதன் டெல்டா ஆரம்பமாகிறது என்றுசொல்லலாம். இந்த இடத்திலுள்ள தவளேஸ்வரம் என்னும் ஊரில் ஓர் அணைக்கட்டுகட்டி, நதியின் ஜலத்தைப் பல கால்வாய்களின் மூலமாய்நீர்ப்பாய்ச்சலுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். இதன் பின்னர் இந்நதி 7 பிரிவுகளாகப் பிரிந்து வங்காளக் குடாக் கடலை அடைகிறது. இந்த டெல்டா ஆரம்பிக்கும் இடத்திற்கும் கடலுக்குமுள்ள தூரம் சுமார் 50 மைல். இந்நதிபாயும் சமவெளிப் பிரதேசம் மிகச் செழுமை வாய்ந்துள்ளது. இந்த டெல்டாவில் ஏற்பட்டிருக்கும் கால்வாய்கள் விவசாயத்திற்கு மிக்கப் பிரயோஜனத்தை விளைவிப்பதோடு படகுகளின்போக்கு வரவிற்கு அதிகப் பிரயோஜனமுள்ளவைகளா யிருக்கின்றன. இங்கு நெல்லும் புகையிலையும் விசேஷமாய்ப் பயிராகின்றன.

5. நீர் வீழ்ச்சிகள்

[நீர்வீழ்ச்சி என்றால் என்ன? எவ்விதம் எங்கே உண்டாகின்றது? அதனால் நமக்கு உண்டாகும் பயன்களெவை?]

நம் இராஜதானியின் முக்கிய நீர்வீழ்ச்சிகள் மூன்று. காவிரி நதியானது மைசூர் இராஜ்யத்தைக் கடந்து, கிழக்கு மலைத்தொடரைக் குடைந்து சுமார் 300 அடி உயரத்திலிருந்து கீழே விழுகிறது. இவ்வீழ்ச்சிக்கு சிவ சமுத்திர நீர் வீழ்ச்சி என்று பெயர். இதனருகில் சிவசமுத்திரமென்னும் தீவிருப்பதால் இப்பெயரிடக் காரணமாயிற்று. ஜூன், ஜூலை ஆகஸ்டு மாதங்களில் வெள்ளம் வரும்போது இந்நீர்வீழ்ச்சி பார்வைக்கு மிக அழகாக இருக்கும். இந்த நீர்வீழ்ச்சியில் இயந்திரங்களை வைத்து அதிலிருந்து மின்சாரங்களை உண்டாக்கி கோலார் தங்கச்சுரங்கங்களில் வேலை செய்யும் ஜனங்

களுக்கு வெளிச்சங் கொடுக்கவும் பொன் கலந்திருக்கும் பாறைகளை யுடைக்கவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

நீலகிரி மலையிலுள்ள ஆறுகள் மழை காலத்தில் அதிக வேகமாக ஓடுகின்றன. அதில் அநேக நீர்வீழ்ச்சிகளிருக்கின்றன. ஆனால் பைகாரா நீர்வீழ்ச்சி பிரசித்திபெற்றது. தென்னிந்தியா முழுமைக்கும் இதிலிருந்து மின்சார சக்திகொண்டுவர ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றனர்.



சிவசமுத்திர நீர்வீழ்ச்சி

தாம்பிரவர்ணியில் குற்றாலம், பாவநாசம் என்னும் இரண்டு இடங்களில் நீர்வீழ்ச்சிகளிருக்கின்றன. இவ்விடங்களுக்குப் பல சுதேச கனவான்கள் சுகத்திற்காகக் கோடை

காலங்களில் போவார்கள். பாவநாசத்திலுள்ள நீர்வீழ்ச்சி

குற்றாலம் நீர்வீழ்ச்சி

யில் சகடைகள் வைத்து இயந்திரங்களை ஓட்டி இங்கு ஏற்பட்டிருக்கும் பஞ்சு ஆலையில் நூல்களை நூற்கின்றனர்.

6. ஏரிகள்

[ஏரி என்றால் என்ன? இது எவ்விதம் ஏற்படுகிறது? இதை எவ்வாறு மனிதர்கள் உபயோகப்படுத்துகிறார்கள்.]

நம் ஜில்லாவின் மேற்பரப்பைக் கவனிக்குங்கால் அதில் சிற்சில இடங்களில் பூபாகத்தின் நடுவில் தண்ணீர் தேங்கியிருப்பதாகப் பார்க்கிறோம். இவ்வித நீர் நிலைகளுக்கு ஏரிகள் என்று பெயர். ஏரிகளில் சில, இயற்கையாயும் மற்றும் சில, மனிதரின் பிரயாசையாலும் ஏற்படுகின்றன. இங்குள்ள பெரிய ஏரிகள் மூன்று. இவைகளில் இரண்டு ஏரிகள் சமுத்திர ஜலத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதால் இவைகளின் ஜலம் உப்பாயிருக்கிறது. ஆகவே ஜலம் சாகுபடிக்குப் பிரயோஜனமாவதில்லை. இவ்வேரிகளில் ஒன்று கஞ்சம் ஜில்லாவிலுள்ள சில்கா ஏரி. இது அதிக ஆழமானதல்ல ' மற்றொன்று கோதாவரி நதிக்கும் கிருஸ்ணா நதிக்கும் மத்தியிலுள்ள கோல் லேறு ஏரி என்பதாம். இதன் ஜலம் அதிக உப்பானதல்ல. இது கோடை காலத்தில் தண்ணீர் வற்றியும், மாரிகாலத்தில் வெள்ளப் பெருக்கால் விசாலித்தும் இருக்கும். மூன்றாவது, பழவேற்காட்டு ஏரி இது சென்னைப்பட்டணத்திற்கு வடக்கே சமுத்திரத்தை ஒட்டியுள்ளது. இதன் தண்ணீர் அதிக உப்பானது. ஆனால் இது அதிக ஆழமில்லை.

மேற்கூறிய மூன்று ஏரிகளையும் தவிர; மலையாளம், தென் கன்னடம், திருவாங்கூர் முதலிய இடங்களில் சமுத்திரஜலத்தாலுண்டான பல கழிகள் இருக்கின்றன. இவைகள் மேற்கரைக்கழிகள் என்று சொல்லப்படும். இவைகள் போக்கு வரவிற்கு மிகவும் அனுகூலமாயிருக்கின்றன. இவ்வித உப்பங்

கழிகள் (Lagoons) மேற்கு சமுத்திரத்தில் சுமார் 100 மைல் தூரத்திற்கு ஏற்பட்டிருக்கின்றன.

இவைகளைத் தவிர இவ்விராஜதானி முழுமையிலும் சுமார் 3500 ஏரிகள் இருக்கின்றன. இவற்றுள் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளும், தென் ஆற்காட்டிலுள்ள வீராணத்தேரியும் கர்நூலிலுள்ள கம்பம் ஏரியும் சற்றுப் பெரியவை. புழலேரியின் ஜலத்தை ஜனங்களின் உபயோகத்திற்காக வடிகட்டி குழாயின் மூலமாகச் சென்னப் பட்டணத்திற்குக்கொண்டு வருகிறார்கள்.

ஐந்தாம் அத்தியாயம்

சென்னை இராஜதானியிலுள்ள நதிகளும் அவைகள் பாயும் பிரதேசங்களும்

[நதி எவ்விதம் எங்கிருந்து உற்பத்தியாகிறது? நதிப் பாசானம் என்றால் என்ன? நதியின் பாய்ச்சலுக்கும் பூமியின் மேற் பரப்புக்கும் உள்ள சம்பந்தம் என்ன? நதியினால் உபயோகம் என்ன? இந்த இராஜதானியிலுள்ள நதிகள் யாவை? ஒவ்வொன்றுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன?]

நமது இராஜதானியை சுலபமாயும், ஜனங்களின் க்ஷேம லாபத்தையும் நன்கு கவனித்து, வேண்டிய சௌகரியங்களை ஏற்படுத்தி அரசாட்சி புரியும்படியாக பற்பல பாகங்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பாகமும் ஜில்லாவென் றழைக்கப்படுகிறது. தனித்தனி பெயர்கள் கொண்ட 26 ஜில் லாக்கள் இவ்விராஜதானியில் அடங்கியிருக்கின்றன. இந்த ஜில்லாக்களின் வழியாய் நம் இராஜதானியிலுள்ள பற்பல நதி

கள் பாய்ந்து அவைகளை செழிப்பிக்கின்றன. ஆகையால் இவ் விராஜதானியிலுள்ள நதிகளை அவைகள் பாயும் ஜில்லாக்க ளோடு சம்பந்தப்படுத்தி, அப்பிரதேசங்களில் மனிதரின் ஆகார த்திற்கு வேண்டிய நன்செய் புன்செய் நிலங்கள் எங்கெங்கே யிருக்கின்றனவென்றும், உடைக்கு வேண்டியவைகள் எங்கே உண்டாகின்றனவென்றும், எப்பிரதேசங்களில் மனிதர்கள் சௌக்கியமாய் வாசஸ்தலங்கள் அமைத்து வசிக்கின்றனர் என்றும் கவனிப்பது சிறந்த முறையாகும்.

முதலில் நாம் இந்த இராஜதானியிலுள்ள நதிகள் யாவை என்றும் அவைகள் பாயும் ஜில்லாக்கள் எவையென் றும் பார்த்து திரும்பத் தனித்தனியே ஒவ்வொரு நதியின் பாசானத்தைப்பற்றியும் சில முக்கியமான விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவோம்.

1. தாம்பிரபரணி:—இது திருநெல்வேலி ஜில்லாவின் வழியாகச் செல்லுகிறது.

2. வைகை:—இந்நதி மதுரை, இராமனுதபுரம் என்னு மிரு ஜில்லாக்களின் மூலமாக ஓடுகிறது.

3. காவேரி:—இது மைசூர் நாட்டின் வழியாக ஓடி, சேலம், கோயம்புத்தூர் என்னும் ஜில்லாக்களின் பக்கங்களி லும் அதற்கப்பால் தஞ்சாவூர், திருச்சினப்பள்ளி ஜில்லாக்க ளின் மத்தியிலும் செல்லுகிறது.

4. தேன் பெண்ணை:—இது மைசூர் நாட்டில் உற்பத்தி யாகி தேன் ஆற்காட்டு ஜில்லாவின் மூலமாகச் செல்கின்றது.

5. பாலாறு:—இந்நதியும் மைசூர் நாட்டிலேயே உற் பத்தியாகி சித்தூர், வடஆற்காடு, செங்கற்பட்டு என்னும் மூன்று ஜில்லாக்களின் வழியாகவும் செல்கின்றது.

6. வடபெண்ணை:—இதன் உற்பத்தி ஸ்தானமும் மைசூரே. சமுத்திரத்தில் சங்கமமாகு முன் இந்நதி அநந்த புரம், கடப்பை, நெல்லூர் முதலிய ஜில்லாக்களின் வழியாகச் செல்கிறது.

7. துங்கபத்ரா:—இது கிருஷ்ணாவின் உபநதி. இது மைசூரில் உற்பத்தியாகி, பெல்லாரி, அநந்தப்பூர், கர்நூல் முதலிய ஜில்லாக்களின் வழியாக ஓடி கிருஷ்ணாவில் கலக்கிறது.

8. கிருஷ்ணா நதி:—நிஜாம் இராஜ்யத்தின் வழியாகவும், கிருஷ்ணா ஜில்லாவின் வழியாகவும் செல்லுகிறது.

9. கோதாவரி:—இது நிஜாம் இராஜ்யத்தின் வழியாகவும் கோதாவரி ஜில்லாவின் வழியாகவும் ஓடுகிறது.

10. லாங்குல்யா, வம்சதரை:—இவைகள் விசாகப்பட்டணம் ஜில்லாவின் வழியாய்ச் செல்கின்றன.

11. ருஷ்ய குல்யா:—இது கஞ்சம் ஜில்லா வழியாய் ஓடுகிறது.

ஆறும் அத்தியாயம்

தாம்பிரபரணி நதிப்பாசனம்

தாம்பிரபரணி நதியானது திருநெல்வேலி ஜில்லாவின் மேல்பாகத்தில் உற்பத்தியாகிக் கிழக்கே கடலில் போய் சங்கமமாகிறது. இது மேற்குத்தொடர்ச்சி மலையில் உள்ள அகஸ்தியர் மலைக்கூட்டத்தில் பாவநாசமென்னும் இடத்திற்குச் சமீபத்தில் உற்பத்தியாகிறது. இது மலைப்பிரதேசத்தை விட்டுத் தாழ்ந்த சமவெளியில் இறங்கிக் குறைந்த வேகத்தோடு சுமார் 60 மைல்தூரம் சென்று கடலில்விழுகிறது. இந்நதியில் மே மாதம் முதல் 6 மாதம் வரை குறையாமல் ஜலம் வந்து கொண்டிருப்பதால் இதைச் சுற்றியுள்ள பிரதேசங்களில்

ஜலத்தை சாகுபடி செய்வதற்கு உபயோகிக்கிறார்கள். இப்பிரதேசத்திலுள்ள முக்கியமான விளைபொருள் நெல். இந்த ஆற்றிலுள்ள ஜலம், தானாகவே நன்செய் நிலங்களில் ஏறிப் பாயாததால் ஜலத்தைப் பல கால்வாய்கள் மூலமாய் நிலங்களுக்குக்கொண்டு போகிறார்கள்.

மேலும் ஜலம் எக்காலத்திலும் கால்வாய்களில் ஏறிச் செல்லாததால் நதியின் குறுக்கில் பல அணைகள் கட்டிக் கதவுகளின் மூலமாய் ஜலத்தைத் தேக்கிக் கால்வாய்களுக்குக் கொண்டு போகிறார்கள். இவ்விதக் கால்வாய்களும் அணைக்

கட்டுகளும் பல உள. அதில் ஸ்ரீ வைகுண்டம் என்ற இடத்தில் கட்டப்பட்டிருக்கும் அணையும் கால்வாயும் பிரசித்தி பெற்றவை. கோடை காலத்தில் உண்டாகும் பயிருக்குக் குறுவை என்றும் கார் என்றும் பெயர். இது சுமார் மூன்று மாதத்தில் அறுவடையாகி விடும். பின்பு ஐப்பசி கார்த்திகை மாதங்களில், கால மழை பெய்யும்.

அப்போது ஆற்றில் ஜலம் குறைவாக இருந்தாலும் நெற்பயிர் உண்டாவதற்கு வேண்டிய ஜலமும் உஷ்ணமும் குறைவில்லாமலிருப்பதால் அக்காலத்தில் நாலைந்து மாதங்களில் அறுவடை செய்யப்படும் சம்பா நெல் சாகுபடி செய்யப்படுகிறது. ஆகவே தாம்பிரபாணி ஆறுபாயும் அம்பா சமுத்திரம் திருநெல்வேலி முதலிய பிரதேசங்கள் வருஷத்தில் இருமுறை சாகுபடி செய்யப்படுகின்றன.

இந்நதியின் ஜலமானது ஆற்றின் இருபுறங்களிலும் சிறிது தூரத்திற்குத்தான் பிரயோஜனப்படுகிறது. அதற்கு அப்பால் வடக்கிலும் தெற்கிலும் உள்ள பிரதேசங்கள் புன்செய் நிலங்கள். சில விடங்களில் கேழ்வரகு, கம்பு, சோளம் முதலிய புன்செய்ப் பயிர்களும், இன்னும் சில இடங்களில் பருத்தி, வரகு, சாமை முதலியவைகளும் பயிரிடப்படுகின்றன. தாம்பிரபாணியின் தெற்குப் பிரதேசம் மணற் பிரதேசமாகையால் அங்கு பனை மரங்கள் அதிகமாய் வளர்கின்றன. அவைகளிலிருந்து பதனீர் இறக்கிக் காய்த்து, பனைவெல்லம், பனங்கற்கண்டு முதலியவை செய்கிறார்கள். தாம்பிரபாணியின் அருகிலுள்ள திருநெல்வேலி, ஆள்வார் திருநகரி, தெற்கிலுள்ள குலசேகரன் பட்டணம், நாங்குநேரி முதலிய இடங்களில் இயந்திரத்தின் மூலமாய்ப் பனை வெல்லத்திலிருந்து சக்கரை செய்யப்படுகிறது.

இந்நதியின் வடபாகத்திலுள்ள சில புன்செய் நிலங்களில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது, கோவிற்பட்டி என்ற இடத்தில் விவசாய அபிவிர்த்திக்காக ஒருஇடத்தை ஏற்படுத்திப் பல நூதன முறைகளைக் கையாடி வருகிறார்கள். மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள காடுகளில் தேக்கு கருங்காலி வேங்கை முதலிய மரங்கள் உண்டாகின்றன. சேர்மாதேவி, பத்தமடை முதலிய இடங்களில் உயர்ந்த கோரைப்பாய் நெய்யப்படுகிறது.

தாம்பிரபாணி ஆற்றின் வடகரையிலுள்ள திருநெல்வேலி இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணம். இங்கே ஒரு சிவாலயம் இருக்கிறது. ஜூன் மாதந்தோறும் 10 நாட்கள் இங்கு திருவிழா நடக்கும். திருநெல்வேலிக்கும், பாளையங்கோட்டைக்கும் நடுவில் ரெயில்வே ஜங்க்ஷன் இருக்கிறது. இவ்விடத்திற்கு திருநெல்வேலிப் பாலம் என்று பெயர். இங்கு இந்துக் கலாசாலை இருக்கிறது. இதற்கு இரண்டுமைல் தூரத்திற்கப்பால், தென்கரையில் பாளையங்கோட்டை என்ற முக்கிய கிறிஸ்தவப் பட்டணம் இருக்கிறது. இந்த ஜில்லாவின் முக்கிய கச்சேரிகள் எல்லாம் அங்கேதான் அமைந்திருக்கின்றன. இங்கே செவிடர்களும் ஊமையர்களும் கல்வி கற்பதற்கு ஒரு வித்தியாசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் 3 கலாசாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன. இந்த ஜில்லாவின் கீழ்க்கரைக் கடலோரத்தில் தூத்துக்குடி என்ற ஒரு முக்கிய துறைமுகப் பட்டணம் இருக்கிறது. இங்கே வியாபாரம் மிகுதியாய் நடக்கிறதால், இது இந்த இராஜதானியின் இரண்டாவது துறைமுகமாகக் கருதப்படுகிறது. இதிலிருந்து இலங்கைக்குக் கப்பல்கள் வாரத்திற்கு இருமுறை போய் வந்து கொண்டிருக்கின்றன. மேலும் ரங்கூன்,

கராச்சி, பம்பாய் முதலிய இடங்களிலிருந்து வியாபாரக் கப்பல்கள் வந்துகொண்டிருக்கின்றன. சரக்குகள் இங்கிருந்து ரெயில் மார்க்கமாய் இதர உள் நாட்டு ஜில்லாக்களுக்கு அனுப்பப்படுகின்றன. பருத்தியும் நெல்லும் தோலும் இவ்விடத்திலிருந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

தாம்பிரபரணிக்குத் தென் கீழ்பாகத்திலுள்ள மெஞ்ஞானபுரமும் நாசரேத்தும் கிறிஸ்தவர்கள் மிகுந்த பெரிய கிராமங்கள். இவ்விடங்களில் பிரசித்தி பெற்ற கிறிஸ்தவ ஆலயங்களும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு உயர்தர பாடசாலைகளும் போதனுமுறைக் கல்விச்சாலைகளும், சித்திரச் சாலைகளும் இருக்கின்றன.

திருச்செந்தூர்:—சமுத்திரக் கரையிலுள்ள ஒரு சிறந்த சுப்பிரமணிய ஸ்தலம். திருநெல்வேலியிலிருந்து வரும் ரெயில் பாதை இங்கு முடிகிறது.

திருவிழாக் காலங்களில் பற்பல இடங்களிலிருந்து ஜனங்கள் வந்து கூடுவார்கள். தாம்பிரபரணியாற்றின் கரையில் ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி என்ற விஷ்ணுஸ்தலங்களும் இருக்கின்றன.

திருநெல்வேலி ஜில்லாவின் ஜனத்தொகை சுமார் 20,46,204. இங்கு பேசப்படும் முக்கிய பாஷை தமிழ். இது கிறிஸ்தவர்கள் மிகுந்த ஜில்லா. இதன் விஸ்தீரணம் சுமார் 4,336 சதுரமைல்.

ஏழாம் அத்தியாயம்

வைகை நதியும் அதன் பாசனமும்

இந்நதியும் தாம்பிரபரணியைப்போல் மேற்கு மலைத் தொடரிலுள்ள ஆனைமலைக் கூட்டத்தினருகில் உற்பத்தியாகி மதுரை, இராமநாதபுரம், ஜில்லாக்களின் வழியாய் ஓடி மன்னார்

குடாக் கடலில் விழுகிறது. இயற்கையாய் இந்த ஆற்றில் ஜலப்பெருக்கு அதிகமாயில்லை. ஆகையால், மேற்குத் தொ

டர்ச்சி மலையில் உற்பத்தியாகி மேற்கு முகமாய் ஓடிக்கொண்டிருந்த பெரியாற்றில் அணைகட்டி, ஜலத்தைக் கிழக்கு முகமாகத் திருப்பி, வைகையில் விழும்படி ஏற்பாடு செய்கிறார்கள். கோடைகாலத்தில் இந்நதியில் பிரவாகம் கிடையாது. வைகையாறு தாம்பிரபரணியைவிட 2 மடங்கு நீளமாயிருக்கிறது. எனினும் இதன் பக்கத்தில் நன்செய் நிலம் மிகக் குறைவு. பெரியாற்றில் இருந்து வரும் ஜலம் கால்வாய் வழியாக வந்து மேலூர் தாலூகாவில் மாத்திரம் பாய்கிறது. ஆகையால் நன்செய் நிலங்கள் இங்குதான் விசேஷமாய் உண்டு. இந்தப் பாசானத்தில் தான் சோழவந்தான் என்னும் மிக செழிப்பான பிரதேசம் இருக்கிறது.

வைகை நதியின் ஒரு உபநதி இந்த ஜில்லாவின் மேற்குப் பக்கத்திலிருக்கும் பழனி மலையிலிருந்து புறப்படுகிறது. இதில் கீழ்க்காற்றினால் ஐப்பசி, கார்த்திகை, மாதங்களில் மழை பெய்து வைகையாற்றில் வந்து சேருகிறது. வைகைநதி ஓடுகிற வழிக்கு இருபக்கம் உள்ள இடங்களும் மேட்டு நிலங்கள். மதுரைப் பட்டணத்திற்கு அப்பால் இந்த நதி கிழக்கிலுள்ள இராமநாதபுரம் ஜில்லாவின் வழியாய்ச் சென்று, பாக்ஸ் ஜலசந்தி பாண்டியன் கணவாய் என்று சொல்லப்படும் பள்ளத்தாக்கில் விழுகிறது. இது கடலில் விழும் இடத்திற்கு ஆற்றங்கரை எனப் பெயர். இந்த ஆற்றிற்கும் தாம்பிரபரணிக்கும் இடையில் சுமார் 60 மைல் நீளம், 60 மைல் அகலத்திற்கு பருத்தி விளையக்கூடிய கரிசல் மண் பிரதேசம் வியாபித்திருக்கிறது. இதன் வழியாய் தென் இந்திய இருப்புப் பாதையும் செல்லுகிறது. இங்குதான் கோவில் பட்டி, சாத்தூர், முதலிய ரெயில்வே ஸ்டேஷன்கள் இருக்கின்றன.

இந்த ஜில்லாவின் மேற்குப் பாகத்தில் இருக்கும் பழனி மலையில் கோடைகாலத்தில் குளிர்ச்சிக்குப் போய் வசிக்கக் கூடிய கோடைக் கானல் என்னும் பட்டணம் இருக்கிறது. இம்மலையின் மேல் தளம் ஒரு சமவெளி. அங்கு போக்கு வரவிற்கும் சாகுபடி செய்வதற்கும், வீடு கட்டி வசிப்பதற்கும் பல வசதிகள் உண்டு. இதன் நடுவில் ஒரு அகன்ற ஏரியும் இருக்கின்றது. அதிலிருந்து பல அருவிகள் வெளியே செல்லு கின்றன. இப் பிரதேசத்தின் காட்சி மிகவும் அழகாய் இருக் கும். இம்மலைப் பிரதேசத்தின் சமீபத்தில் தென் இந்திய ரயில் பாதை இருக்கிறது. அம்மை நாய்க்கனூர் ஸ்டேஷ னில் இறங்கித்தான் இங்கு போக வேண்டும்.

பழனி மலையைச் சார்ந்த மேட்டுப் பிரதேசத்தில் திண் டுக்கல் என்ற ஸ்டேஷன் சற்று வடக்கில் இருக்கிறது. இதன் வழியாய் வடக்கே இருந்து வரும் ரெயில் இம் மேட் டுப் பிரதேசத்தில் ஏறி மதுரைப் பிரதேசத்தில் கீழ் இறங்கு கிறது. இந்த ரெயில் பிரதேசத்திற்குக் கிழக்கே சிறுமலை இருப்பதைப் பார். இங்கு வாழைகள் அதிகமாய்ப் பயிரா கின்றன. இவ்விடங்களில் உண்டாகும் பழங்களைத்தான் சிறு மலைப்பழம் என்றழைக்கிறோம்.

வடக்கில் இருந்து எதிரிகள் பாண்டியன் நாடாகிய மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுள் பிரவே சிக்காமல் இருக்கும் வண்ணம் திண்டுக்கல் பாறையின்மீது ஒரு பெரிய கோட்டை கட்டப்பட்டிருக்கிறது. இக்கோட் டையில் பாண்டிய அரசர்கள் முன் காலத்தில் சேனை வைத்து நாட்டைக் காத்து வந்தார்கள். திண்டுக்கல் சிறுமலைக் கும் பழனி மலைக்கும் நடுவில் வடக்கே மலை வாசலில் இருக் கிறது. இது ஒரு பெரிய வியாபார ஸ்தலம். இங்கிருந்து

தோல், காப்பிக்கொட்டை, புகையிலை முதலியன வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. சுருட்டுகள் விசேஷமாய் செய்யப்படுவதின் காரணம் யாதெனில், புகையிலைச்செடி நன்றாய்ப் பயிரிடக்கூடிய சுண்ணும்பு சம்பந்தமான மண்ணும், ஜலமும் ஏற்பட்டிருக்கின்றன. இங்கு புகையிலையைப் பக்குவம் செய்வதற்கு ஆயிரக்கணக்கான வேலைக்காரர் உண்டு. மேலும் இங்கே அழகான வெண்கலப் பாத்திரங்களும் செய்யப்படுகின்றன. இது ஒரு ரெயில்வே ஜங்ஷன். இதிலிருந்து போத்தனூருக்கு ஒரு கிளைப்பாதை போடப்பட்டிருக்கிறது.

1. மதுரைப் பட்டணம்

அம்மலைகளுக்குத் தெற்கே சற்று தாழ்வான பிரதேசத்தில் இருக்கிறது. மதுரை ஜில்லாவின்பெரிய பட்டணம். இது தென் இந்தியாவிலுள்ள பட்டணங்களுள் மிகப் பெரியதும் சிறப்பு வாய்ந்ததுமாய் இருக்கிறது. இங்குள்ள மீனாட்சியம்மை கோயில் மிகப் பிரசித்தி பெற்ற தேவாலயங்களில் ஒன்று. இதன் அகலம் 350 அடி, நீளம் 750 அடி. இதற்கு 4 கோபுரங்கள் உள. அவற்றில் மூன்றின் உயரம் 150 அடி. இங்கே ஆயிரக்கால் மண்டபம் ஒன்று இருக்கிறது பாண்டியர்களுக்குப் பின்பு இந்நாட்டை யாண்ட நாயக்க ராஜாக்கள் காலத்தில் கட்டப்பட்ட திருமல் நாயகன் மஹால் மிகவும் விசித்திரமானது. இதுவன்றி மதுரையில் அழகான தெப்பக்குளம் ஒன்றிருக்கிறது. இதில் வருஷத்திற்கொரு முறை மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமிக்கு உற்சவம் நடக்கும். இந்தப் பட்டணத்தில் நெசவுத் தொழில் சௌராஷ்டிரர்களால் நடத்தப்படுகிறது. இங்கிருந்து மதுரைப் புடவைகள் என்ற பலவித சாயத் துணிகளும் வெண்மையான ஜரிகைகளும் தென்னிந்தியா முழுவதும் விற்கப்படுகின்றன. மேலும் தற்

காலத்தில் இது ஒரு பெரிய ரெயில்வே ஜங்ஷன். இது ஒரு பெரிய முனிசிபாலிட்டி பட்டணம். வீதிகள் எங்கும் மின்சார விளக்குகள் ஏற்றப்பட்டிருக்கின்றன. இப்பட்டணத்



திருமல் நாயகன் மஹால்

தில் இரண்டு உயர்தரக் கலாசாலைகளும் இன்னும் பல கல்விச் சாலைகளும், நூல் நூற்கும் இயந்திரசாலையும் இருக்கின்றன.

நீலகிரியின் அடிவாரத்தில் மேட்டுப்பாளையம் இருப்பது போல், பழனிமலையின் அடிவாரத்தில் பெரிய குளம் என்ற

விசேஷித்த இடம் உண்டு. இங்குள்ள சிவாலயத்தைச் சேர்ந்திருக்கும் குளம் மிகப் பெரியதாகையால் இவ்விடத்திற்குப் பெரிய குளம் எனப் பெயர்.

•. பழனி :—இது முக்கியமான சுப்பிரமணிய ஸ்தலம். இங்கு வர்த்தகம் அதிகம்.

இந்த ஜில்லாவின் விஸ்தீரணம் சுமார் 4,916 மைல். இங்கு வழங்கப்படும் பாஷை தமிழ். சுமார் 20 லக்ஷம் ஜனங்கள் இதில் வசிக்கிறார்கள். நெல்லும் சோளமும் முக்கிய விளை பொருள்கள். மேய்ச்சலுக்கு வசதியான இடங்கள் இருக்கிறபடியால் ஆடுமாடுகளை விசேஷமாய் வளர்க்கிறார்கள். இது உள்நாட்டு ஜில்லாவானதால் கோடைகாலத்தில் அதிக உஷ்ணமாயிருக்கும்.

2. இராமநாதபுரம் ஜில்லா

இது முழுவதும் சமவெளிப் பிரதேசம். இதன் மத்தியில் வைகை நதி யோடிக் கடலில் விழுகிறது. ஜில்லாவின் கிழக்கிலும் தென்கிழக்கிலும் பாக்ஸ் ஜலசந்தியும், மன்னார் வளைகுடாவும் இருக்கின்றன. இதனருகில் இராமேஸ்வரம் இருக்கிறது. இதற்கும் மண்டபத்திற்கும் மத்தியிலுள்ள சமுத்திர பாகத்திற்கு பாம்பன் என்று பெயர். இவ்விடத்தில் இரண்டு சமுத்திரங்களாகிய மஹோநதி அல்லது வங்காளக் குடாக்கடல், ரத்நாகரம் அல்லது இந்து மகா சமுத்திரம் என்பவை கூடுகின்றன. பாம்பன் ஜலசந்தி இவ்விடத்தில் சுமார் அரை மைல் அகலம் இருக்கும். இங்கு ஒரு ரெயில் பாலம் கட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பாலத்தின் நடுவில் சுமார் 100 அடி அகலத்திற்கு பெரிய படகுகள் குறுக்கிட்டுப் போகும்படியாகத் தொங்கு பாலம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இப்பாலம் ஏற்பட்ட பின்பு மண்டபத்தி

லிருந்து இராமேஸ்வரம் வரையில் ரெயில் பிரயாணம் செய்து தனுஷ்கோடியில் நீராவிப் படகில் ஏறி, சுமார் 30 மைல் தூரம் சென்று இலங்கை சேருகின்றனர். இங்குள்ள மசூதியை 300 வருஷங்களுக்கு முன் தஞ்சாவூர் அரசர் கட்டினதாகச்



பாம்பன் பாலம்

சொல்லப்படுகிறது. இது ஒரு யாத்திரை ஸ்தலம். இதன் விஸ்தீரணம் 4800 சதுர மைல். 17 லக்ஷம் ஜனத்தொகை.

இராமநாதபுரம்:—இது ஜில்லாவின் முக்கிய பட்டணம் இந்த ஜில்லாவின் கலெக்டர் மதுரையில்தான் வசிக்கிறார் இராமநாதபுரம் ஜமீன் பட்டணம். இந்த ஜமீனுடைய பட்டப் பெயர் சேதுபதி. மேலும் சிவகங்கை என மற்றொரு ஜமீனும் இந்த ஜில்லாவிலிருக்கிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர்:—இது ஒரு பெரிய விஷ்ணு ஸ்தலம். மார்கழி மாதத்தில் இவ்விடத்தில் விசேஷித்த திருவிழா

நடக்கும். இங்கு இரண்டு ஹைஹ ஸ்கூல்கள் இருக்கின்றன. சமீப காலத்தில் இது ஒரு ரெயில்வே ஸ்டேஷனுகி விட்டது. சென்னையிலிருந்து திருவனந்தபுரத்திற்குச் செல்லும் முக்கிய ரெயில் வண்டிகள் விருதுநகர் ஜங்கஷனிலிருந்து பிரிந்து இவ்விடத்தின் வழியாய் செங்கோட்டையை அடைகின்றன.

விருதுநகர்:—இங்கு பஞ்சாலைகள் பல இருக்கின்றன. மேலும் இவ்விடத்தில் நாடார் ஹைஹஸ்கூல் ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. செல்வாக்குள்ள வியாபாரிகள் பலர் இங்குண்டு. இது தென் இந்திய இருப்புப் பாதையில் ஒரு ஜங்ஷனுகவும் இருக்கிறது.

தேவக்கோட்டை:—இங்கு நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள் விசேஷம். அவர்கள் வியாபாரத்தில் சமர்த்தர்கள்; பர்மா, சிலோன், சிங்கப்பூர், பீனங் முதலிய இடங்களுக்குச் சென்று வியாபாரம் செய்து தகுந்த லாபத்தை அடைகின்றனர். தர்ம விஷயமாய் இவர்கள் அதிகமாய்ச் செலவு செய்வதுடன் பல சத்திரங்கள் சாவடிகள் கட்டி, தேவாலயங்களைப் புதுப்பிக்கிருர்கள்.

எட்டாம் அத்தியாயம்

காவேரி நதிப்பாசனம்

காவேரி நதி மேற்குத் தொடர்ச்சி நதியின் ஒரு பாகமாகிய குடகு ராஜ்யத்திலுள்ள பிரம்ம கிரி மலையில் தலைக் காவேரி என்னுமிடத்தில் உற்பத்தியாகிறது. இது தென் கிழக்காய் மைசூர் மேட்டுப் பிரதேசத்தின் வழியாய் ஓடுகிறது. இது ஓடும் 200 மைல் தூரத்திலும், சுமார் 40 மைல் தூரம் சமவெளியா யிருக்கிறது. அப்படியிருந்தும் பக்கத்து நிலங்

களில் தானாய் ஏறிப் பாய்கிறதில்லை. ஆகையால் மைசூர் இராஜ்யத்தில் 12 அணைகளைக் கட்டித் தண்ணீரைத் தேக்கிப் பக்கத்திலுள்ள நிலங்களுக்குப் பாய்ச்சுகிறார்கள்.



மைசூர் இராஜ்யத்தைத் தாண்டியபின் இந்நதி கிழக்கு மலைத் தொடரிலுள்ள ஒரு பிளவின் மூலமாய் 300 அடி உயரத்திலிருந்து கீழே விழுகிறது. இதற்குச் சிவசமுத்திர நீர் வீழ்ச்சி என்று பெயர்.

இந் நீர்வீழ்ச்சிக்கப்பால் இந்நதி தெற்கு முகமாய்த் திரும்பி, சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களின் எல்லையாய் ஓடி; பின்பு, கிழக்கு முகமாய்த் திரும்பி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களின் வழியாய் ஓடிப்பல சிற்றாறுகளாகப் பிரிந்து, தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த சீர்காழித் தாலூகாவிலுள்ள காவிரிப்பூம் பட்டினம் என்னும் கிராமத்திற் கருகில் வங்காளக் குடாக்கடலில் கலக்கிறது. இந்நதியின் நீளம் 475 மைல். இது திருச்சிராப்பள்ளிக்குச் சமீபத்தில் இரண்டு பிரிவுகளாகப் பிரிகிறது. வடகிழக்குப் பிரிவிற்குக் கொள்ளிடம் என்றும், தென்கிழக்குப் பிரிவிற்குக் காவேரி என்றும் பெயர். இவ்விரண்டு பிரிவிற்கு மிடையிலுள்ள தீவிற்கு ஸ்ரீரங்கம் எனப் பெயர்.

இந்நதியின் உபநதிகளில் முக்கியமானது பவானி, நொய்யல், அமராவதி. பவானி நதி நீலகிரி மலையில் இரண்டு உபநதிகளாக உற்பத்தியாகிப் பின்பு ஒன்று சேர்ந்து பவானி என்னுமிடத்தில் காவேரியில் கலக்கிறது. இதன் நீளம் சுமார் 100 மைல். இந்நதிக்கரையிலுள்ள முக்கிய பட்டணங்களாவன:—மேட்டுப் பாளயம், சத்திய மங்கலம், பவானி என்பன.

நொய்யல் நதி நீலகிரி மலையில் உற்பத்தியாகி, கோயம்புத்தூர் ஜில்லாவின் வழியாய்ப் பாய்ந்து காவேரியுடன் கலக்கிறது.

அமராவதி:—இது ஆனைமலையில் உற்பத்தியாகி, கோயம்புத்தூர் ஜில்லாவின் தென் பாகமாய்ச் சென்று, திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள கரூர் என்னும் பட்டணத்திற் கருகில் காவேரியுடன் கலக்கிறது. இதன் நீளம் ஏறக்குறைய 150 மைல்.

1. கோயம்புத்தூர் ஜில்லா

கோயம்புத்தூர் ஜில்லாவின் வழியாய் நீலகிரி மலையிலிருந்து வரும் பவானி நதியும் ஆனைமலையிலிருந்துவரும் அமராவதி நதியும் பாய்கின்றன. இவ்விரு மலைகளுக்கும் நடுவிலுள்ள ஒரு பாகத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் சுமார் 16 மைல் அளவில் ஒரு பிளப்பு உண்டாயிருக்கிறது. இதற்குப் பாலக்காட்டுப் பிளப்பு என்றுபெயர்.

இந்தியாவின் மேல் கரையில் ஆனி, ஆடி மாதங்களில் வீசும் மேல் காற்றானது, இத்திறப்பின் வழியாகச் சென்று சிறிது மழையைக் கோயம்புத்தூர் ஜில்லாவில் வருஷிக்கச் செய்கிறது. அக்காலத்தில் கோடைப் பயிர்களாகிய கரும்பு, புகையிலை, பஞ்சு முதலியவைகள் கோயம்புத்தூரில் அதிகமாய்ப் பயிர் செய்யப்படுகின்றன. இந்த ஜில்லாவில் ஓடும் அமராவதி, பவானி, நொய்யல் என்ற மூன்று ஆறுகளின் பக்கங்களில் மாத்திரம் நெல் சாகுபடியாகிறது. மற்றைய இடங்கள் முக்கியமாய் மலைப் பிரதேசங்கள்.

இந்த ஜில்லாவில் கோயம்புத்தூரில் துணியும், கொள்ளேகாலில் பட்டுத்துணியும், பவானியில் ஜமுக்காளமும் விசேஷமாய் நெய்கிறார்கள். இந்த ஜில்லாவில் தோல் வியாபாரம் அதிகம். இதற்குக் காரணமென்ன? கோயம்புத்தூரிலும் மேட்டுப்பாளையத்திலும் தோல் இயந்திரசாலைகள் இருக்கின்றன். மேலும் ஆடு மாடுகளுக்கு மிகவும் பிரசித்திபெற்ற ஜில்லா. இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 12,19,848. இதன் விஸ்தீரணம் 7196 சதுர மைல். வருஷத்தில் சராசரி 26 அங்குல மழை இந்த ஜில்லாவில் பெய்கிறது. மலை நாட்டில் காப்பி பயிராகிறது. காடுகள் இங்கே விசேஷமாக உண்டு.

கோயம்புத்தூர்:—இது ஜில்லாவின் முக்கிய பட்டணம். சமுத்திர மட்டத்திற்குமேல் சுமார் 1250 அடி உயரத்தி லிருக்கிறபடியால் தேகத்திற்கு மிகவும் சௌக்கியம் உள்ளது. இங்கு தோலைப் பதனிட்டு அநேக விதமான சாமான்கள் செய்வதற்கு இயந்திர சாலைகள் இருக்கின்றன. இவ்விடத்தில் காப்பிக்கொட்டையை இயந்திரத்தில் வைத்து வறுத்துப் பொடி செய்து, டப்பிகளில் அடைத்து அயல் இடங்களுக்கு அனுப்புகிறார்கள். இங்கு விவசாய சம்பந்தமான ஒரு கலா சாலையும், (Agricultural College) காட்டிலாக்கா பாட சாலையும், (Forest School) ஒரு சர்வகலாசாலையும் துரைத் தனத்தாரால் நடத்தப்படுகின்றன. இது தவிர வேறு மூன்று ஹைஸ்கூல்களும் இங்கு உண்டு.

ஈரோடு:—காவேரி நதிக்கரையிலிருக்கும் ஒரு பெரிய வர்த்தக ஸ்தலம். இங்கு சென்னையிலிருந்து வருகிற பெரிய இருப்புப்பாதை வண்டித்தொடரும், திருச்சினாப்பள்ளியி லிருந்துவரும் சிறிய இருப்புப்பாதை வண்டித் தொடரும் சந்திக்கின்றன. இவ்விடத்தில் இரண்டு ஹைஸ்கூல்களிருக் கின்றன. இவ்விடத்தின் விசேஷம் நாளடைவில் அதிகரித் துக்கொண்டே வருகிறது.

மேட்டூர்:-இதன் சமீபத்தில் காவேரியின் பெரிய அணைக் கட்டு சர்க்காரால் தற்சமயம் கட்டி முடிவு பெற்றிருக்கிறது. இவ்விடத்திலிருந்து மின்சாரசக்தி உண்டு பண்ணி, பற்பல பட்டணங்களுக்கு கம்பிகள் மூலமாய்க் கொண்டு போய்ப் பல்வேறு விதமாய் உபயோகப் படுத்துகிறார்கள் இந்த ஜில்லா வில் திருப்பூர், தாராபுரம், பொள்ளாச்சி, உடுமல்பேட்டை முத லிய பெரிய வர்த்தக ஸ்தலங்களும் இருக்கின்றன.

2. சேலம் ஜில்லா

இது கிழக்கு சமுத்திர தீரத்திற்கும், பாலக்காட்டுக் கணவாய்க்கும் சற்று தூரத்திலிருப்பதால், மழை மிகவும் குறைவாய்ப் பெய்கிறது. இந்த ஜில்லாவின்வடபாகம் மைசூர் பீடபூமியைச் சேர்ந்தது. தென்பாகம் கர்நாடக சமவெளியை ஒத்திருக்கிறது. மைசூர் பூடபூமியைச் சேர்ந்த பாகம் தேகத்திற்கு ஆரோக்கியமானது. தாழ்ந்த சமவெளிப் பிரதேசத்தில் ஜ்வரம் உண்டாகும். மழை அதிகமில்லாததால் கிணறுகளே விவசாயத்துக்கு ஆதாரமாக இருக்கிறது. காடுகள் அதிகமாக இருக்கிறபடியால் விவசாயத்துக்கு உபயோகப்படாமல் இருக்கிற நிலம் அதிகம் உண்டு. காடுகளில் சந்தன மரங்கள் விசேஷமாய் வளர்கின்றன.

சேர்வராயன் மலையில் காப்பி, ஏராளமாய்ப் பயிராகின்றது. கேழ்வரகும், கம்பும் முக்கிய விளைபொருள்கள். பருத்தி சிற்சில இடங்களில் பயிராகிறது. பருத்தியைக் கொண்டு நூல் நூற்று நெசவுத் தொழில் அதிகமாய்ச் செய்து வருகிறார்கள். நூல் நூற்பதற்கு, கோயம்புத்தூர் ஜில்லாவும் சேலம் ஜில்லாவும் அனுகூலமாயிருக்கின்றன. கோடை காலத்திலும், மழை காலத்திலும் இங்கு சிறிது மழை ஏற்படுவதாலும் ஜில்லாக்கள் மேடா யிருப்பதாலும், உஷ்ணம் குறைந்து காற்று ஈரமாகவே இருக்கின்றது. இவ்வித ஈரக் காற்றே நூல் நூற்பதற்கு மிகவும் அனுகூலமா யிருக்கின்றது. மேலும் இந்த ஜில்லாக்களில் பட்டுப்பூச்சிகளை வளர்க்கின்றனர். ஆகவே பட்டு நெசவும் செய்யப்படுகின்றது.

மேற்கூறிய இரண்டு ஜிலலாக்களிலும் சாகுபடி செய்ய முடியாத கற்பாறைப் பிரதேசம் அதிகம் உண்டு. இதில் கீழ்

மண் குறைவாயிருப்பதால் சிறிது காலம் ஜீவித்தோங்கும் புல் மட்டும் நன்கு வளரும். ஆகையால் இங்கு ஆடு மாடுகள் விசேஷமாய் வளர்க்கப்படுகின்றன. மாடுகளிலிருந்து நெய் தயாரித்து, டின்களிலடைத்து வெளி ஜில்லாக்களுக்கு அனுப்புகிறார்கள். ஆடுகளின் தோலைப்பதனிட்டு வெளித்தேசத்திற்கு அனுப்புகிறார்கள். ஆட்டின் ரோமத்தைக் கம்பளிகளாக நெய்கிறார்கள்.

இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 21,12,034. இதன் விஸ்தீரணம் 6,300 சதுர மைல்.

13 JUL 1933

சேலம்:—இதுவே இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணம். இது சேர்வராயன் மலையின் அடிவாரத்திலிருக்கிறது. ஜில்லா உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் இங்கு வசிக்கிறார்கள். இங்கே துணி நெசவு வேலை மிகுதியாய் நடைபெறுகிறது சிறந்த ஜமுக்காளங்கள் சேலம் சிறைச்சாலையில் கைதிகளால் செய்யப்படுகின்றன. இது மாம்பழத்திற்குப் பேர்பெற்ற இடம். இப்பட்டணத்தில் செய்யப்படும் வெட்டுக் கருவிகள், தென்னிந்தியாவில் மிகவும் பிரசித்தி பெற்றவை. இங்கே ஒரு முனிசிபல் காலேஜும் மிஷன் ஹைஸ்கூலும் உண்டு. மேலும் இது ஒரு பெரிய ரெயில்வே ஜங்ஷன்.

ஹோசூர்:—இது பெங்களூருக்கு 24 மைல் தூரத்தில் இருக்கிறது. வசிப்பதற்கு ஏற்ற இடம். சிலகாலம் இது ஜில்லாவுக்கு முக்கிய பட்டணமாக இருந்தது. இதன் சமீபத்தில் திப்பு சுல்தானால் கட்டப்பட்ட கோட்டை ஒன்று இருக்கிறது. இங்கே இராஜாங்கத்தார் இராணுவத்திற்கு வேண்டிய குதிரைகள் வைத்து வளர்க்கிறார்கள்.

கிருஷ்ணகிரி:—இவ்விடத்திற்குத் திருப்பத்தூரிலிருந்து ஒரு கிளை இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது. இந்த

இடம் ஒரு செங்குத்தான குன்றினடியில் இருக்கிறது. திரா க்ஷையும் மாம்பழமும் இங்கே விசேஷம்.

3. நீலகிரி ஜில்லா

உயர்ந்த மலைகளின்மீது வியாபித்திருப்பதால், இதன் சீதோஷ்ணமும், பயிரும், மனித வாழ்க்கையும் மற்றைய ஜில்லாக்களைப்போலல்லாமல் வேறுபட்டு இருக்கின்றன. இந்த ஜில்லா, கிழக்குத் தொடர்ச்சி மலையும், மேற்குத் தொடர்ச்சி மலையும் சேருமிடத்தில் இருக்கிறது. இவ்விடத்தில் ஆகாயம் கோடைகாலத்தில்கூட குளர்ச்சியாயிருக்கும். குளிர்காலத்தில் அதிகக் குளிரினால் ஜலம்கூட உறைந்துவிடும். ஆகையால் இங்கு உஷ்ண தேசத்துப் பயிர் உண்டாக மாட்டாது. கோதுமையும் உருளைக்கிழங்கும் விசேஷமாகப் பயிராகின்றன. யூகாலிப்டஸ், சிங்கோனு என்னும் குளிர் தேசத்து மரங்கள் இங்குண்டு. இவைகளிலிருந்து மருந்துச் சரக்குகள் செய்யப்படுகின்றன. இம் மலைப்பிரதேசம் மனிதர்கள் வசிப்பதற்கு ஏற்ற மேடு பள்ளமில்லாத சமவெளிகளாயிருக்கின்றன. இதன் உச்சியை ஒரு சிறு பீடபூமி என்று அழைக்கலாம். மேலும், உயர்ந்த மலைவரிசைகளும் தாழ்ந்த பள்ளத்தாக்குகளும், இந்த ஜில்லாவின் ஊடே இல்லாததால் ரஸ்தாக்கள் போடுவது மிகவும் சுலபமாயிருக்கிறது. நீலகிரியின் அடிவாரத்திலுள்ள கோயம்புத்தூரிலிருந்து மேலே வருவதற்கு இருப்புப் பாதையும் ஏற்பட்டிருக்கிறது.

நம் இராஜதானியின் கவர்னரும், மற்றும் உத்தியோகஸ்தர்களும் இங்குதான் கோடை காலத்தில் கச்சேரி செய்கிறார்கள். மேலும் ஐரோப்பியர்களும், இந்திய கனவான்களும் கோடை காலத்தில் குளிர்ச்சிக்காக அங்கு செல்கின்றனர்.

இங்கே சீதோஷ்ண ஸ்திதி சீமை தேசைத்தைப் போல் இருக்கும்.

இந்த ஜில்லாவிலுள்ள சுதேச ஜனங்கள் தோடர்கள். மலையின் சரிவுகளிலும், குன்றுகளிலும், புல் அதிகமாய் வளர்வதால் இவர்கள் மாடுகளையும் எருமைகளையும் மேய்த்து ஜீவனம் செய்து வருகிறார்கள். மலைச்சரிவுகளில் காப்பித் தோட்டங்களும் நன்றாய் விருத்திக்கு வருகின்றன. இம்மலைப் பிரதேசத்தின் சராசரி உயரம் 6,500 அடி. இதில் உயரமான பல சிகரங்களுண்டு. தோட்டப்பெட்டா என்பதின் உயரம் 8640 அடி. மேலும் இதில் 6000 அடி உயரத்தில் குன்னூரும், 6100 அடி உயரத்தில் உவெல்லிங்டனும், 6,500 அடி உயரத்தில் கோடைகிரியும், 7000 அடி உயரத்தில் உதகமண்டலமும் இருக்கின்றன. இவைகள் கோடைக்காலத்தில் சௌக்கியத்திற்காகப் போய் தங்குமிடங்கள். குன்னூரில் பைத்தியம் பிடித்த நாய் நரிகள் கடிக்குச் சிகிச்சை செய்ய ஆஸ்பத்திரி ஒன்று இருக்கிறது. உவெல்லிங்டனில் ஒரு ஐரோப்பிய இராணுவ சேனை வைக்கப்பட்டிருக்கிறது. உதகமண்டலம் கோடைகாலத்தில் சென்னை இராஜதானியின் இராஜாங்க ஸ்தானமாயிருப்பதால், அங்கு சர்க்காரால் பல உத்தியோக ஸ்தலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 12,660 இதன் விஸ்தீரணம் 4,009 சதுர மைல்.

4. காவேரி டேல்டாவிலுள்ள ஜில்லாக்கள்

இந் நதியானது மேற்கூறிய சேலம் கோயம்புத்தூர் ஜில்லாக்களைக் கடந்து கிழக்கு முகமாகத் திரும்பி திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களின் வழியாகப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது. இந்த இரண்டு ஜில்லாக்களிலும்



திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை.

இது முழுவதும் சமவெளிப் பிரதேசத்தில் பாய்வதால் பாசானத்திற்கு அனுகூலமாயிருக்கிறது. மேலும் இந்நதி இவ்விடங்களில் பலகிளைகளாகப் பிரிந்து சுமார் 100 மைல் அகலமுள்ள டெல்டாப் பிரதேசத்தை உண்டுபண்ணுகிறது. இப்பிரதேசத்தின் செழிப்பையும், அதில் உண்டாகும் பயிர்களையும் பற்றி முன் கவனித்தோம்.

இந்நதிப் பாசனத்தில் இருக்கும் ஐந்து ஜில்லாக்களும் ஒரு காலத்தில் சோழ இராஜ்யமாக இருந்தது. இதற்குத் தெற்கே பாண்டிய நாடும் மேற்கே சேர நாடும் இருந்தன. இவ்வித மூன்று நாடுகளும் ஒன்றை யொன்று அடுத்திருந்ததால் அவர்களுக்குள் அடிக்கடி சண்டை நேரிடுவதுண்டு. ஆகவே ஒவ்வொரு அரசனும் இராஜ்ய பரிபாலனம் பண்ணுவதற்கு நாட்டின் மத்தியில் சில பட்டணங்களையும், எதிரிகள் வராமல் தடுப்பதற்கு நாட்டின் எல்லைகளில் சில பட்டணங்களையும் அயல் தேச வியாபாரத்திற்காக சமுத்திர தீரத்தில் சில பட்டணங்களையும் ஏற்படுத்தியிருந்தனர்.

சோழ நாட்டிலுள்ள திருச்சினப்பள்ளி பாண்டிய நாட்டு எதிரிகளை எதிர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் பட்டணம். இப்பட்டணத்தின் இரண்டு பக்கங்களிலும் ஆறுகள் ஓடுவதால், எதிரிகள் எளிதில் அதை அணுகமுடியாது. மத்தியிலிருக்கும் பாறைமீதிருந்து எதிரிகளின் வரவைப் பார்த்துத் தடுப்பது மிகவும் சுலபம். இக்காலத்தில் இது இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணமாக இருக்கிறது. மேலும், இது தென் இந்திய இருப்புப்பாதையின் மத்தியிலிருப்பதால் இதற்கு ஒரு விதச் சிறப்பு ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு பெரிய ஜங்ஷன். இதன் நூதன அமைப்பு மிகவும் வியக்கத்தக்கது. இதற்குச் சமீபத்தில் ரெயில்வே தொழிற்சாலை (Workshop) ஒன்று

பொன்மலையில் ஏற்படுத்தியிருக்கிறது. மலையடிவாரத்திலுள்ள தெப்பக்குளத்திற் கருகில் மூன்று கலாசாலைகளும் இன்னும் பல கல்விச்சாலைகளும் இருக்கின்றன. இது ஒரு பெரிய வியாபார ஸ்தலம். சுருட்டு செய்தல், ஜோடு தைத்தல், நகைகள் செய்தல் முதலிய கைத்தொழில்களுக்குப் பேர்போனது.

இப்பட்டணத்திற்கு இரண்டு மைல் தூரத்தில் காவேரியாற்றின் நடுவில் ஸ்ரீரங்கம் என்ற ஒரு தீவு இருக்கிறது. இது ஏழு மதில்களால் சூழப்பட்டிருக்கின்றன. மதில்களின் நடுவில் விஷ்ணு கோவிலும் ஒவ்வொரு மதில்களுக்கும் இடையில் வீடுகளும் கடைகளும் இருக்கின்றன. இது மிகவும் புராதனமான க்ஷேத்திரமாக இருப்பதால், இவ்விடத்திற்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வருகிறார்கள்.

கரூர்:—இது அமராவதி நதி காவேரியோடு சேருமிடத்திலிருக்கிறது. இது ஒரு பெரிய வர்த்தகஸ்தலம். இங்கே கைத்தொழில் சாலை ஒன்று இருக்கிறது. இவ்விடத்தில் ஆலயத்தில் ஐந்து அடி உயரமுள்ள லிங்கம் ஒன்று இருக்கிறது.

முசரி:—இது காவேரிக் கரையில் குளித்தலைக்கு எதிராக இருக்கிறது. இங்கு தாசில்தார், டிப்டி கலெக்டர் இவர்களுடைய கச்சேரிகள் இருக்கின்றன. சுற்றுப் பக்கங்களில் உள்ள பிரதேசங்களில் விளையும் பொருட்களை ஒன்று சேர்ப்பதில் குளித்தலையும், முசரியும் முக்கியமான இடங்களாகின்றன. இங்கு ஒரு ஹைஸ்கூலும் இருக்கிறது.

உடையார் பாளையம்:—இது இந்த ஜில்லாவிலுள்ள ஒரு பெரிய ஜமீன் நாடு.

இந்த ஜில்லா பொதுவில் சமமான பிரதேசமெனினும், தெற்கில் தனித்தனியான சில குன்றுகளும், வடமேற்கில் பச்சை மலையும் இருக்கின்றன. வெள்ளாறு இந்த ஜில்லாவிற்கு வடக்கே, இதற்கும் தென்னாற்காட்டு ஜில்லாவிற்கும் மத்தியில் ஓடுகிறது. இது உள்நாட்டு ஜில்லாவாயிருப்பதால் கோடை காலத்தில் சற்று உஷ்ணமாகவே இருக்கும். ஆனால் பெரும்பாலும் தேக சௌக்கிய முள்ளது. இங்கே மழை சராசரி வருஷத்திற்கு 43 அங்குலம் பெய்கிறது. புன்செய்ப் பயிர்களில் சோளம், பருத்தி, கேழ்வரகு, புகையிலை அதிகமாய்ப் பயிரிடப்படுகின்றன. இந்த ஜில்லாவில் சடையினால் விதவிதமான பொருட்கள் செய்கிறார்கள். ஜில்லாவின் ஜனத்தொகை 19,02,838. இதன் விஸ்தீரணம் சுமார் 4,935 சதுர மைல்.

5. தஞ்சாவூர் ஜில்லா

இந்த ஜில்லா கடற்கரை யோரத்தில் வியாபித்திருக்கிறது. இந்த ஜில்லாவில் மலை யென்பதேகிடையாது. ஜில்லாவின் பெரும்பாகம் காவேரி யாற்றின் டெல்டாவிலிருப்பதால் மிகவும் செழிப்புற்று விளங்குகிறது. இந்த ஜில்லாவில் நெல், தென்னை, வாழை, எள்ளு, மணிலாக் கொட்டை முதலியன அதிகமாயுண்டாகின்றன. நெல் வயல்களுக்கு மத்தியில் கரும்புத் தோட்டங்களும், தென்னந் தோப்புகளும், வாழைத் தோட்டங்களும், வெற்றிலைத் தோட்டங்களும் எங்கு சென்றாலும் பார்க்கலாம். இந்த ஜில்லாவைத் தென்னிந்தியாவின் நெற்களஞ்சியமென்றும், சிங்காரத் தோட்டமென்றும் சொல்வதுண்டு. இங்கு ஜன நெருக்கம் அதிகம். இங்கு அநேக கிராமங்களும் பட்டணங்களும்

இருக்கின்றன. இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 23,26,265. இதன் விஸ்தீரணம் சுமார் 3,727 சதுர மைல்.

தஞ்சாவூர்:—இது ஜில்லாவின் முக்கிய பட்டணம். காவேரி நதியின் கிளை நதியான வெண்ணாற்றின் கரையில் இருக்கிறது. இது ஓர் காலத்தில் சோழ ராஜாக்களின் இராஜதானிப்பட்டணமாக இருந்தது. பின்பு சிவாஜி வம்சத்தாரான



தஞ்சாவூர் கோபுரம்.

மஹாராஷ்டிர அரசர்களின் ஆதீனத்திலிருந்தது. இவர்கள் வசித்துவந்த அழகான அரண்மனையும் கோட்டையும் இக்காலத்திலும் இருக்கின்றன. இவ்வரண்மனையிலுள்ள ஸரஸ்வதி மஹால் என்ற புராதன புஸ்தகசாலையில் பல கிரந்தங்கள்

இருக்கின்றன. இப்பட்டணத்தில் சோழ இராஜாக்களால் கட்டப்பட்ட பல கோவில்களிருக்கின்றன. இவைகளில் பிரஹதீசுவரர் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்றது. இக்கோபுரத்தின் நிழல் தரையில் விழாவண்ணம் கட்டப்பட்டிருக்கிறது. இக்கோவிலினுள் கல்லினால் செய்யப்பட்ட ஒரு நந்தி யுண்டு. இது பட்டுச் சேலைக்குப் பிரசித்திபெற்ற இடம். தாமிரத்திலும் பித்தளையிலும் பலவிதமான பாத்திரங்கள், ஆயுதங்கள், தட்டுகள் முதலியன செய்கிறார்கள். சந்தன மரம், தந்தம், நெட்டி முதலியவைகளினால் செய்யப்படும் சித்திர வேலைகளுக்குத் தஞ்சாவூர் பேர் போனது. இது ஒரு பெரிய ரெயில்வே ஸ்டேஷன்.

கும்பகோணம்:—இது காவேரி நதியின் கரையிலிருக்கிறது. இங்கு 12 வருஷத்திற் கொருமுறை மஹாமகம் என்ற ஒரு விசேஷ உற்சவம் நடைபெறும். அன்றைய தினம் கங்கை இங்கு வருகிறதென்றும், அதில் ஸ்நானம் செய்தால் புண்ணியமென்றும் எண்ணி, இந்தியாவில் பல இடங்களிலிருந்தும் ஜனங்கள் வருகிறார்கள். இவ்விடத்தில் பல உயர்தர பாடசாலைகளும், ஒரு துரைத்தன முதல்தர கலாசாலையும் இருக்கின்றன. வெகு உலோக வேலைகளும், நெசவு வேலையும் முக்கியமான கைத்தொழில்கள்.

நாகப்பட்டணம்:—இது காவேரி டெல்டாவிலுள்ள ஓர் துறைமுகம். ஆனால் கப்பல்கள் கரையோரம் வரமுடியாது. படகுகள் மூலமாய் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்றன. இப்பட்டணத்தின் மூலமாய் ரங்கூனிலிருந்து அரிசியும், தேக்கு மரமும், சிம்மளத்திலிருந்து பாக்கும், இறக்குமதியாகின்றன. இங்கிருந்து நெல், புகையிலை, சுருட்டு, தோல் முதலியவைகள் ஏற்றுமதியாகின்றன. இங்கே தென்னிந்திய

இருப்புப்பாதை வண்டிகள் செய்கிறார்கள். இது இரும்புப் பெட்டிகளுக்குப் பெயர் போன இடம்.

இப்பட்டணத்திற்குச் சிறிது வடக்கில் முகம்மதியர்களுக்கு முக்கியமான நாகூர் என்னும் யாத்திரை ஸ்தலம் இருக்கிறது. இதைத் தவிர மாயவரம், மன்னார்குடி ,சீர்காழி, திருவையாறு முதலிய முக்கிய பட்டணங்களும் இருக்கின்றன.

ஒன்பதாம் அத்தியாயம்

தேன் பெண்ணையாறும் அதன் பாசனமும்

[இந்நதி உற்பத்தியாகும் இடத்தைக் கவனி. மைசூர் பீடபூமி எங்கே, எவ்விதம் வியாபித்திருக்கிறது?]

மேற்கூறிய பீடபூமியைச் சார்ந்த சரிவுகளில் பல குன்றுகள் அம்மலை மேட்டிற்கு ஆதாரமாக ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் யாவை? தெற்கில் சேர்வராயன் மலையும், சிறிது வடக்கில் ஜவ்வாது மலையும், அதற்கப்பால் நகரி மலையும், இன்னும் பால்கோண்டா, வெளிகோண்டா முதலிய மலை வரிசைகளும் பீடபூமியைச் சுற்றித் தனித்தனியே வியாபித்திருக்கின்றன. ஆகவே, பீடபூமியில் உற்பத்தியாகும் நதிகள் இம்மலைகளின் இடையிலுள்ள சந்துகளின் வழியாய்க் கீழிறங்கிச் செல்லவேண்டியதா யிருக்கின்றன.

தேன்பெண்ணையாறு, மைசூர் பீடபூமியில் ஆரம்பித்து, சேர்வராயன் மலைக்கும், ஜவ்வாது மலைக்கும் நடுவிலுள்ள சங்கம்மா பள்ளத்தாக்கின் வழியாய், வந்து கூடலூருக்கு அருகில் சமுத்திரத்தில் சேருகின்றது. இது ஓடும் பிரதேசம் முழுவதும் தேன் ஆற்காட்டு ஜில்லா. இந்த ஜில்லா அதிக

மேடுபள்ளமில்லாமல் ஏறக்குறைய ஓரே மட்டமாக இருப்பதாலும் சற்று ஜல வசதியோடு கூடியிருப்பதாலும் இதில் அதிக ஜனங்கள் வசிக்கிறார்கள். இந்த ஜில்லாவில் ஜலம் நன்றாய் ஊறுவதால் ஆங்காங்கு பல துரவுகள் ஏற்பட்டிருக்கின்



றன. இவ்விடங்களில் வருஷ முழுவதும் பயிர் செய்யப்படுகிறது. ஆனால் நன்செய்ப் பயிர் மிகவும் குறைவு. நன்செய் நிலங்கள் ஆறுகளின் பக்கங்களிலும் ஏரிகள் பாயும் பிரதேசங்களிலும் விசேஷமாய் உண்டு.

தென் ஆற்காட்டு ஜில்லாவின் தென்பாகத்திலுள்ள சிதம்பரம் தாலுகாவில் வீராணத்து ஏரி என்ற ஒரு பெரிய ஏரி இருக்கிறது. இது சுமார் 35 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. இதற்கு ஜலம் கோள்ளிடத்திலிருந்து வருகிறது. இத் தாலூகா முழுவதும் இவ்வேரியின் ஜலம் பாய்வதால் இங்கு நெல் இருபோகம் சாகுபடி செய்யப்படுகிறது.

மேலும் பாலாறு என்னும் கிராமத்திற்கு அப்பால் பெருமாள் ஏரி என்று ஒன்று இந்த ஜில்லாவிலிருக்கிறது. இது கூடலூர் தாலுகாவிலுள்ள சில இடங்களைச் செழிப்பிக்கிறது. இங்கு நெல்லும் கரும்பும் விசேஷமாய்ச் சாகுபடி செய்யப்படுகிறது.

இந்த ஜில்லாவில் புன்செய் நிலங்கள் விசேஷமாய் உண்டு. புன்செய்ப் பயிர்களில் முதன்மையானது நிலக்கடலை இது கற்பாரையில்லாத மணற்பாங்கான இடங்களில் நன்ருய் விளையும். இந்த ஜில்லாவில் இப்பயிரை யதிகமாய்ச் சாகுபடி செய்கிருர்கள். இந்த ஜில்லாவிலுள்ள புதுச்சேரி என்ற பிரெஞ்சுக்கார துறைமுகத்தின் வழியாகவும், கூடலூர் துறைமுகத்தின் வழியாகவும் லக்ஷக்கணக்கான மூட்டைகள் வெளி தேசங்களுக்கு அனுப்பப்படுகின்றன. ஜலமும் மழையும் குறைவான சில இடங்களில் கொள், வரகு முதலிய தானியங்கள் பயிராகின்றன. மணற்பாங்கான சமுத்திரக் கரையில் சவுக்கு மரங்கள் அதிகமாய் உண்டாகின்றன. இங்கிருந்து படகுகள் மூலமாய் சென்னபட்டணத்துக்கு விறகு விசேஷமாய் அனுப்பப்படுகிறது. இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 23,20,085. இதன் விஸ்தீரணம் 1,408 சதுர மைல்.

கூடலூர்:—இது ஜில்லாவின் முக்கிய பட்டணம். தென் பெண்ணையாறும் கெடில நதியும் சேருமிடத்திலிருப்பதால் இதற்கு இப்பெயர் வந்தது. இந்திய சரித்திரத்தில் பிரசித்தி



செஞ்சிக்கோட்டை.

பெற்ற செயின்ட் டேவிட் கோட்டை இங்கே தான் இருக்கிறது. இது பெரிய ரெயில் பாதை சந்திக்குமிடம். இதிலிருந்து விருத்தாசலத்திற்கு ஒரு கிளை ரெயில் பாதை

போகிறது. இது ஒரு முனிசிபல் பட்டணம். இங்கு பல கல்விச்சாலைகளிருக்கின்றன. மேலும் இது ஒரு துறைமுகம்.

விழுப்புரம்:—இது சென்னைக்குத் தெற்கே 100 மைல் தூரத்திலிருக்கிறது. தென் இந்திய இருப்புப் பாதையின் பல கிளைகளிங்கு சந்திக்கின்றன. ஆகவே இது ஒரு பெரிய ஜங்ஷன். மேலும் இது ஒரு முனிசிபல் பட்டணம். இங்கிருந்து வடமேற்காக காட்பாடிக்குப் போகும் ரெயில் பாதை வழியில் திருக்கோவிலூர் என்ற ஒரு ஸ்தலம் இருக்கிறது. இன்னும் பண்ருட்டி, திண்டிவனம், செஞ்சி முதலிய முக்கிய இடங்களும் கூடலூருக்கு வடக்கே இருக்கின்றன. பண்ருட்டி பலாப்பழத்துக்கும், மண் பொம்மைகளுக்கும் பெயர் வாய்ந்தது. செஞ்சி சரித்திரத்தில் பேர் பெற்றது இது தான் தேசிங்கு இராஜன் இருந்த இடம். இங்குள்ள அழகான கோட்டையின் சின்னங்களை இக் காலத்திலும் பார்க்கலாம்.

கூடலூருக்கருகிலுள்ள நெல்லிக்குப்பத்தில் வெல்லம், சர்க்கரை, பெப்பர்மின்ட் ஆயில் முதலிய இயந்திரசாலையில் பாரி அன் கம்பெனியாரால் தயாரிக்கப்படுகிறது.

கூடலூருக்குத் தெற்கில் சிதம்பரம் என்னும் ஸ்தலம் இருக்கிறது. இங்குள்ள சிவாலயத்தின் மூலஸ்தானம் தில்லையம்பலம் என்றழைக்கப்படும். நந்தனார் இங்குதான் முத்தியடைந்தார். மார்கழி மாதத்தில் உற்சவம் நடக்கும்பொழுது ஜனங்கள் பற்பல இடங்களிலிருந்து இங்கே வருகின்றார்கள். இக்கோவிலை நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள் அதிகப் பணம் செலவழித்துப் புதுப்பித்திருக்கிறார்கள். இந்நகர் அருகில் சமீபகாலத்தில் ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியார் என்பவர் சர்வ கலாசாலை ஒன்று ஏற்படுத்தி நடத்தி வருகிறார். இங்கே இரு ஹைஸ்கூல்களும், ஆறுமுக நாவலர் தமிழ்க்கல்

லூரியும் உண்டு. பண்டிதர் போதனாமுறைப் பாடசாலையும், தமிழ்க்கல்லூரியும், சங்கீதக் கலாசாலையும் இவ்விடத்தி லிருக்கின்றன. தற்பொழுது இது அண்ணாமலை நகர் என்று அழைக்கப்படுகின்றது.

13 JUL 1935

பத்தாம் அத்தியாயம்

பாலாறும் அது பாயும் பிரதேசமும்

இந்நதியும் முன்கூறிய மைசூர் பீடபூமியில் உற்பத்தியாகி, சிறிது தூரம் ஓடி, ஜவ்வாது மலைக்கும், நகரிமலைக்கும் நடுவி



லுள்ள பள்ளத்தாக்கின் வழியாய்க் கீழிறங்கி சித்தூர், வடஆற்காடு, செங்கற்பட்டு, ஜில்லாக்களின் வழியாய்ச் சென்று, கடலில்

விழுகிறது. இது மலைகளின் வழியாய் வெகு தூரம் பாய்ந்து, தாழ்ந்த சமவெளியில் கொஞ்ச தூரம் மட்டும்பாய்ந்து சமுத்திரத்தையடைகிறது. இந்த ஆற்றிலும் கோடைகாலத்தில் ஜலம் வருகிறதில்லை. இதன் காரணம் யாது? குளிர் காலமாகிய ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பெய்யும் மழையினால் ஜலப்பெருக்குண்டாகும். ஆகையால் இது பாயும் பிரதேசங்களில் உண்டாகும் பயிர்கள் மழையால் மட்டும் விருத்தியாக வேண்டியதிருக்கின்றன. மேலும், இப்பிரதேசங்கள் மலை நாடுகளானதாலும் பெரும் பாறைகள் கும்பல் கும்பல்களாய் பற்பல இடங்களில் வியாபித்திருக்கின்றமையாலும் சாகுபடி செய்வதற்கு வசதியில்லை. ஆனால் ஒவ்வொரு ஆற்றின் பக்கத்திலும் பெரிய ஏரிகள் உண்டாவதற்குத் தகுந்த பள்ளங்கள் கற்பாறைகளின் நடுவிலும் மலைச் சந்துகளின் நடுவிலும் இயல்பாய் ஏற்பட்டிருக்கின்றன. ஆறுகளில் வரும் ஜலத்தை அணையைக் கட்டி ஏரிகளில், தேக்கி வருஷ முழுமையும் பயிர் செய்ய உபயோகப்படுத்துகிறார்கள். சித்தூர் ஜில்லாவிலுள்ள மாவண்டூர் ஏரி கற்பாறை நடுவிலுள்ள ஓர் பள்ளத்தாக்கில் அமைந்திருக்கிறது. இந்த ஏரிப் பாசானத்தில், நெல்லும், கரும்பும் விளைகின்றன. செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள செம்பரம்பாக்கம், புழல் ஏரிப் பாசானத்தில் நெல் இருமுறை பயிர் செய்யப்படுகிறது.

மேலும் பூமியில் இயற்கையில் சில இடங்களில் நன்றாய் ஊறுவதால் ஆங்காங்கு பல துறவுகள் வெட்டி, வருஷ முழுவதும் பல இடங்களில் நன்செய்ப்பயிர் செய்து வருகிறார்கள். இவ்விதத் துறவுகள் சித்தூர், வடஆற்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களில் பல உள.

சித்தூர் ஜில்லா

இதுவும் ஓர் உள்நாட்டு ஜில்லா. இது மைசூர் நாட்டை ஒட்டியிருக்கிறது. இந்த ஜில்லாவின் விஸ்தீரணம் 5676 சதுர மைல். இங்கு கேழ்வரகு, கம்பு, கரும்பு அதிகமாய் விளைகின்றன. மேலும் புங்கனூர் ஜாதி என்னும் ஒருவித குட்டையான பசுக்கள் ஏராளமாயுண்டு. இந்த ஜில்லாவிலுள்ள நாராயணவன மென்னுமிடத்தில் நேர்த்தியான வஸ்திரங்கள் நெய்கிறார்கள். ஜில்லாவின் மொத்த ஜனத் தொகை. 12,69,157.

சித்தூர்:-இது ஜில்லாவின் முக்கிய பட்டணம். இது பீட பூமியிலிருக்கும் ஒரு பள்ளத்தாக்கிலிருக்கிறது. புராதன காலத்தில் சித்தூர் முற்றுகையைப்பற்றி நீங்கள் இந்து தேச சரிதையில் படித்திருக்கலாம். இது வெல்லத்திற்குப் பேர் பெற்றது. மாம்பழமும் விசேஷம். இங்கு காட்பாடியிலிருந்து ஒரு ரயில் வருகிறது.

திருப்பதி:-இது தென்னிந்தியாவிலுள்ள விஷ்ணுஸ்தலங்களில் சிறந்தது. ஐசுவரியத்தில் மேன்மை பெற்று விளங்குகிறது. இது ஒரு திவ்விய க்ஷேத்திரம். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் யாத்திரை போகிறார்கள். மலைமீதுள்ள கோவிலிலிருக்கும் ஸ்ரீவேங்கடேசப் பெருமாளை தெய்வமாகக் கருதிக் கொண்டாடுகிறார்கள். செம்மரத்தினால் அழகான பிரதிமைகள் இங்கு செய்யப்படுகின்றன.

திருத்தணிகை:—இது ஒரு பெரிய சிவஸ்தலம். மலைமீது ஒரு கோவில் இங்கு இருக்கிறது. மாதந்தோறும் கிருத்திகைக்கு ஜனங்கள் போகிறார்கள்.

காளஹஸ்தி:—இது சுவர்ணமுகி நதிக்கரையிலுள்ள ஒரு பேர் பெற்ற சிவஸ்தலம். இங்கு சிவராத்திரிக்கு ஜனங்

கள் மிகுதியாய்ப் போய் வருவதுண்டு. வளையலுக்குப் பேர் வாய்ந்த இடம். மேலும் இது ஒரு ஜமீன் கிராமம்.

கார்வேட் நகரம்:—இதுவும் இப் பெயர்கொண்ட ஓர் ஜமீன் பட்டணம். கிச்சிலிப்பழம் இங்கே விசேஷமாயுண்டு.

மதனப்பள்ளி:—இது இந்த ஜில்லாவின் மேட்டுப் பிரதேசத்திலுள்ள ஓர் பட்டணம். தவிர தேக சௌக்கியத்திற்காகச் செல்லும் இடங்களில் இதுவுமொன்று. இங்கு க்ஷய ரோகிகள் வந்து, தங்கிச் சுகம்பெறத் தகுந்த வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது சமுத்திர மட்டத்திற்கு 2,250 அடி உயரத்தி லிருக்கிறது.

சந்திரகிரி:—இது திருப்பதி மலைக்கு அருகிலிருக்கிறது. முன்காலத்தில் இது விஜயநகரத்து அரசர்களுக்கு இராஜதானிப் பட்டணமாயிருந்தது. இதில் அரசாண்ட அரசன் தான் இங்கிலீஷ்காரர்களுக்கு சென்னபட்டணத்தில் கோட்டை கட்டியிருக்கும்படி இடத்தைக் கொடுத்தார்.

ரேணி குண்டா:—ஒரு ரயில்வே ஜங்ஷன். இங்கு சென்னையிலிருந்து பம்பாய்க்குப் போகும் ரயில் மார்க்கமும், காட்பாடியிலிருந்து கூடூருக்குச் செல்லும் மார்க்கமும் சந்திக்கின்றன.

வட ஆற்காடு ஜில்லா

இதுவும் ஒரு உள்நாட்டுஜில்லா, இந்த ஜில்லா சித்தூர், செங்கற்பட்டு, சேலம், தென் ஆற்காடு ஜில்லாக்களுக்கு மத்தியிலிருக்கிறது. ஜில்லாவின் வடபாகத்தில் பாலாற்றுப் பள்ளத்தாக்கும், மத்தியில் பாலாற்றின் உபநதியாகியசெய்யாற்றின்பள்ளத்தாக்கும் இருக்கின்றன. இதற்கு மத்தியில் ஜவ்வாது மலைகள் இருக்கின்றன. இந்த ஜில்லாவில் நெல், கேழ்வரகு, மணிலா கொட்டை, அவுரி முதலியன பயிராகின்றன. இங்குள்ள

ஜவ்வாது மலையின் காடுகளில் விலையுயர்ந்த மரங்கள் உண்டா கின்றன. ஆரணி என்னுமிடத்தில் நேர்த்தியான வஸ்திரங்கள் நெய்கிறார்கள். வந்தவாசியில் கோரைப்பாய்கள் பின்னுகிறார் கள். வேலூர் சிறைச்சாலையில், ஜமுக்காளங்களும், துவாலை களும் நெய்யப்படுகின்றன. சென்னையிலிருந்து பெங்களூர் போகும் ரெயில் பாதை பாலாற்றின் கரையை யடுத்தே போகின்றது. இப் பாதையிலுள்ள அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை முதலான இடங்கள் முக்கிய ரயில்வே ஜங்ஷன்கள். அரக்கோணத்தில் வந்து சந்திக்கும் மூன்று ரயில் மார்க்கங்களெவை? இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 20,55,594. விஸ்தீரணம் 4920 சதுர மைல்.

வேலூர்: — இந்த ஜில்லாவின் பிரதான பட்டணம். இது பாலாற்றின் கரையிலிருக்கிறது. இவ்விடத்தில் பிர சித்திபெற்ற கோட்டை ஒன்று இருக்கிறது. இதில் இப் பொழுது சர்க்கார் போலீஸ் உத்தியோகஸ்தர்களை பழக்கு விக்க ஒரு வித்தியாசாலை வைத்து நடத்தி வருகிறார்கள். இவ்விடத்தில் சர்க்கார் வைத்தியசாலை ஒன்றும், அமெரிக் கன் மிஷன் வைத்திய சாலை ஒன்றும், பெண்கள் வைத்தியக் கல்விச்சாலை ஒன்றும் இருக்கிறது. இது ஒரு பெரிய வியா பார ஸ்தலம்.

ஆற்காடு: — இது கர்நாடக நவாபுவின் இராஜதானி ஸ்தலமாக இருந்தது. பண்டைய காலத்தில் பல யுத்தங்கள் இங்கு நடைபெற்றன.

திருவண்ணாமலை: — இது காட்பாடியிலிருந்து, விழுப் புறம் செல்லும் ரயில் மார்க்கத்திலிருக்கும் ஒரு பெரிய சிவ ஸ்தலம். இங்குள்ள மலையின்மீது வைக்கப்படும் கார்த்தி கைத் தீபத்தைத் தரிசிக்க ஏராளமான ஜனங்கள் போய்

வருவதுண்டு. அக்காலத்தில் அவ்விடத்தில் மாட்டுச் சந்தை யொன்று கூடும்.

சோளங்கிபுரம்:—இது ஒரு விஷ்ணுஸ்தலம். இவ்விடத்தில் இரண்டு குன்றுகளிருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விஷ்ணு ஆலயம் கட்டப்பட்டிருக்கின்றது.

வாணியம்பாடி:—இது பாலாற்றங் கரையிலுள்ளது. இதில் மகம்மதியர்கள் அதிகம். மேலும் தேங்காய், வெல்லம், தோல், கொட்டைமுத்து விசேஷமாய்க் கிடைக்கின்றன.

ஆரணி, வந்தவாசி:—கர்நாடக யுத்தங்கள் நடைபெற்ற இடங்கள்.

செங்கற்பட்டு ஜில்லா

இது கடற்கரையை யடுத்துள்ளது. இந்த ஜில்லா சென்னைப் பட்டணத்தைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. ஜில்லாவின் பல இடங்களில் சிறு சிறு குன்றுகள் ஆங்காங்கே தனித் தனியாய் வியாபித்திருக்கின்றன. புழலேரி, செம்பரம்பாக்கத்து ஏரி என இரு பெரிய ஏரிகளால் ஜில்லாவின் பெரும்பாகம் நீர் பாய்ச்சப்படுகிறது. புழலேரியிலிருந்து குழாய்களின் மூலமாய்ச் சென்னப்பட்டணத்திற்கு ஜலம் கொண்டுபோகப் படுகிறது. நெல்லும் அவுரியும் விசேஷமாய்ப் பயிரிடப்படுகின்றன.

இந்த ஜில்லாவிலுள்ள காஞ்சீபுரத்தில் பட்டுக் கரை வேஷ்டிகளும் புடவைகளும் நெய்கிறார்கள். சைதாப்பேட்டையில் வேஷ்டிகளுக்கு சாயம் போடுகிறார்கள். பல்லாவரத்தில் தோல் பதனிடுகிறார்கள்.

இந்த ஜில்லாவில் 15,00,000 ஜனங்கள் வசிக்கிறார்கள். இதின் விஸ்தீரணம் 3,072 சதுர மைல்.

சைதாப்பேட்டை :—இது ஜில்லாவின் முக்கிய பட்டணம். சென்னையிலிருந்து 5 மைல் தூரத்திலிருக்கிறது. இதில் உபாத்திமைத் தொழிலுக்குப் பயிற்றுவிக்கும் ஒரு பெரிய கலாசாலை இருக்கிறது. ஜில்லாக் கலெக்டர் ஆபீசும், ஜில்லா போர்டு ஆபீசும், கச்சேரிகளும் இங்கு இருக்கின்றன.

செங்கற்பட்டு:—இதையும் ஓர் முக்கியப் பட்டணமாகக் கொள்ளலாம். ஜில்லா நியாயாதிபதியும், சப் கலெக்டரும் வசிக்கிறார்கள். இவ்விடத்திலுள்ள பழைய கோட்டைக்குள் ஜில்லாக் கோர்ட்டும், தாலூகாக் கச்சேரியும், சிறைச்சாலையும், கைதிகளான சிறுவர்களைச் சீர்திருத்தும்(Reformatory School) ஓர் பாடசாலையும் இருக்கின்றன. மேலும் இங்கு இரண்டு ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. இது தென்னிந்திய ரெயில் வேயில் ஒரு ஜங்ஷன்.

காஞ்சிபுரம்:—இது இந்துக்களின் ஏழு புண்ணிய ஸ்தலங்களில் ஒன்று. இது ஓர் புராதன பட்டணம். ஆதி காலத்தில் சோழ ராஜாக்களுக்கும், பின் பல்லவ ராஜாக்களுக்கும் முக்கிய நகரமாயிருந்தது. இங்கு பிரசித்திபெற்ற தேவாலயங்கள் பல இருக்கின்றன. வடமொழி வித்தைக்கு இது ஒரு கீர்த்தி வாய்ந்த இடம். இங்கே நெசவுத் தொழில் விசேஷமாய் நடக்கிறது.

திருவள்ளூர் :—இதில் ஒரு பெரிய விஷ்ணு ஆலயம் உண்டு. அமாவாசை தோறும் ஏராளமான ஜனங்கள், இங்குள்ள குளத்தில் ஸ்நானம் செய்து சுவாமி தரிசிக்கப்போய் வருவதுண்டு. இங்கு ஒரு மிஷன் ஹைஸ்கூலிருக்கிறது.

ஸ்ரீபெரும்பூதூர் :—வைஷ்ணவ மதத்தை ஸ்தாபித்த இராமானுஜர் அவதரித்த இடம்.

மகாபலிபுரம் :—இதில் ஏழு கோயில்கள் இருக்கின்றன. முன்காலத்தில் பிரசித்தி பெற்ற ஓர் துறைமுகப்பட்டினம். இவ்விடத்தில் ஒரே கல்லில் வெட்டப்பட்ட 7 தேர்களையும் அநேக பிம்பங்களையும் பார்க்கலாம். இது பல்லவ ராஜாக்



கல்லில் வெட்டப்பட்ட தேர்கள்.

களால் செய்யப்பட்டதாகக் கூறுகின்றனர். இவ்விடத்திற்கு சென்னையிலிருந்து பக்கிங்காம் கால்வாய் மூலமாய் வந்து சேரலாம்.

பொன்னேரி :—இது சாய வஸ்திரங்களுக்குப் பேர் பெற்றது.

பரங்கிமலை:—இது ஒரு இராணுவ ஸ்தலம். இங்கே சிப்பாய்கள் பயிற்சிக்கப்படுகிறார்கள். இவ்விடத்திலுள்ள குன்றின்மீது ஒரு கிறிஸ்தவ தேவாலயம் இருக்கிறது.

பதினேழாம் அத்தியாயம்

வடபெண்ணை யாறும் அதன் பாசனமும்

இது மைசூர் பீடபூமியில் உற்பத்தியாகி, வடக்கு முகமாய் மேட்டுப் பிரதேசத்தின் வழியாய் வெகு தூரம் ஓடுகிறது. அங்கு அநந்தப்பூர், கடப்பை ஜில்லாக்கள் இருக்கின்றன. அதன் பின்னர் இந்நதி மலையிலிருந்து கீழிறங்கி, வேலிகொண்டா மலைகளிலுள்ள ஒரு பள்ளத்தாக்கின் வழியாக நெல்லூர் ஜில்லாவுக்குள் ஓடி சமுத்திரத்தை யடைகிறது. இதன் நீளம் 350 மைல். இது பாயும் மேட்டுப் பிரதேசத்தில் மழை குறைவாயிருப்பதினால் இங்குள்ள ஜில்லாக்களும் மிகவும் வறண்ட பிரதேசங்களா யிருக்கின்றன. ஆகவே ஜனங்கள் பயிர்த் தொழிலைவிட, ஆடுமாடுகள் மேய்ப்பதை முக்கிய தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். சிற்சில இடங்களில் புன்செய் தானியங்களைப் பயிரிடுகின்றனர். இப்பிரதேசத்தில் கரிசல் மண் மிகுதியாக இருப்பதால் பருத்தி நன்றாய் விளைகிறது. இதன் டெல்டா நெல்லூர் ஜில்லாவில் ஆரம்பிக்கிறது. இந்த ஜில்லாவில் இரண்டு அணைக்கட்டுகள் கட்டி ஜலத்தைப் பாசனத்துக்கு உபயோகப்படுத்துகிறார்கள்.

1. அனந்தபுரம் ஜில்லா

[இந்த ஜில்லாவின் இருப்பிடத்தைக் கண்டுபிடி. இதை செழிப்பிக்கும் ஆறு எது? இங்கு வியாபித்திருக்கும் குன்றுகளில் முக்கியமானது எது]

பீடபூமியிலுள்ள மற்ற ஜில்லாக்களைப் போல் இதிலும் புன்செய்த் தானியங்களாகிய சோளம், கம்பு, பருத்தி, எள்ளு முதலியவைகள் விளைகின்றன. பொன்னும் சில இடங்களில்


கர்நூல்
கடப்பை
அனந்தபுரம்
வங்காளக் குடாக்கடல்
உறவகொண்ட
வட பெண்ணை
தாடிபுத்திரி
ஜம்மலமடுகு
புரோத்தட்டூர்
இந்நாவட்டம்
ராயதுர்க்கம்
அனந்தபுரம்
கமலாபுரம்
தர்மாவரம்
வேம்பல்லி
ஹிந்துபூர்
ஆத்மகூர்
காவலி
சங்கம்
கோவூர்
அல்லூர்
நெல்லூர்
வடபெண்ணை

கிடைக்கின்றன. இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 9,55,917 இதன் விஸ்தீரணம் சுமார் 6718 சதுர மைல்.

அநந்தபுரம்:—இது ஜில்லாவின் முக்கிய பட்டணம். ஸர் தாமஸ் மன்ரோ என்பவர்தான் இதை முதலில் ஜில்லாவின் தலைநகராக ஏற்படுத்தினவர். இதில் கவர்ன்மெண்ட் முதல்தர கலாசாலை ஒன்று இருக்கிறது.

குந்தி:—இது ஒரு பெரிய வியாபாரஸ்தலம். இங்கு ஒரு பெரிய மலைக்கோட்டை இருக்கிறது.

தர்மவரம்:—இது ஒரு ரயில்வே ஜங்ஷன். இதிலிருந்து அநந்தபுரத்தின் வழியே குண்டக்கல், பங்களூர், சித்தூர் முதலிய இடங்களுக்கு இருப்புப்பாதை போகிறது. பட்டுப் புடவைகளுக்குப் பேர் பெற்ற இடம்.

குண்டக்கல்:—இந்த இடத்தில் பல ரயில் பாதைகள் கூடுகின்றன. ஆகையால் ஒரு பெரிய பட்டணமாகிவிட்டது. படத்தைப் பார்த்து இங்கு வந்து சந்திக்கும் ரயில் பாதைகளைச் சொல்லு.

ஹிந்துப்பூர்:—இது ஒரு வியாபார ஸ்தலம்.

2. கடப்பை ஜில்லா

இந்தப் படத்தில் இதைச் சுற்றியிருக்கும் ஜில்லாக்களைக் கண்டுபிடி. இந்த ஜில்லா எந்த ஆற்றுப்பாசனத்திலிருக்கிறது.

இது வறண்ட மேட்டுப் பிரதேசத்திலிருப்பதால் இங்கு சோளம், கம்பு, பருத்தி முதலிய புன்செய் தானியங்களும், கருங்கல்களும் கிடைக்கின்றன. ஆடுகளும் வளர்க்கப்படுகின்றன. பருத்தி சாகுபடி செய்து பஞ்சு எடுப்பதும், கருங்கல்களைப் பலகை, பலகைகளாக உடைத்து அனுப்புவதும் ஜில்லாவின் முக்கிய தொழில்களாகும். சென்னைக்குச் செல்லும் ரயில்பாதை தென் கிழக்குத் திசையாக இந்த ஜில்லாவின்

மத்தியில் செல்லுகிறது. இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 8,87,929. இதின் விஸ்தீரணம் 5,892 சதுர மைல்.

கடப்பை:—இது ஜில்லாவின் முக்கிய பட்டணம். இப் பட்டணத்தைச் சுற்றி 3 மலைகளிருக்கின்றன. ஆகவே இப் பட்டணம் பள்ளத்திலிருக்கிறது. முறைக்காய்ச்சல் அடிக் கடி ஜனங்களைப் பீடிப்பதுண்டு. தற்சமயம் சுத்த ஜலம் தூரத்திலிருந்து குழாய்களின் மூலமாய்க் கொண்டு வருவ தால் ஜுரம் குறைந்து வருகிறது.

ஜம்மல் மகடு:—இது பிரசித்தி பெற்ற ஒரு வர்த்தக ஸ்தலம். நெய், பஞ்சு மிகவும் விசேஷமாய்க் கிடைக்கும்.

3. நெல்லூர் ஜில்லா

கடற்கரையை அடுத்து, சென்னைப் பட்டணத்திற்கு வடக்கே யிருக்கிறது. ஜில்லாவின் கீழ்பாகம் வடபெண்ணை யாற்றின் பள்ளத்தாக்கில் இருப்பதால் செழிப்புற்று விளங்கு கிறது. இப்பாகத்தில் இந்நதிக்கு ஸங்கம், நெல்லூர் என்ற இடங்களில் அணைகள் கட்டி, ஜலத்தைக் கால்வாய்களில் திருப்பி சாகுபடி செய்கிறார்கள். இந்த ஆற்றின் முகத்துவா ரத்தில் ஒரு சிறு டெல்டா இருக்கிறது. இங்கு நெற்பயிர் விசேஷம். சென்னை பட்டினத்திற்கு இங்கிருந்து தான் அரிசி வருகிறது.

இந்த ஜில்லாவின் வடக்கேயும், மேற்கேயும் மழை குறைவு. இப்பிரதேசங்களில் சோளம், கம்பு, அவுரி பயிராகின்றன. மேலும் மழை குறைந்த இடங்களில் புதர் காடுகளிருக்கின் றன. இங்கு பசுக்களை மேய்த்து மற்ற ஜில்லாக்களுக்கு அனுப்புகிறார்கள். இந்த ஜில்லா மாடுகளுக்குப் பேர்போனது. கிழக்குத் தொடர்ச்சி மலை இந்த ஜில்லாவிற்கும், கடப்பை,

கர்நூல் ஜில்லாக்களும் மத்தியில் எல்லையாயிருக்கிறது. இங்கு இதற்கு வெலிகோண்டா என்று பெயர். பழவேற்காடு ஏரி ஜில்லாவின் தென் கடற்கரையருகில் இருக்கிறது.

இந்த ஜில்லாவில் நெசவுத் தொழிலும், தோல் பதனிடுதலும் மிகுதியாய் நடக்கின்றன. இங்கு இருப்புப்பாதை கொஞ்ச தூரந்தான் பரவியிருக்கிறது. இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 1,38,500. இத்தேசத்துப் பூர்வீக ஜனங்களுக்கு ஏனுதிகள் என்று பெயர். இதன் விஸ்தீரணம் 8000 சதுர மைல்.

நெல்லூர்:—இது ஜில்லாவின் முக்கியபட்டணம். வட பெண்ணையாற்றின் கரையில் இருக்கிறது. இங்கு ஒரு அணை கட்டி ஜலத்தைப் பாச்சலுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். இது சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற இடம். இங்கே பிரசித்தி பெற்ற ஓர் கோவிலிருக்கிறது. இந்த இடத்திலுள்ள ஹால் மிகவும் அழகானது. நெல்லூரில் நேர்த்தியான துணிகள் நெய்கிறார்கள். வெங்கடகிரி ஜமீன்தார் இங்கு ஒரு கலாசாலை ஏற்படுத்தி நடத்தி வருகிறார்.

வேங்கடகிரி:—ஜமீன்தார் வசிக்கும் ஓர் அழகிய பட்டணம்.

உதயகிரி:—வெலி கொண்டா மலைப்பிரதேசத்தில் சுமார் 3000 அடி உயரத்தில் இருக்கிறது. இங்கே பழைய கோட்டைகளும், கோவில்களும், மண்டபங்களும் அதிகமாக இருக்கின்றன.

கூடூரு:—இது ஒரு ரெயில்வே ஜங்ஷன். இங்கிருந்து பிரியும் கிளைகள் எவை?

பனிரண்டாம் அத்தியாயம்

துங்கபத்திரா நதியும் அதைச் சார்ந்த பாசனமும்

துங்கபத்திரா ஓரே நதியல்ல. மேற்குத் தொடர்ச்சிமலை களில் உற்பத்தியாகி, மைசூர் பீடபூமியின் வடக்குச்சரிவுகளின் வழியாக வரும் துங்கா, பத்திரா என்னும் சிறியநதிகள் ஒன்று சேர்ந்து துங்கபத்திரா நதியாகிறது. மேலும் இது கிருஷ்ணா நதியின் ஓர் உற்பத்தியாயிருக்கிறது. இது முதலில் சென்னை ராஜதானிக்கும் பம்பாய் இராஜதானிக்கும் நடுவே சென்றி, பின்னர் ஹைதராபாத் சுதேச சமஸ்தானத்திற்கும், சென்னை ராஜதானிக்கும் இடையில் ஓடி கிருஷ்ணா நதியில் கலக்கிறது. இது ஓடும் பிரதேசத்தில் பல்லாரி, கர்நூல் ஜில்லாக்களிருக்கின்றன. இந்நதியிலிருந்து கால்வாய்கள் வெட்டி ஜலத்தைப் பாய்ச்சலுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். கர்நூல் கடப்பைக் கால்வாயின் மூலமாக இந்நதியின் தண்ணீர் கடப்பை ஜில்லாவிலுள்ள வயல்களுக்குப் பாய்கிறது. இந்த இரண்டு ஜில்லாக்களும் முன் கூறிய கடப்பை, அநந்தப்பூர் ஜில்லாக்களும் தக்ஷிண பீடபூமியின் ஓர் பாகத்திலிருக்கின்றன.

இந்த ஜில்லாக்கள் அடங்கிய பாகத்திற்கு " கோடை " ஜில்லாக்கள் என்று பெயர். மேற்கூறிய மேட்டுப் பிரதேசங்களில் ஆங்காங்கு சில பாறைகள் ஒன்றின்மேலொன்றாய் உயர்ந்து செங்குத்தாய் இருக்கின்றன. இவ்விதக் குன்றுகளுக்கு துர்க்கம் என்று பெயர். இவைகள் கோட்டைகள் கட்டி வசிப்பதற்குத் தகுந்த இடங்களாகின்றன. மலைக்குன்றுகளுக்கு நடுவில் நதிகள் ஓடுகின்றன. இந்தப் பிரதேசம் வெயிற்



ஐதராபாத்
நிஜாம் ராஜ்யம்
பம்பாய்
இராஜதானி
துங்கபத்திராநதி
சிருகுப்பி
கர்நூல்
கம்பிலி
குமலாபுரம்
ஹோஸ்பேட்டை
ஆதவானி
ஹூவின்ஹடகல்
ஹார்பனஹல்லி
பங்கனபல்லி
கடப்பை
மைசூர்
நெல்லூர்

காலத்தில் உஷ்ணம் அதிகமாயும் குளிர் காலத்தில் குளிர் அதிகமாயும் இருக்கும். மேலும் இரண்டு பருவங்களிலும், பெய்யும் மழை மிகக் குறைவு. ஆகவே நன்செய் நிலங்கள் அதிகமில்லாததால் நெல் சொற்பமாய்த்தான் விளைகிறது. இந்த ஜில்லாக்களின் இயற்கை யமைப்பும், மழையின் குறைவுமே ஜனத்தொகை குறைவாயிருப்பதற்குக் காரணம். இப்பிரதேசம் கற்பாறையாயிருந்த போதிலும் சில பாகங்களில் ஒருவித கரிசல் மண் வியாபித்திருக்கிறபடியால் பருத்தி விசேஷமாய்ப் பயிரிடப்படுகின்றது. இப்பிரதேசத்திலுள்ள ஜனங்கள் பருத்தியைச் சாகுபடி செய்து, பஞ்சை யெடுத்து சுத்தி செய்து மூட்டைகளாகக் கட்டி மற்ற இடங்களுக்கு அனுப்புகிறார்கள். மேலும் சில முக்கிய இடங்களில் பஞ்சை நூலாக நூற்று வஸ்திரம் நெய்கிறார்கள்.

இப் பிரதேசங்களிலுள்ள குன்றுகளில் மழை யதிகமில்லாதபடியால் சிறு செடிகளும் புற்களுமே உண்டாகின்றன. ஆகையால் இங்கே ஆடுகள் அதிகமாய் வளர்க்கப்படுகின்றன. ஆடுகளிலிருந்து கிடைக்கும் நீண்ட மயிர்களினால் கம்பளங்களும் செய்யப்படுகின்றன.

1. பல்லாரி ஜில்லா

இதைச் சுற்றியுள்ள ஜில்லாக்களையும் நாட்டையும் கண்டுபிடி. இந்த ஜில்லாவின் வழியாய் ஓடும் நதி எது?

இந்த ஜில்லாவில் நன்செய் நிலம் அதிகமில்லை. புன்செய்ப் பயிர்களில் பருத்தி நன்றாய் விளைகிறது. நெசவுத் தொழிலும் சில முக்கிய இடங்களில் நடைபெறுகிறது. சிற்சில இடங்களில் சோளம், கம்பு, மாங்கனீஸ் கிடைக்கின்றன. சாண்டூர் என்னும் சிறிய சுதேச சமஸ்தானம் இந்த ஜில்லாவின் மத்தியிலுள்ள ஓர் மலையின்மேல் இருக்

கிறது. இந்த ஜில்லாவில் வசிப்பவர்களின் தொகை சுமார் 8,62,370. இதின் விஸ்தீரணம் 5,714 சதுர மைல்.

பல்லாரி:—இதுவே ஜில்லாவின் முக்கிய பட்டணம் பீடபூமியிலுள்ள பட்டணங்கள் எல்லாவற்றிலும் இது மிகவும் பெரியது. இது குண்டக்கல்லுக்கும் கோவாவுக்கும் செல்லும் ரயில் பாதையின் மத்தியில் இருக்கிறது. இப்பட்டணத்தில் பழைய கோட்டை ஒன்று இருக்கிறது. நமது துரைத்தனத்தார் இங்கு ஒரு சேனையை வைத்திருக்கிறார்கள். மேலும் இது ஒரு பெரிய வர்த்தக ஸ்தலம். வெளியூர்களிலிருந்து பருத்தியை இங்கு கொண்டுவந்து, சுத்தம் செய்து, மூட்டைகளாகக் கட்டி அயல் நாடுகளுக்கு அனுப்புகிறார்கள்.

ஆதோனி:—இந்தப் பட்டணம் துங்கபத்திராவுக்கும், கிருஷ்ணா நதிக்கும் இடையில் இருப்பதால் மிகவும் செழிப்பாயிருக்கிறது. சாய ஜமுக்காளங்களுக்குப் பேர் பெற்ற இடம். தக்ஷிண பீடபூமியில் இவ்விடத்தில்தான் பருத்தி வியாபாரம் மிகுதியாய் நடக்கிறது. பருத்தியைச் சுத்தம் செய்து கட்டவும், நூற்கவும், நெய்யவும் இயந்திரசாலைகள் இங்கு இருக்கின்றன.

ஹோஸ்பேட்:—இது துங்கபத்திரா நதிக்கரையிலிருக்கிற ஒரு ரயில்வே ஜங்ஷன். இதற்குச் சமீபத்தில் ஹம்பி என்னும் கிராமத்தைப் பார்க்கலாம். முன்காலத்தில் கீர்த்தி வாய்ந்த விஜய நகரத்தின் சின்னங்கள் இங்கேயுண்டு. சுமார் 400 வருஷங்களுக்குமுன் விஜயநகரத் தரசர்கள் இதிலிருந்து கொண்டு தென் இந்தியாவை ஆண்டு வந்தார்கள். இப்பொழுது, நாம், இவ்விடத்தில் பார்க்கின்ற, பாழடைந்த கோட்டைகள், கோவில்கள், அரண்மனைகள், விக்ரகங்கள்

முதலியவைகளிலிருந்து பண்டைக்காலத்தில் விஜய நகர ராஜ்யம் எவ்வளவு உன்னத நிலைமையிலிருந்ததென அறியலாம்.

2. கர்நூல் ஜில்லா

படத்தில் இதற்கு எல்லைகளான இதர ஜில்லாக்களைக் கவனி. இந்த ஜில்லாவின் வடக்கே எல்லையாய் ஓடும் நதி எது? இதிலுள்ள பெரிய ஏரி எது?

இந்த ஜில்லாவும் வறண்ட பிரதேசத்திலிருப்பதால், புன்செய்ப் பயிர்களாகிய சோளம், பருத்தி, புகையிலை, அவுரி முக்கிய விளைவு பொருள்கள். இங்கு நெசவுத் தொழில் சில இடங்களில் நடக்கிறது. சுமார் 9,14,890 ஜனங்கள் இந்த ஜில்லாவில் வசிக்கிறார்கள். இதன் விஸ்தீரணம் 7,580 சதுர மைல்.

கர்நூல் துங்கபத்திரா ஹிந்திரி என்னும் நதிகளுக்கு மத்தியிலிருக்கிறது. இதுவே ஜில்லாவின் முக்கிய பட்டணம். தேகசௌக்கியம் பொருந்திய இடம். பண்டைக் காலத்தில் இது மகம்மதிய அரசர்களின் ஆதீனத்திலிருந்தது. இப் பட்டணத்தின் வழியாய் கடப்பை, கர்நூல் கால்வாய் ஓடுகிறது.

நந்தியால் இங்கு பருத்தி வியாபாரம் மிகவும் விசேஷம். இவ்விடத்தில் அரக்கினால் சில விளைதப் பொருள்கள் செய்கிறார்கள்.

பத்தி கோண்டோ:—இந்த ஜில்லாவில் கலெக்டராயிருந்து, பின் சென்னை கவர்னரான சர் தாமஸ் மன்றோ, தன்மீது அன்புள்ள பிரஜைகளைப் பார்க்கப் போயிருக்கும் தருவாயில் விஷ பேதி கண்டு இறந்து போனார். இவர் பெயரின் ஞாபகார்த்தமாக ஒரு தோப்பும், சத்திரமும் ஏற்படுத்தி

யிருக்கிருர்கள். அஹோபிலம், ஸ்ரீசைலம் என்னும் இரண்டு புண்ணிய ஸ்தலங்கள், இந்த ஜில்லாவிலுள்ள நல்லமலேமீது இருக்கின்றன. இவற்றுள் ஒன்று விஷ்ணு ஸ்தலம், மற்றது சிவஸ்தலம். சிவராத்திரியன்று ஜனங்கள் அங்கு செல்லுகின்றனர்.

பங்கனபள்ளி என்ற சுதேச ராஜ்ஜியம் இந்த ஜில்லாவில் இருக்கிறது.

பதிமூன்ரும் அத்தியாயம்

OFFICE OF THE REGISTRAR
13 JUL 193

கிருஷ்ணு நதியும் அதன் பாசனமும்

இந்நதியும் மேற்குத் தொடர்ச்சி மலேயில் மஹா பிலேசுவரமென்னுமிடத்தில் உற்பத்தியாகிறது. இதன் உற்பத்தி ஸ்தானத்திற்கும் மேற்குச் சமுத்திரத்திற்கும் உள்ள தூரம் 50 மைல். இது பம்பாய் இராஜதானியில் 300 மைல் தூரம் ஓடி, ஹைதராபாத் ராஜ்யத்தில் 400 மைல் தூரம் சென்று சென்னே இராஜதானிக்கும், ஹைதராபாத்துக்கும் இடையில் எல்லேயாகிறது. பின்பு இது கிழக்குத் தொடர்ச்சிமலேயைத் துளேத்துக் கொண்டு, சமவெளியில் பாய்ந்து சமுத்திரத்தில் கலக்கிறது. சென்னே இராஜதானியில் மட்டும் இதன் நீளம் 100 மைல். இந்நதி குண்டூர் ஜில்லாவின் வடமேற்குப் பாகங்களின் எல்லேயாய் ஓடி, கிருஷ்ணு ஜில்லாவின் வழியாய் சமுத்திரம் சேருகிறது. இதன் மொத்த நீளம் 800 மைல்.

கிருஷ்ணு நதியின் டெல்டா பெஜவாடா என்னுமிடத்தில் ஆரம்பமாகிறது. இங்கு கட்டியிருக்கும் அணேயிலிருந்து கால்வாய்கள் மூலமாய் ஜலத்தைக்கொண்டு போய்ப் பாய்ச்

சலுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். இந்நதியும் இதன் கால்வாய்களும் படகுகள் போவதற்கு அனுகூலமாகின்றன. இந்த டெல்டா பிரதேசங்களிலுள்ள நிலங்களில் பலவித பயிர்கள் சாகுபடி செய்கின்றனர். பெஜவாடாவிற்கும் சமுத்திரத்திற்கும் உள்ள தூரம் 45 மைல். சென்னையிலிருந்து கீழ் கடற்கரையை அடுத்து கல்கத்தாவுக்குச் செல்லும் ரஸ்தா



வும், ரயில் பாதையும் இப்பிரதேசங்களின் வழியாய்ப் போகின்றன. கிருஷ்ணா அணைக்கட்டிற்குத் தெற்கில் சென்னபட்டணம் முதல் பக்கிங்ஹாம் என்னும் கால்வாய் நெல்லூர், குண்டூர் என்னும் ஜில்லாக்களின் வழியாய் பெஜவாடா வந்து சேர்கிறது.

1. குண்டூர் ஜில்லா

இது வியாபித்திருக்கும் இடத்தையும் இதன் எல்லைகளையும் படத்தில் கண்டுபிடி. இந்த ஜில்லாவின் மேல் பாகத்திற்கும் கீழ் பாகத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன ?

இந்த ஜில்லாவின் மேற்கிலுள்ள தாலுகாக்கள், காடுகளால் அடர்ந்த மலைப் பிரதேசம். அங்குள்ள குன்றுகள் கிழக்குத் தொடர்ச்சி மலையின் பாகங்களேயாகும். இவ்விடத்திலுள்ள பல்நாடும் தெற்கிலுள்ள ஓங்கவாலும் மாடுகளுக்குப் பேர்பெற்ற இடங்கள். இங்குள்ள மாடுகளைத்தான் நெல்லூர் மாடுகளென்று அழைப்பார்கள். டெல்டாவின் கீழ்பாகத்திலுள்ள தாலுகாக்கள் நெல் பயிரிடுவதற்குப் பிரசித்தி பெற்றவை. இங்குள்ள வயல்களுக்குக் கிருஷ்ணா நதிக் கால்வாய்களின் ஜலம் பாய்ந்து மிகவும் செழிப்பாய் இருக்கின்றன. மேலும் ஜில்லாவின் மத்திய பாகங்களில் கரிசல் நிலம் அதிகமாயிருப்பதால் பருத்தியும் புகையிலையும் விசேஷமாய்ப் பயிராகின்றன. முக்கியமான கைத்தொழில் துணி நெய்தல். இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 18,09,574. இதன் விஸ்தீரணம் சுமார் 5735 சதுர மைல்.

குண்டூர்:—இது ஜில்லாவின் முக்கிய பட்டணம். இங்கு ஒரு கலாசாலையும், பல உயர்தரப் பாடசாலைகளும் இருக்கின்றன. மேலும், பெண் வைத்தியசாலை ஒன்று மிஷன் சார்பாக வைத்து நடத்தப்படுகிறது. இங்கு பருத்தி வியாபாரம் விசேஷமாய் நடப்பதால், இவ்விடத்தில் பஞ்சை சுத்தி செய்து, நூற்கும் யந்திரங்களும், நெல் குத்தும் யந்திரங்களும் இருக்கின்றன. இந்த இடத்திற்கு வடக்கே பெஜவாடாவிலிருந்து ஒரு ரயில் பாதையும் தெனாலியிலிருந்து ஒரு கிளைப்

பாதையும் வந்து சேருகின்றன. இப்பட்டணம் வசிப்பதற்குத் தகுந்த இடம். இதற்கருகில் மங்களகிரி என்ற பேர் பெற்ற புண்ணிய ஸ்தலம் உண்டு. இங்கு ஒரு விஷ்ணு ஆலயம் இருக்கிறது.

தெனாலி:—இது அரிசிக்குப் பேர் பெற்ற இடம். இப் பெயர் கொண்ட தாலுகா முழுவதும் விளையும் நெல் எல்லா இடங்களுக்கும் இவ்வூரிலிருந்து அனுப்பப்படுகிறது. இங்கு நெல் குத்தும் பல யந்திரங்கள் உண்டு.

ஓங்கோல்:—இது ஜில்லாவின் தென் பாகத்திலுள்ள ஓர் முக்கிய பட்டணம். பெரிய ஜாதி மாடுகளுக்குப் பெயர் பெற்ற இடம். இங்கு மாட்டுச் சந்தை ஒன்று கூடுகிறது.

அமராவதி:—இது குண்டூருக்கு வடக்கில் இருக்கிறது. இதுதான் பழைய ஆந்திர தேசத்தின் தலைநகரம். இங்கு பல பழைய சின்னங்களும், பௌத்த ஸ்தூபிகளும் உண்டு.

2. கிருஷ்ணா ஜில்லா

முன்னால் கிருஷ்ணா ஜில்லா எதிலிருந்து எதுவரை வியாபித்திருந்தது? இப்பொழுது அதை எவ்விதம் பிரித்திருக்கிறார்கள்? இந்த ஜில்லாவின் மேற்கு எல்லை எது?

இந்த ஜில்லாவின் மேற்குப் பாகத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலை சிறு குன்றுகளாகத் தாழ்ந்திருக்கின்றது. இவ்விடத்தில் பூமி மேடாகவும், மற்ற இடங்களில் தாழ்ந்த சமவெளியாகவும் இருக்கிறது. இந்த ஜில்லாவில் மழை குறைவாயிருந்தபோதிலும், கால்வாய்களின் மூலமாய் நீர்ப்பாய்ச்சல் நடைபெறுவதால், இப்பாகம் மிகவும் செழிப்புற்று விளங்குகிறது. இந்த டெல்டா பிரதேசத்தில் நெல் ஏராளமாய் விளைகிறது. மேற்குப் பாகத்தில் பருத்தி விளைகிறது.

இந்த ஜில்லாவில் ஆடுமாடுகள் அதிகமாயுண்டு. முன் காலத்தில் பேர் பெற்ற கோல்கோண்டா வைரச் சுரங்கங்கள் இருந்தன. இங்கு முக்கியமான கைத்தொழில துணி நெய்தல். போக்கு வரவுச் சாதனங்களும் நன்கமைந்திருக்கின்றன. பெஜவாடா முக்கிய ரயில்கள் வந்து கூடுமிடத்திலிருக்கின்றது. இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 10,86,932. இதன் விஸ்தீரணம் சுமார் 5900 சதுர மைல்.

மசூலிப்பட்டணம்:—இது கடற்கரையருகில் இருக்கிறது. இதுதான் ஜில்லாவின் முக்கிய பட்டணம். முன்காலத்தில் இது பிரசித்திபெற்ற ஒரு துறைமுகமாயிருந்தது. 300 வருஷங்களுக்குமுன் ஆங்கிலேயர்கள் அவ்விடத்தில் தங்களுடைய முதல் வர்த்தகஸ்தலத்தை ஏற்படுத்தி யிருந்தனர். இந்தத் துறைமுகம் அதிக ஆழமில்லாதலால், கப்பல்கள் கரையோரங்களில் வருகிறதில்லை. இதன் வழியாய்க் கடப்பை கர்நூலிலிருந்து வரும் பஞ்சு மூட்டைகள் வெளிதேசங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இப்பட்டணம் பந்தர் சீட்டித்துணிகளுக்கும், ரத்தினக்கம்பளத்துக்கும் பேர் பெற்றது.

பெஜவாடா:—இது கிருஷ்ணா நதியின் கரையிலிருக்கிறது. ஒரு காலத்தில் சிறு கிராமமாயிருந்தது. நதியின் மண்ணினால் வரவர விசாலித்துக்கொண்டு தற்சமயம் பல காரணங்களினால் ஒரு பெரிய பட்டணமாகிவிட்டது. இது ஒரு முக்கிய வியாபாரஸ்தலம். இவ்விடத்தில் பல முக்கிய ரஸ்தாக்களும், ரயில்மார்க்கங்களும் கால்வாய்களும் வந்து கூடுகின்றன. மேலும் ஆற்றைக் கடக்க ஒரு பெரிய ரயில் பாலமும் கட்டப்பட்டிருக்கிறது. பெஜவாடா முக்கிய ரயில்வே ஜங்ஷன் ஆனதால், இங்கு ரயில்வே ஸ்டேஷன் மிகவும் பெரிதாய்க் கட்டப்பட்டிருக்கிறது. நாலாபக்கங்களிலும் இருந்து

சுமார் ஐந்து கிளைகள் இவ்விடத்தில் சந்திக்கின்றன. அவைகள் எவை என்று கண்டு பிடித்தெழுது? இங்கு கட்டிடத்துக்கு வேண்டிய கருங்கல்களும் கிடைக்கின்றன.

கோண்டபல்லி:—இது பெஜவாடாவிற்கு வடமேற்கிலிருக்கிறது. இவ்விடத்தில் பிரசித்தி பெற்ற மலைக்கோட்டை ஒன்று இருக்கிறது. இங்கு விளையாட்டுச் சாமான்கள் விசேஷமாய் உண்டு.

3. மேற்கு கோதாவரி ஜில்லா

இந்த ஜில்லா எவ்விதம் உண்டானது? இதன் எல்லைகள் யாவை? இதன் இயற்கை யமைப்பு எவ்விதம் இருக்கிறது?

இந்த ஜில்லாவின் வடமேற்குப் பாகத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைக்குன்றுகள் இருக்கின்றன. இது முழுவதும் கோதாவரி நதிக்கால்வாய்களின் பாசனத்தில் இருக்கிறது. மலைப்பிரதேசத்தில் ஜனநெருக்கமில்லை யெனினும், டெல்டாப் பிரதேசத்தில் ஜனநெருக்கம் அதிகம். கோதாவரி, கிருஷ்ணா நதிகளுக்கு மத்தியிலுள்ள தாழ்ந்த டெல்டாப் பிரதேசத்தில் கோல்லேரி என்னும் ஏரியிருக்கிறது. டெல்டாவிலுள்ள நன்செய் நிலங்களில் நெல் ஏராளமாய் விளைகிறது. இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 10,51,442. இதன் விஸ்தீரணம் 2200 சதுர மைல்.

ஏலூர்:—இரண்டு ஆறுகளுக்கு மத்தியில் முக்கிய ரயில் பாதையி லிருக்கிறது. ஜில்லாவின் பிரதான பட்டணம். இவ்விடம், துணிகளுக்கும், இரத்தினக் கம்பளங்களுக்கும் பேர்போனது. இங்கே பட்டுகள் ஏராளமாய் விற்கப்படுகின்றன. இப்பட்டணத்தில் நெல் குத்துவதற்கும், சணல்நார் செய்வதற்கும் தகுதியான பல இயந்திரசாலைக ளிருக்கின்றன.

நிடதவோல்:—இது ஒரு ரயில்வே ஸ்டேஷனும், வியாபாரஸ்தலமுமா யிருக்கிறது. நெல் குத்தும் இயந்திரங்கள் பல இங்கேயுண்டு. இவ்விடத்திலிருந்து புறப்படும் கால்வாய்களின் வழியாய் இந்த டெல்டாவின் விளைவு பொருள்கள் சுலபமாய் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

நரசப்பூர்:—இது கோதாவரி ஆற்றின் முகத்துவாரத்துக்கு அருகிலிருக்கிறது. வியாபாரம் மிகுதியாய் இங்கே நடைபெறும்.

பாலு கோல்லு:—இங்கு பிரதிவாரமும் காய்கறிகள், பழங்கள் முதலியன விற்கும் சந்தை ஒன்று கூடுகிறது.

பதினான்காம் அத்தியாயம்

கோதாவரி நதியும் அதன் பிரதேசமும்

இந்நதி அரபிக்கடலிலிருந்து கிழக்கே 50 மைலில் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது. இதன் உற்பத்தி ஸ்தானத்தில் ஒரு மண்டபமும் அதனுள் ஒரு பிம்பமும் இருக்கின்றன. இந்தப் பிம்பத்தின் வாயிலிருந்து ஜலம்கொஞ்சம் கொஞ்சமாக கொட்டிக்கொண்டே யிருக்கிறது. இதை இந்துக்கள் பெரிய புண்ணிய ஸ்தலமாகக் கொண்டாடுகின்றனர். இந்நதி பம்பாய் இராஜதானியில் 100 மைலும், ஹைதராபாத் ராஜ்யத்தில் 176 மைல் தென் கிழக்காயும் செல்லுகிறது. அதன் பின்பு, மத்திய மாகாணத்திற்கும், ஹைதராபாத்திற்கும் மத்தி எல்லையாகக் கிழக்குத் தொடர்ச்சி மலைவரை ஓடுகிறது. பிறகு இது அத்தொடரைத் துளைத்துக் கொண்டு சமவெளியில் பாய்கிறது. இதன் இரு கரைகளிலும் மலைகளும் காடுகளும் அடர்ந்திருக்கின்றன. சமவெளி

யில் இந்நதி மெதுவாக ஓடுகிறது. மேலும், இங்கு நதியின் அகலம் அதிகமாக இருப்பதால் மணல் மேடிட்டு வருஷந் தோறும் பூமி உயர்ந்துகொண்டே வருகின்றது. இவ்வித முண்டாகும் டெல்டாவில் அநேகம் செழிப்பான இடங்க ளிருக்கின்றன. இராஜ மஹேந்திர புரத்தைப் படத்தில் பார்.



இவ்விடத்தில் மூன்று மைல் நீளமுள்ள ஒரு பெரிய இருப் புப் பாலம் கட்டப்பட்டிருக்கிறது. இப்பட்டணத்திற்குக் கிழக்கே 5 மைல் தூரத்திலுள்ள தவளேசுவரமென்னு மிடத் தில் இந்நதி கௌதம கோதாவரி என்றும், வசிஷ்ட கோதா

வரி என்றும், இரு பிரிவாகப் பிரிகின்றது. இவ்விதம் பிரியுமிடத்தில் $2\frac{1}{4}$ மைல் நீளமான ஒரு அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறது. மேற்கூறிய அணைக்கட்டிலிருந்து மூன்று கால்வாய்கள் வெட்டி, ஜலத்தைப் பாய்ச்சலுக்கு உபயோகிக்கிறார்கள். கோதாவரிக் கால்வாய்களின் நீளம் சுமார் 2,000 மைல். இதில் 500 மைல் தூரம் வரை படகுகள் செல்லக் கூடியதாயிருக்கின்றன. இந்நதியின் மொத்த நீளம் 898 மைல். இதன் ஜலத்தால் சுமார் 10 லக்ஷம் ஏக்கர் நிலம் சாகுபடி செய்யப்படுகின்றது. இக்காலத்தில் கிழக்குக் கோதாவரி என்று சொல்லப்படும் ஜில்லா இந்நதிப்பாசனத்திலிருக்கிறது.

1. கிழக்குக் கோதாவரி ஜில்லா

இந்த ஜில்லாவின் வட பாகத்திலிருக்கும் மலைகள் யாவை? இங்கு இதற்குப் பெயர் என்ன? ஜில்லாவின் தென் பாகம் எப்படிப்பட்டது? கோதாவரி நதியின் ஓட்டம் இங்கு எவ்விதமிருக்கிறது?

கிழக்குத் தொடர்ச்சி மலையின் பாகமாகிய பாபிகோண்டா இந்த ஜில்லாவின் வடபாகத்தில் வியாபித்திருக்கிறது. இது மலைப்பிரதேசமாகவும் காடடர்ந்ததும், மலேரியா ஜுரப் பிரதேசமாகவும் இருப்பதால் ஜனத்தொகை மிகவும் குறைவு. இதன் தென்பாகம் ஒரு சமவெளியாயிருப்பதோடும் கூட செழிப்பான டெல்டாப் பிரதேசமாயிருக்கிறது. ஆகையால் இங்கு ஜனநெருக்கம் அதிகம். கோதாவரி நதியானது முதலில் மலையிலுள்ள ஒரு குறுகிய பள்ளத்தாக்கின் வழியாய் ஓடிப், பின் வர வர அகன்று, டெல்டாப் பிரதேசத்தில் சுமார் 6 மைல் அகலமாக இருக்கிறது. டெல்டா ஆரம்பமாகுமிடத்தில் பல அணைக்கட்டுகள் கட்டியிருக்கின்றனர்

சென்னையிலிருந்து வரும் முக்கிய ரயில்பாதை இதன் வழியாய்ச் சுமார் $1\frac{3}{4}$ மைல் அகலமுள்ள ஒரு பெரிய பாலத்தைக் கடந்து செல்லுகிறது.

இந்த ஜில்லாவில் நெல், கரும்பு, புகையிலை விசேஷமாய்ப் பயிரிடப்படுகின்றன. இங்கு வெல்லமும், சர்க்கரையும் செய்யப்படுகின்றன. இதன் ஜனத்தொகை 2,07,000. ஜில்லாவின் விஸ்தீரணம் சுமார் 3,700 சதுரமைல். பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமான ஏனும் என்னும் பட்டணம் இந்த ஜில்லாவின் டெல்டாப் பிரதேசத்திலிருக்கிறது.

காக்கிநாடா:—இது ஜில்லாவின் முக்கிய பட்டணம். ஜில்லாக் கலெக்டர் இங்கு வசிக்கிறார். இது டெல்டா பிரதேசத்தில் இருப்பதால் ஆழமான துறை முகமாய் ஏற்படவில்லை. இங்கு சமுத்திரத்திற்குள் இரும்புப் பாலமொன்று கட்டப்பட்டிருக்கிறது. அதன் வழியாய் இந்த ஜில்லாவில் விளையும் நெல்லும், புகையிலையும், சர்க்கரையும், கடப்பை, கர்நூல் முதலிய இடங்களிலிருந்து ரெயில் மார்க்கமாய் வரும் பஞ்சும் ஏற்றுமதியாகின்றன. இப்பட்டணம் பித்தாபுரம் ராஜாவின் சமஸ்தானத்திற்குள் இருக்கிறது. அங்கு அவர் ஒரு கலாசாலை ஏற்படுத்தி நடத்துகிறார். இப்பட்டணத்தில் ஒருவித மெல்லிய துணி நெய்கிறார்கள். மேலும் இவ்விடத்திற்கு சாமல் கோட்டையிலிருந்து ஒரு கிளை இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது.

ராஜமஹேந்திரபுரம்:—கோதாவரி நதிக்கரையிலிருக்கும் ஒரு ஆற்றுத் துறைமுகம். ஜில்லா நியாயஸ்தலம் இங்குதான் இருக்கிறது. இவ்விடத்திலிருந்து டெல்டா பிரதேசங்களோடு, கால்வாய்கள் மூலமாய்ப் போக்கு வரவு அதிகமாய் நடக்கின்றது. படகுகளில் வரும் சாமான்களில் அரிசி, தேங்காய்,

உப்பு, வாழைப்பழம், காய் கறிகள் முக்கியமானவை. இன்னும் மலைகளிலுள்ள மூங்கில்களையும், மரங்களையும் வெட்டி, தெப்பங்களாகக் கட்டி ஆற்றில் மிதக்கவிட்டு இப்பட்டணத்திற்குக் கொண்டு வருகின்றனர். இதையே இந்த ஜில்லாவின் முக்கிய ஸ்தலமாகக் கொண்டு வருகின்றனர். இதையே ஜில்லாவின் முக்கியஸ்தலமாகக் கருதி, துரைத்தனத்தார் போதனுமுறைக் கலாசாலையும், ஒரு கல்லூரியும் வைத்து நடத்தி வருகிறார்கள். இங்குள்ள சிறைச்சாலையின் கைதிகளால் ஜமக்காளம், பாதக்குறடு முதலியன செய்யப்படுகின்றன. இவ்விடத்திற்கருகில் கோதாவரியைக் கடக்க ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

தவளேஸ்வரம்:—இவ்விடத்தில் கோதாவரி நதி இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. இவ்விடத்தில் அணைக்கட்டுகளையும், பாசனக் கால்வாய்களையும் கவனிக்கும் இஞ்சினீர்கள் வசிக்கின்றனர்.

சாமல்கோட்டை:—இது ஒரு ரயில்வே ஜங்ஷன். இதிலிருந்து காக்கிநாடாவுக்கு ஒரு கிளை இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் ஒரு விவசாயப் பண்ணையிருக்கிறது. அதில் கரும்பு முக்கியமாய்ப் பயிரிடுகின்றனர். பாரி கம்பெனிக்காரர்கள் சர்க்கரை செய்யும் ஒரு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அதில் வெள்ளைச் சர்க்கரை செய்வதற்கான பல இயந்திரங்களிருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதில் வேலை செய்து ஜீவிக்கின்றனர்.

பத்திராசலம்:—இது ஒரு முக்கிய க்ஷேத்திரம். இங்கு ஸ்ரீராமநவமியன்று பல யாத்திரிகர்கள் போவதுண்டு. இவ்விடத்தில் காரீயம் அகப்படுகின்றது.

அமலாபுரம்:—இது காக்கிநாடாவுக்குப் பன்னிரண்டு மைல் தூரத்தில், கோதாவரி டெல்டாவின் மத்தியிலிருக்கிறது.

இராமச்சந்திரபுரம்:—இதுவும் டெல்டாவில் இருக்கிறது. இங்கு ஒரு உயர்தரப் பாடசாலை இருக்கிறது.

பதினைந்தாம் அத்தியாயம்

லாங்குல்யா, வம்சதாரை, ருஷிகுல்யா நதிகளும் அவைகளின் பாசனமும்

[சென்னை இராஜதானியானது வடக்கே செல்லச்செல்ல எவ்வித மிருக்கின்றதெனக் கவனி. வடபாகத்தில், அதாவது கோதாவரி டெல்டாவுக்கு வடக்கிலும், ஒரிஸாவுக்குத் தெற்கிலுமுள்ள பிரதேசம் எப்படியிருக்கிறது?]

நாம் படத்தில் பார்க்கும் இவ் வட பிரதேசத்தின் மேல் பாகம் மலைகளடர்ந்ததாயும், கீழ்பாகமாகிய கடற்கரையோரம் தாழ்ந்த சமவெளியாயு மிருக்கின்றது. மேலும் சமவெளியைவிட, மலைப்பிரதேசம் விஸ்தாரமுள்ளதாயு மிருக்கிறதைப் பார்க்கலாம். இங்கு வியாபித்திருக்கும் மலைகள் கிழக்குத் தொடர்ச்சி மலையின் பாகங்கள். இங்கு உற்பத்தியாகும் ஆறுகள் குறுகலாயும், வேகமுள்ளனவாயும் இருக்கின்றன.

லாங்குல்யா:—விசாகப்பட்டணத்தின் மலை நாட்டில் ஆரம்பித்து, தென் கிழக்காய்ச் சென்று, கஞ்சம், விசாகப் பட்டணம் ஜில்லாக்களுக்கு எல்லையாகி சமுத்திரத்தில் கலக்கிறது. இதன் நீளம் 115 மைல். இதன் முகத்துவாரத்தில் ஸ்ரீகாகுளம் என்னும் துறைமுகம் இருக்கின்றது.

வம்சதாரை:—இதுவும் விசாகப்பட்டணம் ஜில்லாவி லுள்ள மலையில் உற்பத்தியாகி, இதிலிருந்து கஞ்சம் ஜில்லா வுக்குள் புகுந்து வங்காளக்குடாக் கடலில் விழுகிறது. இந்நதி யின் நீளம் 145 மைல்.

ருஷிகுல்யா:—இது கஞ்சம் ஜில்லாவிலுள்ள மலைவரிசை களில் உற்பத்தியாகி ஜில்லாவினூடே சுமார் 100 மைல் தூரம் சென்று கடலில் விழுகிறது. இந்நதியில் ஒரு பெரிய அணை கட்டி, மஹா நதியின் ஜலத்தை இதற்குக் கொண்டுவந்திருக் கின்றனர். இதிலிருந்து இரண்டு கால்வாய்கள் வெட்டி ஜலத் தைச் சுற்றிலுமுள்ள பிரதேசங்கள் சாகுபடியாக உபயோகப் படுத்துகிறார்கள். சுமார் 142000 ஏக்கர் நிலங்கள் இவற்றால் பயிரிடப்படுவதாக நாம் அறியலாம். இவ்விடங்களில் கரும்பு மிகுதியாகப் பயிரிடப்படுகிற சமவெளிப் பிரதேசம் கடற்கரை யை அடுத்திருப்பதால் வாசம் செய்வதற்கேற்றதாக இருக் கிறது. ஆகையால் பெரிய பட்டணங்களும் இங்கு ஏற்பட் டிருக்கின்றன. கடற்கரையோரமாய் சென்னையிலிருந்து கல் கத்தாவுக்குப் போகும் ரயில்பாதை யிருக்கிறது. கடற்கரை யில் உப்பு எடுக்கிறார்கள். இந்தப் பிரதேசங்களில் பல ஜமீன் கள் இருக்கின்றன. கஞ்சம், விசாகப்பட்டணம் கோதாவரி முதலிய ஜில்லாக்களிலடங்கிய மலை நாட்டிற்கு ஏஜென்ஸி டிராக்ஸ் என்று பெயர்.

1. விசாகப்பட்டணம் ஜில்லா

[இந்த ஜில்லாவின் இயற்கை யமைப்பைப் படத்தில் கவனி. இதை எவ்விதமாகப் பிரிக்கலாம்? இதில் வியாபித் திருக்கும் மலைகள், ஆறுகள் எவை?]

இந்த ஜில்லாவில் மலைப் பிரதேசமும், சமவெளிப் பிர தேசமும் தனித்தனியே அமைந்திருக்கிறது. ஆகவே இரு

பாகங்களும் பல விஷயங்களில் வித்தியாசப்படுகிறது. இங்கு வியாபித்திருக்கும் கிழக்குத் தொடர்ச்சி மலையின் பாகங்களுக்கு பால கோண்டா, கோல்கோண்டா என்று பெயர். மேலும் கிழக்குத் தொடர்ச்சி மலையானது, கடலில் பிரவேசித்திருப்பதால், கப்பல்கள் வந்து தங்க, இயற்கையான துறைமுகம் அமைந்திருக்கிறது. கடற்கரைக் கருகில் வசிப்பதற்குத் தகுதியான பல இடங்களிருக்கின்றன. இந்த ஜில்லாவின் சமவெளிப் பிரதேசத்தில், நெல், கம்பு, புகையிலை, கரும்பு முதலிய தானியங்கள் விளைகின்றன. மலைகளிலுள்ள காடுகளில் வேங்கை, கருங்காலி முதலிய பெரிய மரங்களும், மூங்கிலும் உண்டாகின்றன. மலைப் பிரதேசத்தில் ஜன நெருக்கமில்லை. இந்த ஜில்லாவில் விஜய நகரம், போப்பிலி, ஜயபுரம் என்று மூன்று ஜமீன் நாடுகள் இருக்கின்றன. ஜில்லாவின் மொத்த ஜனத்தொகை 22,31,874. இதன் விஸ்தீரணம் சுமார் 4,600 சதுர மைல்.

விசாகப்பட்டணம்:—இதுவே ஜில்லாவின் முக்கிய ஸ்தலம். இது கடற்கரை யருகிலிருக்கிறது. இங்கு கப்பல்கள் வந்து தங்குவதற்குப் பல இயற்கைச் சாதனங்களமைந்திருப்பதால், வசதியான நல்ல துறைமுகம் ஒன்று கட்டியிருக்கின்றனர். இவ்விடத்தில் தந்தம், சந்தன மரம், மாட்டுக் கொம்பு முதலியவற்றால் பல விநோதப் பொருள்களும், சீப்பு, கத்திப்பிடி, பெட்டிகள் முதலியவைகளும் செய்கிறார்கள். இப்பட்டணத்தில் ஓர் உயர்தரக் கலாசாலையும், நட்சத்திரசாலையும், பல உத்தியோக ஸ்தலங்களுமிருக்கின்றன.

வால்தேர்:—இது விசாகப்பட்டணத்திற்கு 3 மைலுக்கு வடக்கே இருக்கிறது. இதிலிருந்து விசாகப்பட்டணத்திற்கு ஒரு கிளை இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது.

மேலும் இவ்விடத்தில் சென்னை தென் மஹாராஷ்டிர இருப்புப்பாதை, பங்காள—நாகபுரி இருப்புப் பாதையைச் சந்திக்கிறது. வால்தேர் குளிர்ச்சியான இடமாகையால் ஐரோப்பியர்கள் பலர் இங்கு வசிக்கின்றனர்.

சிம்மாசலம்: — இது விசாகப்பட்டணத்திற்கு 6 மைல் தூரத்திலிருக்கிறது. இங்குள்ள மலையின்மீது ஒரு பெரிய விஷ்ணு ஆலயம் இருக்கிறது. இதற்குப் பல யாத்திரிகர்கள் செல்கின்றனர் இம்மலைச்சரிவில் வாழைப்பழம், பலாப்பழம், அன்னாசிப்பழம், முதலியன விசேஷமாய் உண்டாகின்றன.

விஜய நகரம்:—இது இந்த ஜில்லாவிலுள்ள ஜமீன் நாட்டின் பிரதான பட்டணம். இங்கு அரசர் வசிக்கிறார். தெருக்களும் சாலைகளும், இங்கு வெகு அழகாக இருக்கும். விஜய நகரத்தில் பல நல்ல பாடசாலைகளும், வைத்திய சாலைகளும் இருக்கின்றன. ஆகவே, இது கல்விக்கும், வியாபாரத்திற்கும் பேர்பெற்ற இடமாய் விளங்குகிறது.

2. கஞ்சம் ஜில்லா

[கஞ்சம் ஜில்லாவின் இயற்கை யமைப்பைப் படத்தில் நன்றாய்க் கவனி. இந்த ஜில்லாவில் மலைகள் எங்கே எவ்விதம் இருக்கின்றன? இம்மலைகளின் பெயரென்ன? இந்த ஜில்லாவின் எல்லையைக் கண்டுபிடி? வடகோடியிலிருக்கும் ஏரி யாது?]

கிழக்குத் தொடர்ச்சி மலைத்தொடர் வடக்கிலிருந்து தெற்குமுகமாய் வியாபித்திருப்பதுடன், கடற்கரைக்குச் சமீபத்திலிருக்கின்றன. இவைகள் இந்த ஜில்லாவில் மலையமலை என்றழைக்கப்படுகின்றன. மலைகள் கடலையடுத்திருப்பதால் கடற்கரை சமவெளி மிகவும் குறுகலாயிருக்கிறது. இம்மலை நாடுகள் பெரும்பாலும் பயங்கரமான காட்டுப் பிரதேசமாய்

இருக்கின்றன. இங்கு வசிக்கும் ஜனங்கள் மலைச் சரிவிலுள்ள மரம் செடிகளை வெட்டி எரித்து, அவ்விடங்களில் பயிர் செய்து வருகின்றனர். மேலும் இங்கு பயங்கரமான காட்டு மிருகங்களும் பைஸன் என்றழைக்கப்படும் காட்டெருமைகளும் ஏராளமாயுண்டு. இன்னும் காடுகளில் வேங்கை, கருங்காலி முதலிய விலையுயர்ந்த மரங்கள் உண்டாகின்றன. இம்மலை நாடுகள்வசிக்க ஏற்றவையல்ல குளிர் காலத்தில் குளிர் மிகவும் ஜாஸ்தியாக இருக்கும். இவ்விடங்களில் கோடை காலத்தில் தான் மழையதிகமாய்ப் பெய்கிறது. இங்குள்ள ஆறுகள் காட்டாறுகள்போல் மிகவும் வேகமாக ஓடுகின்றன. இதற்குக் காரணம் என்ன? இவ்வாறுகளின் ஜலத்தை அணைகட்டித் திருப்பிப் பாய்ச்சலுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். இங்கிருக்கும் சில்க்கா ஏரியின் ஜலமும் பாய்ச்சலுக்கு உபயோகப்படுகிறது. இங்குநெல், கேழ்வரகு, மஞ்சள் முதலியவை விளைகிறது. இங்குபோக்குவரவு சாதனங்கள் சரியாய் ஏற்படவில்லை. ஆகையால் பிரயாணம் செய்வது மிகவும் கஷ்டம். விவசாயத்தைத் தவிர நெசவுத் தொழிலும் முக்கிய கைத்தொழிலாக இருக்கிறது. கடற்கரையில் உப்பும் எடுக்கிறார்கள். இந்த ஜில்லாவிலுள்ள ஓட்டிரர் என்னும் ஜாதியார் ஒரிசா பாஷை பேசுகிறார்கள். இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 18,35,562. இதன் விஸ்தீரணம் சுமார் சதுர மைல் 4,900.

முன்காலத்தில் கஞ்சம் இந்த ஜில்லாவின் தலைநகராயிருந்தது. இவ்விடத்தில் ஜுரம் விசேஷமாய் உண்டாகிறபடியால், பர்ஹாம்புரம் தற்காலம் முக்கிய பட்டணமாயிருக்கிறது. ஜில்லாவின் உத்தியோகசாலைகள் இங்கே யிருக்கின்றன. இங்கே ஒரு கலாசாலையும் இருக்கிறது. இது பட்டு

நெசவுக்குப் பேர்போன இடம். மேலும் இது முக்கிய ரயில் பாதையிலிருக்கிறது.

சத்திரபுரம்:—இது கடலோரமாயிருப்பதால் தேக சௌக்கியத்திற்கு ஏற்றதா யிருக்கிறது. இங்கே கலெக்டரும் போலீஸ் சூப்பிரிண்டென்றும் வசிக்கிறார்கள்.

ஸ்ரீகாகுளம்:—இது லாங்குல்யா நதி முகத்துவாரத்திற் கருகில் இருக்கிறது. இவ்விடம் நெசவுத் தொழிலுக்குப் பேர்பெற்றது. இது ரெயில் மார்க்கத்துக்கு 9 மைல் தூரத்தில் இருக்கிறது.

கலிங்கபட்டணம்: —வம்சதாரை நதி இதன் அருகில் விழுகிறது. இது ஒரு துறைமுகப்பட்டணம். மகம்மதிய அரசர்கள் இதை வெகு காலம் ஆண்டு வந்தார்கள். இங்கே அநேக பள்ளிவாசல்களும், வேறு பலவித கட்டடங்களும் இருக்கின்றன. இங்கு ஒரு குளம் இருக்கிறது.

ஆஸ்கா:—இது ருஷிகுல்யாவும், மக நதியும் சேரும் இடத்திலிருக்கிறது. இங்கு கரும்பு விசேஷமாய்ப் பயிராகிறது. இவ்விடத்தில் சர்க்கரை செய்கிறதற்குப் பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஜில்லாவில் பர்லக்கிமிடி என்ற ஒரு ஜமீன்நாடு இருக்கின்றது.

3. சென்னைப்பட்டணம் ஜில்லா

[இந்த இராஜதானியின் தலைநகரம் எது? இதை ஒரு தனி ஜில்லாவாகக் கருதக் காரணம் என்ன? இது இருக்குமிடத்தைப் படத்தில் கவனி. இதின் வழியாய் ஓடும் இரண்டு சிற்றாறுகள் எவை?]

சென்னைப்பட்டணம் இந்த இராஜதானியின் தலைநகரம். இது கடலோரமாய் ஒன்பது மைல் நீளமும், உள்நாட்டில்

மூன்றரை மைல் அகலமுள்ளதாயும் இருக்கிறது. இந்த இடம் ஆங்கிலேயர்க்கு 1639-ம் வருஷம் ஸ்ரீரங்கராயர் என்ற சந்திரகிரி அரசனிடமிருந்து கிடைத்தது. செயின்ட் ஜியார்ஜ் கோட்டை நகரத்தின் மத்தியில் கடற்கரையோரமாய் இருக்கிறது. இங்கு இராணுவ உத்தியோகசாலைகள் இருக்கின்றன. இந்த இராஜதானி முழுவதற்கும் சட்டங்களை ஏற்படுத்தும் சபை இங்குதான் கூடுகிறது.

சென்னை ஹைக்கோர்ட்டு.

மேற்கூறிய கோட்டைக்கு வடக்கில், ஜனநெருக்கமுள்ள ஒரு சதுர மைல் பரப்புள்ள ஒரு பட்டணமிருக்கிறது. இது நமது சக்கரவர்த்தியின் பெயரால் ஜியார்ஜ் டவுன் என்று அழைக்கப்படுகிறது. இங்கு நாணயச் சாலைகள், ஹைக்கோர்ட்டு, வர்த்தக சாலைகள், தீர்வை வசூலிக்கும் கஸ்டம்ஸ் ஹவுஸ், பல கடைத் தெருவுகள், கலெக்டராபீஸ், ஜெனரல் போஸ்ட் ஆபீஸ் முதலியன இருக்கின்றன. ஹைக்கோர்ட்டின் கோபுரங்களொன்றில் 166 அடி உயரத்தில் விளக்குக்கூண்டு

(Light house) ஒன்று இருக்கிறது. மேலும் பச்சயப்பன் காலேஜ், கிறிஸ்தியன் காலேஜ் என்னும் இரண்டு கலாசாலைகளும் இருக்கின்றன.

கோட்டைக்குத் தெற்கே கடலோரமாய் எம். ஏ., பி. ஏ., முதலிய பரீக்ஷைகளில் தேறினவர்களுக்குப் பட்டம் கொடுக்கும் செனெட் ஹவுஸும், பிரசிடென்ஸி காலேஜ், ரெவினியு போர்டு ஆபீஸ் முதலியனவும் இருக்கின்றன.

மேற்கூறியவைகளைத்தவிர, ஞாயம் (Law College), வைத்தியம் (Medical College), சித்திரம் (School of arts), முதலியவைகளைக் கற்பிக்கும் கலாசாலைகளும் நட்சத்திராபீஸும் (Observatory), ஜெனரல் ஆஸ்பத்திரியும் (General Hospital), இந்த இராஜதானியைச் சேர்ந்த பல முக்கிய ஆபீஸ்களும் இருக்கின்றன.

இந்தப் பட்டணத்தின் ஜனத்தொகை சுமார் 5,23,000. லக்ஷம் ஜனங்களுக்குமேலான ஜனத்தொகையுள்ள இடத்தை நகரம் என்றழைப்பார்கள். கல்கத்தா, பம்பாய் முதலிய நகரங்களுக் கடுத்தாற்போல் இது இந்தியாவிலுள்ள ஒரு பெரிய நகரம். இந்த நகரத்தின் காரியாதிகளைக் கவனித்துக்கொள்வதற்காக ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர பரிபாலன சபையொன்று ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. இது கார்ப்பரேஷன் என்றழைக்கப்படுகிறது. இச்சபையின் காரியஸ்தானம் ரிப்பன் பில்டிங் (Rippon Building). இவர்கள் ஜனங்களிடமிருந்து வரி வசூல் செய்து கவர்ன்மெண்டாருடைய உத்தரவை அநுசரித்து நகரவாசிகளின் போக்குவரத்திற்கான பாதைகள், இராக்காலத்தில் வெளிச்சத்திற்கான வசதிகள், ஜலாதார ஏற்பாடுகள், ஆரம்பக்கல்வி முதலியவைகளை கவ

7

னித்து வருகின்றனர். நகரத்தின் வீதிகளெங்கும் மின்சார விளக்குகள் ஏற்றியிருக்கின்றன. நகரமக்கள் மாலை வேளையை இனிதுபோக்க நகரத்தின்கண் ஆங்காங்கு அழகிய நந்தவனங்களும், கண்காட்சி சாலைகளும் அமையப்பெற்று பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவைகளில் பின் வருபவைகள் முக்கியமானவை. (1) பொதுஜனத் தோட்டம் அல்லது ராணித் தோட்டம் என்று அழைக்கப்படும், (பீபில்ஸ் பார்க்). இந்த தோட்டத்தினுள் மிருகக் காட்சி சாலையும், மூர்மார்க்கட்டும் இருக்கின்றன. (2) மியூசியம் (Museum) என்னும் பல பொருட்காட்சிச் சாலை. இதில் அருமையும் அழகும் வாய்ந்த பல அரிய பொருட்கள் சேகரித்து வைக்கப்பட்டு இருக்கின்றன. (3) பொடானிக்கல் கார்டென்ஸ் (Botanical gardens) இதில் கிடைப்பதற்குரிய பலவித மரம், செடி, கொடி முதலியவைகள் வளர்க்கப்படுகின்றன.

இந்நகரத்திற்கு வடமேற்கில் ஏழு மைல் தூரத்திலுள்ள புழலேரியிலிருந்து சுத்த ஜலம் குழாய்களின் மூலமாய் கொண்டுவரப்பட்டு உபயோகிக்கப்படுகிறது. இப்பட்டணத்தின் மூலமாய் ஓடும் கூவம் என்னும் சிறிய நதி, பட்டணத்து ஜலதாரையின் ஜலத்தை இழுத்துச் செல்வதற்கு உபயோகப்படுகிறது. கோடை காலத்தில் இதில் ஜலம் கிடைப்பதரிது. சில காலங்களில் இதில் படகுகளும் போவதுண்டு. இந்நகரத்திற்குத் தெற்கில் அடையாறு என்ற ஒரு சிறிய நதி ஓடுகிறது. இதிலும் ஜலப்பெருக்கு அதிகமில்லை. மேலும் பக்கிங்காம் கால்வாய் பட்டணத்தின் ஊடே தெற்கு வடக்காகச் செல்லுகிறது. இக்கால்வாயின் வழியாக சென்னை நகருக்கு வடக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் கிளிஞ்சல், விறகு முதலிய சாமான்கள் வருகின்றன.

சென்னைப்பட்டணம் இராஜதானியின் தலைநகரமாவதற்கும் இதை ஒரு தனி ஜில்லாவாகக் கொள்வதற்கும் பல காரணங்கள் இருக்கின்றன. இந்தப் பட்டணம் இராஜதானியின் மத்தியில் கடற்கரையை யடுத்திருப்பதால் நம் மாகாணத்தை மேல் பார்த்துவரும் கவர்னர் (Governer) இங்கிருந்து சுற்றியுள்ள ஜில்லாக்களுக்கு சுலபமாய் போய்வருவதற்கு வசதியாயிருக்கிறது. மேலும் இப்பட்டணத்தில் இராஜதானியிலுள்ள எல்லா ரயில் மார்க்கங்களும் இங்கிருந்து புறப்பட்டுச் செல்வதால் இப்பட்டினத்திலுள்ள தலைமை ஆபீசுகளிலிருந்து சமாச்சாரங்கள் ரெயில் வழியாயும், தந்தி மூலமாயும் இராஜதானி முழுமையிலுள்ள ஜில்லாக் கச்சேரிகளுக்கு இலகுவில் அனுப்பப்படுகின்றன. தவிரவும் உள்நாட்டுச் சாமான்கள் நாலாபக்கங்களிலிருந்து வந்து இத்துறைமுகத்தின் வழியாய் வெளிதேசங்களுக்கும், வெளிதேசத்து சாமான்கள் உள்நாடுகளுக்கும் போகின்றன. இப்பட்டணத்தில் துறைமுகம் இயற்கையில் ஏற்படாவிட்டாலும் மிகுதியான பணத்தைச் செலவுசெய்து சமுத்திரத்தில் வெகுதூரம் வரை சுவரைக் கட்டி கப்பல்கள் வந்து தங்குவதற்கான வசதிகள் ஏற்பட்டு இருக்கின்றன.

அதுவுமன்றி சென்னைப் பட்டணத்திலும் அதன் அருகாமையிலும் பலவித தொழிற்சாலைகளும் கடைவீதிகளும் உத்தியோகசாலைகளும் இருக்கின்றன. இந்நகரத்தின் பற்பல பாகங்களுக்கும் மின்சார வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் ஓடுவதால் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு வெகு சீக்கிரமாயும் சுலபமாயும் செல்லலாம். மேலும் தொழிற்சாலை, உத்தியோக சாலை முதலியவைகளில் வேலை செய்பவர்களில் பலரும், கலாசாலைகளில் கற்கும் மாணவர்களில் சிலரும் சென்னைக்கருகிலுள்ள வசதியான கிராமங்களில் வசித்துக்

கொண்டு, ரயில் மார்க்கமாய் சென்னைக்கு வந்துவிட்டுத் திரும்பவும் சாயங்காலம் வீடுபோய்ச் சேருகிறார்கள். இவ்வித பிரயாண வசதிக்காக சில ரெயில் வண்டிகள் மின்சார சக்தியினால் ஓடுகின்றன.

சென்னைக் கருகில் பக்கிங்ஹாம்மில், கர்னாடிக்மில் என்ற இரண்டு பெரிய பருத்தி இயந்திர சாலைகளும், பெரம்பூரில் ரயில்வே தொழிற் சாலையும் இன்னும் பற்பல இடங்களில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் அச்சு ஆபிசுகளும் ஏற்பட்டு இருக்கின்றன. இத்தொழிற்சாலைகளில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வேலைசெய்து வருகின்றனர்.

பெண்பாலர்கள் பிரத்தியேகமாய் உயர்தரக் கல்வி பயில்வதற்காக இரண்டு கலாசாலைகளும் பல கல்விச்சாலைகளும் வைத்திய சாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன.

சென்னை நகருக்குப்போக சமயம் கிடைத்தால் நாம் அவசியம் பார்க்கவேண்டிய இடங்கள் பல இருக்கின்றன. அவைகளில், மீன்காட்சி சாலை, பொருட்காட்சி சாலை, விக்டோரியா கைத்தொழிற்சாலை, ஹைகோர்ட் கட்டிடங்கள், துறைமுகம், கோட்டை முதன்மையானவைகள்.

பதினாறும் அத்தியாயம்

மேற்கு கடற்கரைப் பிரதேசமும், தென்கன்னடம், மலையாளம் ஜில்லாக்களும்

[இந்த இரண்டு ஜில்லாக்களும் வியாபித்திருக்கும் இடத்தைப் படத்தில் கவனி. இவைகள் வியாபித்திருக்கும் இடத்திலிருந்து நாம் அறிந்து கொள்ளும் முக்கிய விஷயங்களென்ன?

மேற்கு கடற்கரைப் பிரதேசத்திற்கும், கிழக்கு கடற்கரை பிரதேசத்திற்குமுள்ள வித்தியாசங்களைக் குறி.]

இக் கடற்கரை ஒரு நீளமான குறுகிய பிரதேசம். இது மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் அரபிக்கடலுக்கும் மத்தியில் இருக்கிறது. கடற்கரையை யடுத்துள்ள பாகம் கொஞ்சம் வெளியாக இருக்கிறது. மலைப்பிரதேசம் அதிகமாகவும், மலைகளை யடுத்துச் செல்லச் செல்ல தாழ்ந்த குன்றுகளும் அகன்ற பள்ளத்தாக்குகளுமாயு மிருக்கின்றன. இங்கு ஓடும் நதிகள் முதலில் அதிக வேகமாகவும், சமவெளிகளில் மெதுவாகவும் சென்று கடற்கரைக் கருகாமையில் உப்பங்கழிகளாக ஏற்படுகின்றன. உப்பங்கழிகள் எவ்வித முண்டாயிருக்கின்றன? மலையருவிகள் மலையிலிருந்து அடித்துக்கொண்டு வரும் மண்ணை கடலுக்குள் செலுத்துகின்றன. ஆனால் அலைகள் இந்த மண்ணைக் கரைப்புறம் தள்ளுகின்றன. இவ்விதம் ஒன்றுக்கொன்று மோதுவதினால் கடற்கரையோரமாய் மண் மேடுகள் உண்டாகின்றன. இப்படியுண்டாகும் மண்மேடுகளுக்கும், கடற்கரைக்கும் மத்தியில் கால்வாய்கள் போன்ற நீண்ட உப்பங்கழிகள் ஏற்படுகின்றன. சமுத்திர ஜலம் பெருகி வரும் சமயங்களில் இம் மண்மேடுகள் முழுகியும், வடியும்போது வெளியிலும் தெரியும். இக்காரணத்தினால் கடற்கரையோரமாய் கப்பல்கள் வருவதில்லை. இவ்வித உப்பங்கழிகள் சுமார் 100 மைல் தூரத்திற்குக் கரையோரமாய் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றின் மூலமாக வியாபாரப் போக்குவரவு நடைபெறுகின்றது. மேலும் படகுகள் இக்கழிகளின் வழியாய் சரக்குகளை ஏற்றிக்கொண்டு சமுத்திரத்தில் தங்கியிருக்கும் கப்பல்களுக்குக் கொண்டுபோகின்றன. கோச்சி துறைமுகத்தில் உப்பங்கழிகளெல்லாம் ஒன்று சேர்கின்றன. தவிரவும்,

இவ்வுப்பங்கழிகளை கள்ளிக்கோட்டையுடன் ஒன்று சேர்க்கக் கால்வாய் ஒன்று வெட்டப்பட்டிருக்கிறது.

இந்த ஜில்லாக்களில் செய்யப்படும் பயிர்கள் ஏறக்குறைய திருவாங்கூர், கொச்சி ராஜ்யங்களின் பயிரை ஒத்திருக்கின்றன. இப்பிரதேசத்தில் சூன், சூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் நல்ல மழை பெய்கிறது. ஆறுகளில் வெள்ளம் பெருகி ஓடும். நெல் ஏராளமாய் சாகுபடி செய்யப்படும். மழைத்தண்ணீர் வயல்களுக்குத் தானகப்பாய்ந்து கடைசியில் ஆறுகளில் விழுகின்றது. மலைச்சரிவுகளில், காப்பி, தேயிலைத் தோட்டங்களும், பள்ளத்தாக்குகளிலுள்ள தோட்டங்களில் மிளகு, ஜாதிக்காய், ஏலக்காய் முதலிய பல செடிகளும் உண்டாக்கப்படுகின்றன. தாழ்ந்த சமவெளிகளில் தென்னை, பலா, கமுகு முதலிய மரங்களும், உப்பங்கழிகளின் இருகரைகளிலும் தென்னை மரங்களும் மிகுதியாய் பயிர் செய்யப்படுகின்றன. மலைகளிலுள்ள அடர்ந்த காடுகளில், தேக்கு, மஞ்சக்கடம்பை மூங்கில் முதலிய மரங்கள் உண்டாகின்றன.

இப்பிரதேசத்திலுள்ள ஜனங்கள் பெரும்பான்மையோர் நிலத்தைப் பயிரிட்டு ஜீவிக்கின்றனர். இன்றும் பலர் தென்னை மர சம்பந்தமான பலவிதத் தொழில்கள், ஓடுகள் செய்தல், படகு ஓட்டல், மீன் பிடித்தல், நெசவுத்தொழில் முதலிய தொழில்களைச் செய்து வருகின்றனர்.

இந்த ஜில்லாக்கள் சென்னை இராஜதானியின் மற்ற பாகங்களிலிருந்து மலைகளால் பிரிக்கப்பட்டிருப்பதால் இங்கு வசிக்கும் ஜனங்களின் பழக்க வழக்கங்களும், பாஷையும் நடையுடை பாவனைகளும் பல விஷயங்களில் வேறு படுகின்றன. நம்பூதிரிப் பிராமணர்களில் மூத்த குமாரன் மாத்திரம் கலியாணம் செய்துகொண்டு குடும்ப சொத்தை யடையும் பாத்

தியதை உடையன். இதர பிராமணர்களுடைய வழக்கத்துக்கு மாறாகப் பெண்களில் பலர் வெகு நாள் வரையில் விவாகம் செய்து கொள்ளாமல் இருக்கிறார்கள். மேலும் நாயர்மாரில் ஸ்திரிகளுக்கு மிகக் கௌரவமுண்டு. மலையாளத்தில் ஒருவனுடைய சொத்து அவனுடைய மகனுக்குச் சேராமல் அவனுடைய மருமகனுக்கே சேரும். மேற்கு சமுத்திரத்திலும் முக்கியமாய் தென் கன்னடம் ஜில்லாவிலும் கிறிஸ்தவர்கள் அதிகமாயிருக்கிறார்கள்.

மலையாளம், தென் கன்னடம் ஜில்லாக்கள்

இவைகளுக்கு மேற்குக் கரைப் பிரதேசமென்று பெயர். இந்தியாவில் இதைப் பரசுராமர் க்ஷேத்திரம் எனக் கூறுவர். இது ஒரு குறுகிய பிரதேசம். இங்கே ஓடும் நதிகள் முதலில் வேகமாயும் வரவர மெதுவாகவும் ஓடும். கடற்கரைகளில் உப்பங்கழிகள் உண்டு. இவைகளின் மூலமாக வியாபாரப் போக்கு வரவு நடக்கின்றன. இவைகளைக் கள்ளிக்கோட்டையுடன் சேர்க்க ஒரு கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது. ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் கோடை மாதங்கள். இக் காலங்களில் மழை அதிகம். ஆறுகளில் வெள்ளம் ஓடும். தென்னை, பாக்கு, பலா முதலிய மரங்கள் உண்டு. உப்பங்கழிகளைச் சுற்றிலும் தென்னை மிகுதி. பயிர் நடுதலே ஜனங்களின் முக்கிய கைத்தொழில். சிலர் நெசவு, தென்னை சம்மந்தமான பல தொழில், ஓடு செய்தல், படகு ஓட்டல், மீன் பிடித்தல் முதலிய தொழில்கள் செய்கின்றனர்.

1. மலையாளம் ஜில்லா

முக்கிய பட்டணம் கள்ளிக்கோட்டை அல்லது கோழிக்கோடு. நெசவு, ஓடு செய்தல், சவுக்காரம் செய்தல், மரவேலை, மீன் உலர்த்தல் முதலிய கைத்தொழில்கள் உண்டு. நெல்,

கொப்பரை, இஞ்சி, மரம் முதலியவை ஏற்றுமதியாகும். இங்குள்ள முக்கிய நதிகள் பொன்னானி, வெய்யூர் என்பன. இந்த ஜில்லாவின் நிலம் ஈரமானபோதிலும் சுகத்திற்கு ஏற்றது ஜூன் முதல் செப்டம்பர் வரை மழை அதிகம்; பெப்ருவரி முதல் ஜூன் வரை ஜுரம் வருவதுண்டு. இங்கு வருஷத்தில் சராசரி 116 அங்குல மழை பெய்யும். இங்கு பஞ்சம் கிடையாது. கள்ளிக்கோட்டையிலும் கண்ணனூரிலும் நெசவு அதிகம். இதன் ஜனத்தொகை 31 லக்ஷம். முக்கால் பங்கு இந்துக்கள் மற்றவர் மகம்மதியர். இவர்களுக்கு மாப்பிள்ளைகள் எனப்பெயர். பஞ்சமகுலத்தாரை தீயர் என்பார்கள். இங்கு மூத்த குமாரன் மட்டும் கலியாணம் செய்து சொத்து பெறலாம். மற்றவர்களுக்கு இப்பாத்தியதை கிடையாது. பெண்களில் சிலர் ஆயுள் பூராவும் மணம் செய்வதே கிடையாது. நாயர்மாரில் ஸ்திரிகளுக்கு கௌரவம் அதிகம். இங்கு ஒருவரின் சொத்து அவன் பிள்ளைக்கல்ல, சகோதரியின் பிள்ளைக்கே உரியது. ஹிந்துக்கள் உச்சியில் குடுமிவைத்து நெற்றியில் தொங்க விடுவார்கள். இங்கு வழங்கும் பாஷை மலையாளம். கள்ளிக்கோட்டைக்கு வடக்கிலுள்ள தலைச்சேரியில் ஜில்லா ஜட்ஜ் வசிக்கிறார். கண்ணனூர் சிறந்த ராணுவஸ்தலம். உள்நாட்டில் பாலக்காடு ஒரு பெரிய பட்டணம். பிரிட்டிஷ் கொச்சி ஒரு துறைமுகப் பட்டணம்.

2. தென்கன்னடம் ஜில்லா

விஸ்தீரணம் 4021 சதுர மைல். முக்கிய நதி நேத்திராவதி. இங்கும் கழிகள் அதிகம். பங்குனி, சித்திரை, வைகாசியில் வெயில் அதிகம். கோடையில் மழை அதிகம், நெல் அதிகம், கடற்கரைகளில் தென்னந்தோப்புகள் உண்டு. நேத்திரா நதி

யின் களிமண் ஓடு செய்ய உபயோகப்படுகிறது. மங்களூரி லும், உடுப்பியிலும், ஓடு செய்தல் முக்கியம். அமந்தீவித்தீவில் தேங்காய் நாரினுல் வேலை செய்கிருர்கள். மங்களூர் ஒரு துறைமுகப் பட்டணம். இங்கு கிறிஸ்தவர்கள் அதிகம். இதன் ஜனத்தொகை $12\frac{1}{2}$ லக்ஷம். மங்களூரில் தென் இந்திய இருப்புப்பாதை முடிகிறது. உடுப்பி கிருஷ்ணர் கோவிலுக்குப் பேர்போனது. குந்தாபுரம் சப்கலெக்டர் வசிக்குமிடம்.

3. அஞ்சேங்கோ ஜில்லா

அஞ்சேங்கோ என்பது அரபிக்கடலுக்கும், உப்பங்கழி களுக்கும் நடுவிலுள்ள ஒரு குறுகலான இடம். இதன் விஸ் தீரணம் 276 சதுர மைல். இந்த ஜில்லா முன்னே மலையாளம் ஜில்லாவின் ஒரு பாகமாயிருந்தது. தற்சமயம் இந்த ஜில்லா வில் அஞ்சேங்கோவும், தங்கச்சேரியும், கொல்லத்திலிருந்து செங்கோட்டைக்குச் செல்லும் இருப்புப்பாதையும் அடங்கி யிருக்கின்றன. முன் காலத்தில் இது சரித்திர பிரசித்திப் பெற்ற ஓர் இடம். ஆனுல் இப்பொழுது அங்குள்ள விசேஷம் ஒன்றுமில்லை. 18 மைல் தூரம் தெரியக்கூடிய ஒரு தீபஸ்தம்ப மும், கோட்டையின் பாழடைந்த சுவர்களுமே பார்க்கத் தகுந்தனவாம். இங்கு தென்னை மரம் விசேஷம்.

திருவாங்கூரிலுள்ள ரெஸிடெண்ட் இந்த ஜில்லாவின் கலெக்டர். இங்குள்ள பாடசாலைகளை திருநெல்வேலி ஜில்லாவி லுள்ள கல்வி அதிகாரி மேல் பார்த்து வருகிருர். இங்கு சுமார் 6000 ஜனங்கள் வசிக்கிருர். இதில் பெரும்பாலர் ரோமன் கத் தோலிக் கிறிஸ்தவர்கள். பேசும் பாஷை மலையாளம். முக்கிய கைத்தொழில் கயிறு, நூல் திரித்தல்; இன்னும் பலர் மீன் பிடித்து ஜீவிக்கிருர்கள்.

தங்கச்சேரி:—அஞ்செங்கோவுக்கு வடக்கே 24 மைல் தூரத்தில் ஒரு குன்றின்மேலிருக்கிறது. இதன் விஸ்தீரணம் 100 சதுர மைல். இதை திருவாங்கூரிலுள்ள கொல்லம் என்னும் பட்டணத்தின் ஓர் பகுதி என்று கருதுகிறார்கள். இங்கு தென்னைமரம் விசேஷம்.

பதினேழாம் அத்தியாயம்

சுதேச இராஜ்ஜியங்கள்.

மேற்கிலுள்ள திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை முதலிய நாடுகளும், வடக்கிலுள்ள மைசூர், சாந்தூர், குடகு, பங்கனபல்லி முதலிய நாடுகளும் ஆங்கிலேய அரசாட்சிக் குட்பட்ட சுதேச இராஜ்யங்களாகும். சென்னை இராஜதானியிலுள்ள இன்னும் சில பாகங்கள் ஜமீன்களின் ஆதினத்திற்குளிருக்கின்றன. ஜமீன்கள் குடிகளிடம் வரி வசூல் செய்யமட்டும் அதிகாரம் பெற்றிருக்கின்றனர். ஆனால், சுதேச மன்னர்களோ தங்கள் நாட்டின் காரியாதிகளைத் தாங்களே மேல் பார்த்து குடிகளுக்கு வேண்டிய சௌகரியங்களைத் தாங்களே செய்து, சண்டை சச்சரவு இன்றி அரசாளும் பாத்தியதையுடைவர்கள். எனினும் இவர்கள் நாட்டிலும் ஆங்கிலேய பிரதிநிதி ஒருவரை நியமிப்பதுண்டு. இவ்வித பிரதிநிதிகளுக்கு ரேஸிடேண்ட் என்றும், போலிடிக்கல் ஏஜண்டு என்றும் பெயர். இவர்கள் ஆங்கிலப் பிரதிநிதிகளாக சுதேச மன்னர்களுக்கு அரசாட்சி முறையில் வேண்டிய ஒத்தாசை செய்து வருவார்கள்.

1. திருவாங்கூர்

இந்திய தீபகற்பத்தின் தென்மேற்கிலிருப்பது திருவாங்கூர். இந்த இராஜ்ஜியத்தின் விஸ்தீரணம் 7129 சதுர மைல்.

இதன் ஜனத்தொகை ஏறக்குறைய 37,00,000. இங்கு சீரியன் கிறிஸ்தவர்களதிகம். இவ்விராஜ்ஜியங்கள் பண்டைக்காலத்தி லேயே மிகவும் மேன்மைபெற்று விளங்கிவந்ததது. இப்போது இதனைப் பரிபாலித்து வருபவர் ஸ்ரீ சித்திரைத் திருநாள் மகா ராஜா. இவருக்கு உதவியாக திவான் என்ற பட்டப் பெய ருடைய ஒரு பிரதம மந்திரியும், ஆலோசனை சபையுமுண்டு. இந்த இராஜ்ஜியத்தின் மலைகள் சில இடங்களில் 8,000 அடி மட்டும் உயர்ந்திருக்கின்றன. ஆனைமுடி என்பது இதிலுள்ள உயர்ந்த சிகரம். இங்கு உப்பங்கழிகள் அதிகம். இவைகளை கால்வாய் வெட்டி ஒன்றோடொன்று சேர்த்து கொச்சிவரை படகுகள் போக வேண்டிய சௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டு யிருக்கின்றன. தென்னந் தோப்புகள் மிக அதிகம். தந்தத்தி னால் சித்திர வேலைகள் பற்பல இடங்களில் நடைபெற்று வரு கிறது. காடுகளில் விலையுயர்ந்த மரங்கள் கிடைக்கும். இவ் விராஜ்ஜியம் இப்போது நவநாகரிகத்தில் சிறந்து விளங்குகிறது. இதன் தலைநகர் திருவனந்தபுரம். இந்நகரில் வீதிகள் மிகவும் நன்றாகவும் நீளமாகவும் அமையப்பெற்றிருக்கின்றன. இங் குள்ள கோட்டைக்குள் மகா ராஜாவும் அவருடைய குடும் பத்தாரும் வசித்து வருகின்றனர். ஸ்ரீ பத்மநாப சுவாமி கோவில் இந்நகரிலிருக்கிறது. இக்கோவிலில் ஆறு வருஷத் திற்கு ஒருலக்ஷதீப உற்சவம் நடைபெறும். மேலும் மகாராஜா கல்லூரியும், சட்டக் கல்லூரியும் (Law college), இன்னும் பல கலாசாலைகளும் இருக்கின்றன. இவ்விராஜதானியில் பெண் மக்கள் முன்னேற்ற மடைந்துள்ள நாடு இது ஒன்றே!

மியூஸியம் என்னும் பொருட் காட்சி சாலையும், மிருக காட்சி சாலையும் இங்கு பார்க்கத் தகுந்தவைகள்.

கோல்லம்:—இது ராஜ்ஜியத்தின் துறைமுகப்பட்டணம். கயிறு திரிக்கும் யந்திரங்கள் பல இருக்கின்றன. பட்டணத்திலிருந்து வரும் இருப்புப்பாதை இதன் வழியாகச் சென்று திருவனந்தபுரம் சேர்கிறது.

ஆலப்பிழை:—இங்கு உப்பங்கழிகள் அதிகம். இங்கிருந்து கொச்சிக்கும், கொல்லத்திற்கும், உப்பங்கழி மூலமாகப் போய் வரலாம்.

கோட்டயம்:—இங்கு சீரியன் கிறிஸ்தவர்கள் மிகுதியாய் வசிக்கிறார்கள்.

நெய்யூர்:—இங்குள்ள மிஷின் வைத்தியசாலை மிகவும் பிரசித்திப் பெற்றது.

நாகர் கோவில்:—இவ்விடம் கிறிஸ்தவர்கள் அதிகம்.

2. கோச்சி

இவ்விராஜ்ஜியம் ஓர் இராஜாவால் ஆளப்பட்டு வருகிறது. இயற்கை அமைப்பிலும், விளை பொருட்களிலும் திருவாங்கூரை ஒத்திருக்கிறது.

போன்னுனி, பேரிய ஆறு முதலியவைகள் இவ் விராஜ்ஜியத்தின் முக்கிய நதிகள். இதன் மூலமாக அரிசி, கயிறு, ரப்பர் கொப்பரை முதலியவைகள் மற்றும் இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இவ்விராஜ்ஜியத்தின் விஸ்தீரணம் 136 சதுர மைல். ஜனத்தொகை $9\frac{1}{2}$ லக்ஷம். திருவாங்கூரிலிருக்கும் பிரிட்டிஷ் ரெஸிடெண்டே அதன் பொலிட்டிகல் ஏஜண்டு. இவ்விடத்தின் முக்கிய பயிர் நெல். கிறிஸ்தவர்கள் ஏராளமாய் வசிக்கிறார்கள். இதன் தலைநகரம் எரணகுளம். இதில் ஒரு வித்தியாசாலையும் இன்னும் பல கல்லூரிகளுமிருக்கின்றன. இங்கிருந்து

6 மைல் தூரத்திலிருக்கும் திருப்பூந்துரையில் இராஜா வசிக்கிறூர். திருச்சூர் வடக்கே உள்ள பட்டணங்களில் பெரிது. இதற்கும், கொச்சி பாலக்காட்டுக்கும் வியாபாரம் நடக்கிறது.

3. புதுக்கோட்டை

இது தஞ்சாவூர், திருச்சிருப்பள்ளி, மதுரை இராஜ்ஜியங்களால் சூழப்பட்டு யிருக்கிறது. இந்த இராஜ்ஜியத்தின் விஸ்தீரணம் 1148 சதுரமைல். ஜனத்தொகை சுமார் 4,12,800. திருச்சிருப்பள்ளி கலெக்டரே இவ்விராஜ்ஜியத்தின் பொலிட்டிகல் ஏஜண்டு. பிரதான நகரமாகிய புதுக்கோட்டையில் தான் இராஜா வசிக்கிறூர். இவருக்கு தொண்டைமான் என்ற குடும்பப் பெயர் உண்டு. திருவாங்கூரைப் போல் இராஜாவுக்கு உதவியாக திவானும், பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆலோசனை சபையும் இருக்கிறது. இங்கு ஒரு காலேஜும் இருக்கிறது. இத்தேசத்தில் சம பூமி நிலம் அதிகம். இதில் நெல்லும் புன்செய் தானியங்களும் அதிகமாய் விளைகின்றன.

4. மைசூர்

இவ்விராஜ்ஜியம் தட்சண பீடபூமியின் தென்பாகத்தில் இருக்கிறது. இது விஸ்தீரணத்தில் இலங்கை தீவைக் காட்டிலும் பெரியதாய் சுமார் 29,400 சதுர மைல் உடைத்தாயிருக்கிறது. ஜனத்தொகை சுமார் 58 லக்ஷம். இதை மலைநாடென்றும் மைதானமென்றும் இருபிரிவுகளாகப் பிரிக்கலாம். மலைநாட்டில் காடுகள் அடர்ந்திருக்கின்றன. மேலும் மழை அதிகம். மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள உயர்ந்த சிகரங்கள் இதில் அமைந்திருக்கின்றன. கிழக்குத் தொடர்ச்சி மலையின் உயர்ந்த பாகமாகிய பிளிகிரிரங்கன் என்னும் தொடர் இதில் வந்து சேருகிறது.

துங்கபத்திரா நதி இந்நாட்டின் வடபாகத்தை நீர்ப்பாய்ச்சுகின்றன. வடபெண்ணை, தென்பெண்ணை பாலாறு இந்த இராஜ்ஜியத்தில் உற்பத்தியாகின்றன.

மைதான வெளியில் ஆங்காங்கு அமைந்துள்ள கற்பாறைகளுக்கு துர்க்கங்கள் என்று பெயர். பண்டைய காலத்தில் இத்துர்க்கங்களின்மீது பற்பல கோட்டைகளிருந்தன. இவைகளின் முக்கியமானவை நந்தித்துருக்கம், சாவன்துருக்கம், சித்திரதுருக்கம். இந்தப் பாகத்தில் செழிப்பு மிகவும் குறைவு. ஆகையினால் ஆடு மாடுகள் வைத்து ஜீவனம் செய்யும் சில ஜனங்கள் இவ்விடம் வசிக்கிறார்கள். இந்த இராஜ்ஜியத்தில் ஏரிகள் மிகவும் அதிகம். இவற்றுள் பெரிது மாரிக்கணவாய்.

சென்னை இராஜதானியிலுள்ள மற்ற சமவெளிப் பிரதேசத்தைக் காட்டிலும் மைசூர் மிகவும் குளிர்ச்சியாயிருக்கிறது. இரண்டு பருவக் காற்றுகள் இவ்விராஜ்ஜியத்துக்கு மழையைக் கொண்டுவருகின்றன. முன் கூறியபடி மலையான மேற்குப் பாகத்தில் மழை அதிகமாய்ப் பெய்கிறது. இதன் முக்கிய விளைபொருட்கள் தினை, கரும்பு, நெல் முதலியவைகளே. சிற்சில இடங்களில் பருத்தி பயிராகின்றன. மலைச்சாரலில் காப்பிக்கொட்டை பயிராகின்றன. கோலார் ஜில்லாவில், தங்கக்கேணிகள் இருக்கின்றன. இதன் மூலமாய் இராஜ்ஜியத்திற்கு வரும்படி அதிகம். பட்டுநூல் தொழிலும் பற்பல இடங்களில் நடந்துவருகின்றன. இதைத்தவிர கம்பளி நெய்யும் ஆலைகளும் தோல்பதனிடும் கிடங்குகளும், மாவரைக்கும் ஆலைகளும் சந்தனத் தைலம் செய்யும் ஆலைகளும் பல இருக்கின்றன.